www.padippakam.com


# தொழிலாளர்பாதை

இலக்கம் 16 19.8.1996 தமிழில் வெளிவரும் ஒரே ஒரு சோசலிசப் பத்திரிகை


# இனவாதயுத்தத்தினை தோற்கடிக்க சோசலிச வேலைத்திட்டத்தினை நோக்கி முன்னேறு.

முல்லைத்தீவு இராணுவமுகாமை புலிகள் தாக்கி அழித்ததன் ஒரு கிழமையின் பின்னர் சென்ற ஆடிமாதம் 26ம் திகதியிலிருந்து கிளிநொச்சியைக் கைப்பற்றும் நோக்கில் ஆனையிறவு இராணுவமுகாமிலிருந்து சிறீலங்கா அரசபடைகளினால் இராணுவ முற்றுகையொன்று மேற்கொள்ளப்படுகின்றது. மக்கள்முன்னணி அரசாங்கத்தின் இந்த புதிய இராணுவ. காட்டுமிராண்டித்தனமானது அதனது இனவாத யுத்தத்தின் கொடூரத் தன்மையை இன்னுமொருபடி தீவிரமாக்குகின்றது. யுத்தம் தொடங்கிய சில தினங்களுக்குள் 200,000 ற்கும் மேற்பட்ட மக்கள் கிளிநொச்சிப் பகுதியிலிருந்து அகதிகளாக வெளியேறியுள்ளனர். இவர்களில் பெரும்பான்மையோர் காடுகளிலும் தெருவோரங்களிலும் தங்கியிருக்கின்றனர். கிளிநொச்சிப் பிரதேசத்தில் அகதிகள் பராமரிப்பு சமூகசேவைகள் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட சர்வதேச உதவி நிறுவனங்கள் இந்தப் பிரதேசத்திலிருந்து முற்றாக வெளியேறியுள்ளன. மருத்துவ மனைகள் மூடப்பட்டு நோயாளிகளும் மருத்துவர்களும் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

யுத்தம் தொடங்கிய தினத்திலிருந்து வவுனியாவிலிருந்து உணவுப்பொருட்கள் கிளிநொச்சி யாழ்குடாநாட்டிற்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு அரசாங்கம் தடைவிதித்துள்ளது. இதன் மூலம் அகதிகளாகவெளியேறிய 200,000ற்கும் மேற்பட்ட மக்களை திட்டமிட்டு பட்டினி போடுவதற்கான நிலைமைகளை அரசு உருவாக்கியுள்ளது. இந்த பட்டினி போடுதலின் மூலம் பொதுஜனமுன்னணி அரசாங்கம் கிளிநொச்சி பிரதேச மக்களை புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறி வன்னிப் பிரதேசத்தில் தனது கட்டுப்பாட்டிற்குள் வரும்படி நிர்ப்பந்திக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த மக்களை ஆயுத முனையில் அடக்கியொடுக்குவதன் மூலம் தங்களுக்கு ஒரு "மக்கள் தளம்" அமைக்க முனைகின்றனர்.

தமிழ் தொழிலாளர்–ஒடுக்கப்பட்ட மகக்ள் முதலாளித்துவத்தின் இந்த இரண்டு கன்னைகளினதும் கபடத்தனமான பிரச்சாரங்களின் பின்னே இழுபட்டுச் செல்ல வேண்டாம் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அறிவுறுத்துகிறது. யுத்தத்தின் இந்த கொடூரமான நிலைமைகளிலும் இனவாத யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவது என்பதும் அமைதியை நிலைநாட்டுவது என்பதும் 2ம் உலகயுத்தத்தின் பின்னர் இந்திய உபகண்டம் பூராவும் வெடித்தெழுந்த புரட்சிகர எழுச்சிகள் யாவற்றையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் இந்திய இலங்கை முதலாளிகளோடும் ஸ்டாலினிஸ்டுகளோடும் கூடி உருவாக்கிய மதவாத இனவாத வம்பு அரசுகளை ஒரு சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர்களும் ஒடுக்கப்பட்ட மக்களும் இணைந்து தூக்கியெறிவதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும். இது தவிர்ந்த குறுக்குவழி எதுவும் கிடையாது.

### யுத்தத்தின் பின்னணி

இந்த யுத்தத்தின் மூலவேர்கள் நாடுகடந்த கூட்டுநிறுவனங்களின் மலிந்த கூலியுழைப்பிற்கான நிலைமைகளை சிருஷ்டிப்பதையும் அதனைப் பாதுகாக்கும் தீவில் உள்ள முதலாளிவர்க்கத்தின் நலனை உறுதிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. வடக்கில் தமிழ்மக்கள் மீதான இனவாத யுத்தத்தை தீவிரமாக்கும் அதேசமயத்தில் தெற்கில் தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்கள் மீதான தாக்குதல்கள் கூர்மைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த யுத்தத்திற்கு எதிராக தென்னிலங்கையில் வளர்ச்சியடைந்துவரும் தொழிலாள–ஒடுக்கப்படும் மக்களின் எழுச்சியினை அடக்கியொடுக்கும் முயற்சியில் மக்கள் முன்னணி அரசாங்கம் இறங்கியுள்ளது. தொழிலாளவர்க்கத்தின் சுயாதீனமான தலையீடு தொடர்பாக இலங்கையின் முதலாளித்துவ வர்க்கத்தினருக்கு இருக்கும் மரணபயத்தினை தோட்டத் தொழிலாளர்களினதும் மின்சாரசபைத் தொழிலாளர்–களதும் வேலைநிறுத்தங்களிலும் காணமுடிந்தது. மின்சாரசபைத் தொழிலாளர்களது வேலைநிறுத்தத்தினை "நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு ஆபத்து" "பொருளாதாரத்தின் மீதான பாரிய தாக்குதல்" என்ற கோசங்களின் கீழ் மக்கள் முன்னணி அரசாங்கம் **"Operation Shock"** என்ற இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டதன் மூலம் தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் உதவியுடன் ஒரு முடிவிற்கு கொண்டுவந்தது. இந்த வேலைநிறுத்தம் முடிவிற்கு வருகையில் மக்கள் முன்னணி அரசாங்கத்தின்

[illegible]ம் பக்கம் பார்க்க



*பிரட்போட்டில் புலிகளின் தாக்குதலிற்கெதிரான பிரச்சாரம்.*

# புலிகளின் தாக்குதலிற்கு எதிரான சர்வதேசப் பிரச்சாரம்

தமிழீழ விடுதலைப்புலிகள் கடந்த மார்ச் மே மாதங்களில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அங்கத்தவர்கள் மீது காடைத்தனமான தாக்குதலை மேற்கொண்டனர். மார்ச் 12ம் திகதி பிரான்சின் பாரிஸ் நகரத்தில் "தொழிலாளர்பாதை" பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் அங்கத்தவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளினால் தாக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து ஜேர்மன் தொழிற்சங்க சம்மேளனத்தினால் டுசில்டோவ் நகரில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மே தின ஊர்வலத்தில் கலந்துகொண்ட எமது அங்கத்தவர்களும் நான்காவது அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஜேர்மன் பிரிவான சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் **(Bund Sozialistische Arbeiter)** அங்கத்தவர்களும் தமிழீழ விடுதலைப்புலிகளினால் தாக்கப்பட்டனர். இந்த தாக்குதலின் போது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அங்கத்தவர்களை மோசமான பாதிப்புக்களிலிருந்து பாதுகாக்க முடிந்தது சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் அங்கத்தவர்களினதும் ஜேர்மன் அச்சுத் தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தின் **(IG Median)** அங்கத்தவர்களினதும் தலையீட்டினால் மட்டுமேயாகும்.

ஐரோப்பாவில் "தொழிலாளர்பாதை" பத்திரிகையை விநியோகம் செய்வதனை நிறுத்துவதற்கு புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் அங்கத்தவர்கள் மீது உடல் ரீதியான தாக்குதல்களை மேற்கொள்ளுவதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகள் முயல்கின்றனர்.

இதற்கான அடித்தளமான காரணம் உ
இலங்கையிலும் தமிழ் சிங்கள ெ
புலிகளது வேலைத்திட்டம் உட்பட்ட
தேசியவாத வேலைத்திட்டத்துக்கும்
புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தினால் பிரதி
சோசலிச முன்னோக்கு ஒன்றினை
திரும்பியிருப்பதேயாகும்.

இதன் மூலம் கடந்த காலங்க
விடுதலைப்புலிகள் தமிழ் ஒடுக்கப்பட்ட
வைத்திருந்த அரசியல் ஆளுமை சி
ஏற்பட்ட இவர்களது அரசியல்
வெளிப்பாடுதான் இந்த தாக்குதல்களாகு

நான்காவது அகிலத்தின் அனைத்துல
தாக்குதல்களுக்கும் பயமுறுத்தல்களுக்கு
மறுத்ததுடன் புரட்சிக்கம்யூனிஸ்ட்
வெளிநாட்டுக் கிளையின் அங்கத்தவர்க
உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு
தொழிலாளர்வர்க்கத்தினுள் ஆரம்பித்தது.

தமிழீழ விடுதலைப்புலிகளின்
கண்டிக்குமாறு அனைத்துலகக்
வெளியிடப்பட்ட அறிக்கை ப
பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை
குழுவின் சர்வதேசப் பத்திரிகைகளில்
இத் தாக்குதலைக்
தொழிலாளவர்க்கத்துக்கு அறைகூவல்
கொழும்பில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்

## இந்த இதழில்


இலங்கை மின்சாரசபை ஊழியர் வேலைநிறுத்தம் . . . 2

தமிழீழ விடுதலைப்புலிகளின் காடைத்தனத்தை நிறுத்து! நான்காம்அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை . . . . . . . . 3

ஜேர்மனியில் சமூகப் போராட்டங்கள் வளர்ச்சியடைகின்றன . . . . . . . . 4

மக்கட் படுகொலை குண்டுவெடிப்பை கண்டனம் செய்! சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரள் . . . . . . . . 5

மத்தியவங்கி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவரான தோழர்.ஹரிச்சந்திர பழங்கசிங்கவின் நினைவு நீடூழி வாழ்க! . . . . . . . . 5

நவசமசமாஜக்கட்சி மத்தியவங்கி மீதான குண்டுத் தாக்குதலை நியாயப்படுத்துகிறது . . . . . . . . 6

நவசமசமாஜக்கட்சியின் அலுவலகத்தின் மீது பொலீஸ் வேட்டை . . . . . . . . 6

இந்தியப் பொதுத்தேர்தல்: சோசலிசப் பதிலீட்டுக்காக ட்ரொக்சிஸ்டுக்கள் போட்டி . . . . . . . . 7

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர் பொலிசாரினால் கைது . . . . . . . . 7

இராணுவத்தின் கீழ் யாழ்ப்பாணக் குடாநாடு . . . . . . . . 9

ருஷ்ய தேர்தல்கள் சமூக எழுச்சிக்கான காலகட்டத்தை திறந்து விடுகிறது . . . .

தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தம் . .

வடக்கில் இராணுவ ஆட்சிக்காக திவயின

பானி விஜயசிறிவர்த்தன மேலான தாக்குதல் கண்டனம் செய்! . . . . . . . .

அமெரிக்காவில் சோசலிச சமத்துவக்கட்சி உருவாக்கம் . . . . . . . .


வடக்கு – கிழக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்று.

www.padippakam.com

...லாளர்பாதை

...பாதை நான்காம்அகிலத்தின்
...லகக்குழுவின் இலங்கைப்பிரிவான
...யூனிஸ்ட் கழகத்தினாலும்
...ிவான சோசலிசத்தொழிலாளர்
...லும் வெளியிடப்படுகின்றது.
...ல் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின்
...க் கிளையினால் மறுபிரசுரம்
...கின்றது.
...பாதையின் தொடர்பு விலாசங்கள்:

...ha Wakkumbara
... Maligaganta Lane
...bo 10
...anka.

...alar Pathai
...ch 1609
... Bietigheim-Bissingen
...any.

... Exil Organisation
...0383102 Paris
...e.

...ational Communist Party
...x 71
...rbam S60 1SU
... Britain

...ல் அச்சிட்டு வெளியிடுவோர் :
...ter Presse Verlag
...ch 100105
... Essen
...any.

# இலங்கை மின்சாரசபை ஊழியர் வேலைநிறுத்தம் தொழிலாளர்வர்க்கத்தின் இறுதிப் போராட்டம் அல்ல.

மே 30ம் திகதி நள்ளிரவில் மின்சாரசபைத் தொழிலாளர்களை வீடுவீடாகத் தேடி கைதுசெய்த இராணுவமும் பொலீசும் அவர்களை வேலைத்தலங்களுக்கு காவிச்சென்று துப்பாக்கி முனையில் வேலைசெய்யுமாறு நெருக்கினர். "மக்களைக் கொல்வதிலும் பார்க்க இத்தகைய நிலைமைகளைக் கையாளுவதற்காக எந்த ஒரு விதிமுறையையும் நாம் கையாளுவோம்"என ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க வேலைநிறுத்தக் காரர்களை இராணுவ வன்முறைகளைக் கொண்டு மிரட்டினர்.

அரசாங்கத்தின் மிலேச்ச ஒடுக்குமுறையினாலும் தொழிற்சங்கத் தலைவர்களின் வங்குரோத்தினாலும் காட்டிக்கொடுப்புக்களாலும் இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் பின்வாங்கி வேலைக்குத் திரும்ப நேரிட்டாலும் இது பொதுஜனமுன்னணி அரசாங்கத்துக்கு எதிராக மின்சாரசபை ஊழியர்களிடமிருந்தோ அல்லது தொழிலாளர்வர்க்கத்தின் ஏனைய பகுதியினரிடமிருந்தோ தொடுக்கப்பட்ட இறுதிப் போராட்டம் அல்ல. ஏப்ரலில் வெடித்த தோட்டத்தொழிலாளர்களின் போராட்டத்தில் ஆரம்பித்துள்ள தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களில் இது ஒரு கட்டம் மட்டுமேயாகும். எனினும் தொழிலாளர்வர்க்கம் இதையிட்டு உதாசீனப் போக்கைக் கடைப்பிடிக்க முடியாது. இலங்கை மின்சாரசபை ஊழியர் போராட்டத்தில் இருந்து படிப்பினைகளைப் பெற்றுக்கொண்டு அவசியமான அரசியல் தயாரிப்பைச் செய்யாது போனால் தொழிலாளர்வர்க்கம் பெரும் ஆபத்துக்கு முகம்கொடுக்க நேரிடும்.

மே 31ம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசிய ஜனாதிபதி "இ.மி.ச. தொழிற்சங்கம் கொள்கை சார்ந்த விடயங்களில் அரசாங்கத்தை தலைவணங்கச் செய்யப்பார்க்கின்றது. அரசாங்கத்தின் கொள்கை சார்ந்த விடயங்களில் கைபோட தொழிற்சங்கங்களுக்கு நாம் இடமளிக்க மாட்டோம்... அவர்களின் கோரிக்கைகளின் முரண்பட்ட தன்மை அதுதான். அவர்கள் ஆட்சி செய்ய ஆயத்தமாகிறார்கள்" என்றால் ஜனாதிபதி சொல்லுவது என்ன? நீங்கள் எங்களுக்கு வாக்களிக்கலாம். நீங்கள் எங்களுக்கு வாக்களிக்க வேண்டும். ஆனால் எமது கொள்கைகளை தீர்மானிக்க வரவேண்டாம். அவற்றை தீர்மானம் செய்வது வேறிடத்தில். நாம் ஆட்சி செய்வது எமக்கு அவசியமான விதத்தில்.

ஏகாதிபத்தியவாதிகளின் சிபார்சுகளின் பேரில் பொதுஜனமுன்னணி அரசாங்கத்தினால் நடைமுறைக்–கிடப்படும் கொள்கைகளை தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்கள் அரசாங்கத்துக்கு நெருக்குவாரம் கொடுப்பதின் பேரில் மாற்றிவிட முடியாது. அவர்கள் தமக்கு அவசியமான விதிமுறைகளை தமது அரசாங்கத்தை–தொழிலாளர்–விவசாயிகளின் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர்வதின் மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும்.

எனினும் சமசமாஜ கம்யூனிச நவசமசமாஜ இ.தொ.க மலையகமக்கள் முன்னணி ஜே.வீ.பி. உட்பட்ட கட்சிகளும் தொழிற்சங்கங்களும் இன்னமும் சொல்வது என்ன? ஆட்சி செய்யும் உரிமை முதலாளித்துவ வர்க்கங்களின் கட்சிகளுக்கு மட்டுமேயுள்ளது. அவற்றுக்கு வாக்களிப்பதைத் தவிர வேறு தலைவிதி தொழிலாளர்களுக்கு கிடையாது என்கிறார்கள். இத்துரோக அரசியலை இவர்கள் தொழிலாளர்வர்க்கத்தின் தலையில் கட்டியடிக்க முயற்சிக்கும் விதம் நன்கு அம்பலமாகியுள்ளது. தொழிலாளர்கள்–விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணரப் போராடும் புரட்சிக்கட்சியைச் சூழ தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டுவதை இனியும் தாமதம் செய்ய முடியாது.

மே 29ம் திகதி வேலைநிறுத்தத்தில் குதித்த இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். 1. மின்சாரசபையை தனியார்மயமாக்கக் கூடாது. 2. லங்கா மின்சாரக் கம்பனியை தனியார்மயமாக்கும் டெண்டரை இரத்துச்செய்ய வேண்டும். 3. சம்பள மறுசீரமைப்பு அறிக்னையை 1993ல் இருந்து செயற்படும் விதத்தில் அமுல்படுத்த வேண்டும். அரசாங்கத்துக்கு நெருக்குவாரம் கொடுப்பதன் மூலம் இவற்றை வெற்றிகொள்ள முடியும் என தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் மின்சாரசடை ஊழியர்களுக்கு கூறிக்கொண்டாலும் இவை அரசாங்கத்தின் ஏகாதிபத்தியச் சார்பு வேலைத்திட்டத்துடன் நேருக்குநேர் மோதிக்கொள்ளும் கோரிக்கைகளாகியது. அரசாங்கப்படைகளையும் காடையர்களையும் கொண்டு அத்தியாவசிய சேவையாகப் பிரகடனம் பிரகடனம் செய்யப்பட்டதில் இருந்து தொழிற்சங்கத் தலைவர்களையும் ற்றும் ஊழியர்களையும் கைதுசெய்வது ஆரம்பமாகியது. அத்தியாவசிய சேவைக்கு ஊழியர்கள் அடிபணியாத நிலைமையின் கீழ் "அதிர்ச்சி நடவடிக்கை" என்ற பேரிலான திட்டவட்டமான இராணுவ ஒடுக்குமுறை இயக்கத்தை பொதுஜனமுன்னணி அரசாங்கம் ஆரம்பித்தது.

மின்சாரசபை ஊழியர்களின் அலுவலகங்களுக்குச் சென்று அவர்களை வீடுகளுக்கு இழுத்துச் செல்ல கட்டளை இடப்பட்டுள்ளதாக மே 31ம் திகதிய பத்திரிகையாளர் மகாநாட்டில் ஜனாதிபதி தெரிவித்தார். இங்ஙனம் துப்பாக்கியை நீட்டும் அதே வேளையில் ஏற்கனவே கணிசமான எண்ணிக்கையிலான பொறியியல் ஊழியர்கள் சேவைக்கு விருப்பின் பேரில் அழைக்கப்பட்டுள்ளதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார். மின்சாரசபை ஊழியர்களுக்கு எதிராக குண்டர்களை ஈடுபடுத்துவது அரச ஒடுக்குமுறை இயக்கத்தின் ஒரு பாகமாகியது. ஜனாதிபதியின் பேச்சு இதைக் காட்டியது. இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் இருக்கும் இடங்களின் விலாசங்களைக் கேட்டுத் தமக்கு நூற்றுக்கணக்கான தொலைபேசி அழைப்புக்கள் கிடைத்ததாக அவர் குறிப்பிட்டார். வெள்ளிக்கிழமை கொழும்பு கடுவெலை கம்பஹா புத்தளம் ஆகிய இடங்களில் பொதுஜனமுன்னணிக் காரர்கள் தலைமையிலான ஊர்வலங்கள் இடம்பெற்றது. தாமும் மாஜி.ஜனாதிபதி பிரேமதாசாவைப் போன்று செயற்படுமாறு

**இலங்கை மின்சாரசபை ஊழியர் போராட்டத்தில் இருந்து படிப்பினைகளைப் பெற்றுக்கொண்டு அவசியமான அரசியல் தயாரிப்பைச் செய்யாது போனால் தொழிலாளர்வர்க்கம் பெரும் ஆபத்துக்கு முகம்கொடுக்க நேரிடும்.**

நெருக்கப்பட்டுள்ளதாயும் கொலையைத் தவிர ஏனைய சகலதையும் செய்வதாகக் கூறி ஜனாதிபதி தமது கொடூரத் திட்டங்களை சமிக்கை செய்தார். ரெலிகொம் கம்பனியின் தொழிற்சங்க ஐக்கியமுன்னணியின் தலைவர் ஜேபீ. திசநாயக்கா மே 30ம் திகதி இரவு துப்பாக்கிப் பிரயோகத்துக்கு உள்ளானதும் நவசமசமாஜக் கட்சி அலுவலகத்தின் மீது ஆயுதம் தாங்கிய பொலீஸ்படை பாய்ச்சல் நடாத்தியதும் இந்த பயங்கர இயக்கத்தின் ஒரு பாகமாகும்.

வேலைநிறுத்தக்காரர்களுக்கு எதிராக இனவாத வலதுசார ஆத்திரமூட்டல்களை தூண்டிவிடும் பொருட்டு அரசாங்க தனியார் பத்திரிகைகள் படு கேவலமான பிரச்சாரங்களில் ஈடுபட்டன. அரசாங்கம் யுத்தத்தில் வெற்றிகண்டு சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு எதிராக விடுதலைப்புலிகளிடம் லஞ்சம் பெற்றுக் கொண்டு இந்த வேலைநிறுத்தம் தொடுக்கப்பட்டதாகக் காட்டும் பிரச்சாரங்களில் இவை 7ட்டன. மறுபுறத்தில் ஜனாதிபதி ஆணைக்குழுவை நிறுத்தவும் அரசாங்கத்தைக் கவிழ்க்கவும் ஒரு சதியாக இது ஆரம்பமாகியுள்ளதாகவும் வேலைநிறுத்தத்துக்கு தாக்குதல் தொடுக்கப்பட்டது. தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களைச் சுரண்டி இலவசசுகாதார கல்வி சேவைகளை வெட்டி விலைவாசிகளை உயர்த்தி மக்களின் வயிற்றில் அடித்துக்கொண்டுள்ள அரசாங்கமும் முதலாளித்துவ தொடர்புச் சாதனங்களும் ஆஸ்பத்திரிகளுக்கு மின்சாரம் இல்லாததையிட்டு முதலாளித்துவ தொடர்புச்சாதனங்கள் ஊடாக கண்ணீர் வடித்தன. அரசாங்கம் தாமதிக்காது வேலைநிறுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே அத்தியாவசிய சேவைகள் விதியைப் பாவித்து வேலைநிறுத்தத்தை தவிடுபொடியாக்கியிருக்க வேண்டும் என சில முதலாளிகள் அரசாங்கத்தை குற்றம் சாட்டினர்.

வேலைநிறுத்தம் இழுபட்டுச் செல்லுமானால் இந்தியாவின் முதலாளித்துவ கம்பனிகளின்

அரசாங்கத்திடம் இருந்துகொண்டிருந்தது.

அரசாங்கம் மின்சாரசபை ஊழியர்களுக்கு எதிராக பிரகடனம் செய்த இந்த யுத்தத்தின் யதார்த்தம் என்ன? மின்சாரசபை ஊழியர்கள் முகம்கொடுத்த நிலைமை இலங்கையிலும் அவ்வாறே உலகின் அனைத்து நாடுகளதும் தொழிலாளர்கள் முகம்கொடுத்துக் கொண்டுள்ள ஒரு நிலைமையாகும். நவீன தொழில்நுட்பத்தின் அபிவிருத்தியின் கீழ் இன்று உலகப் பொருளாதாரம் பூகோளமயமாகிக் கொண்டுள்ளது. இது இலாப வீதத்தைக் காத்துக்கொள்ள சண்டையிட்டுக்கொள்ளும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் ஆதிக்கத்தின் கீழ் இடம்பெறுகின்றது. பழைய பொருளாதார வடிவத்தை உடைத்துத் தள்ளியும் நலன்புரிச் சேவைகளை உடைத்து எறிந்தும் சகல மூலைகளிலும் மூர்க்கமான உழைப்புச் சுரண்டல் இடம்பெற்றுக்கொண்டுள்ளது. வளங்களைச் சூறையாடுவதிலும் இவை ஈடுபட்டுள்ளன. ஒரு பறுத்தில் நவீன தொழில்நுட்பத்தைப் பாவித்து தொழிலாளர் உழைப்பின் சமூக விளைதிறனைக் கூட்டும் அதேவேளையில் அவர்களின் சம்பளம் நலன்புரி சேவைகளை வெட்டி குறைந்த பட்ச சம்பளத்துக்கு–மிலேச்ச நிலைமைகளின் கீழ் இவற்றைக் கீழ்ப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது. சிறப்பாக இரண்டாம் உலகயுத்தத்தின் பின்னர் உலகம் பூராவும் பரந்துவந்த அரசமயமான நிறுவனங்களை தனியார் மயமாக்கி துடைத்துக்கட்டி அவற்றை தமது கைக்குள் போட்டுக்கொண்டு சுரண்டும் நடவடிக்கைகளில் ஏகாதிபத்தியவாதிகள் ஈடுபட்டுட்டுள்ளனர். இந்–நிலைமையிலேயே உலகத்தை ஏகாதிபத்தியவாதிகள் இடையே சுரண்டும் உலகயுத்தம் வரையில் அபிவிருத்தி காணும் வர்த்தகயுத்தம் வளர்ச்சிகண்டு வருகின்றது. இந்த நிலையில் பொதுஜனமுன்னணி அரசாங்கம்தான் தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களை நசுக்கி வெளிநாட்டு முதலீடுகளுக்கு கொடூரமான சுரண்டல்களுக்கு வாய்ப்பான நிலைமைகளை உருவாக்கித்தர தயார் என்பதை நிரூபித்துக்காட்ட வேண்டியுள்ளது.

பொதுஜனமுன்னணி அரசாங்கம் இனவாத யுத்தத்தையும் ஆத்திரமூட்டல்களையும் தொடுப்பதன் மூலம் இப்போது மின்சாரசபை ஊழியர் போராட்டத்துக்கு எதிராக இராணுவ–பொலீஸ் குண்டர் ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் இந்த வழியில் சென்று கொண்டு இருக்கின்றது. தொழிலாளர்வர்க்கத்தை பொறுத்தமட்டில் இதன் அர்த்தம் வர்க்க சமரசத்தினதும் நெருக்குவாரங்களதும் செல்வாக்கின் கீழ் உரிமைகளைப் பெற்றுக் கொண்ட காலம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது என்பதே. இலங்கை மின்சாரசபை போராட்டம் ஏனைய சகல தொழிலாளர் போராட்டங்களையும் போல் முதலாளித்துவ அரசாங்கங்களுடனும் அரசுகளுடனும் மோதிக்கொள்ளும் அரசியல் போராட்டங்களாகின்றது.

இருப்பினும் யூ.என்.பி.யில் தொடங்கி இன்று பொதுஜனமுன்னணி வரையில் புதியமட்டத்தில் இடம்பெறும் தாக்குதல்களை அங்கீகரித்து ஆசீர்வதிக்க தொழிலாளர்வர்க்கம் தயார் இல்லை. ஆனால் இந்தப் போராட்டங்களில் இன்னுமோர் விடயம் உறுதியாகியது. பொதுஜனமுன்னணியினதும் முதலாளிவர்க்கத்தினதும் வேலைத்திட்டத்தை தோற்கடிக்க தொழிலாளர்–வர்க்கத்துக்கு புதிய முன்னோக்கும் புதிய தலைமையும் அவசியம் என்பதை இப்போராட்டம் மீண்டும் ஒரு தடவை உறுதிசெய்துள்ளது.

இலங்கை மின்சாரசபையைக் காக்கும் அமைப்பும் அது இணைந்து கொண்டுள்ள தனியார்மயத்துக்கும் எதிரான தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பும் முன்வைத்துள்ள தேசியபொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் ஏகாதிபத்தியத்தை தூக்கி வீசி அனைத்துலக சோசலிசத்தைக் கட்டி எழுப்பும் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக முதலாளித்துவச் சொத்துக்களை தொளில்ாளர் ஆட்சியின் கீழ் தேசியமயமாக்குவதற்கு முற்றிலும் எதிரானதாகும்.

தொழிற்சங்கங்களதும் அவற்றின் அதிகாரத்துவங்–களதும் தலைமையின் கீழ் தொழிலாளர்கள் தமது சக்தியை இத்தகைய சக்திவாய்ந்ததும் அத்தியாவசிய வேலைத்திட்டத்துக்காகவும் பயன்படுத்திக் கொள்ள முடியாது என்பது மீண்டும் ஒரு தடவை இந்த வேலைநிறுத்தத்தினுள் நிரூபணமாகியுள்ளது. அவர்கள் தொழிலாளர்வர்க்கத்தின் ஏனைய பகுதியினருடன் அணிதிரளவும் ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவைத்

படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழ விடுதலைப்புலிகளின் காடைத்தனத்தை நிறுத்து!

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை பங்குனி 1996.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழு அதனது அங்கத்தவர்கள் மீது பாரிசில் முதலாளித்துவ தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்படும் உடல்ரீதியான தாக்குதல்களையும்–மரணதண்டனை பயமுறுத்தல்களையும் வன்மையாகக் கண்டிக்கின்றது.பிரான்சிலும் ஐரோப்பாவிலும் தொழிலாள வர்க்க இயக்கத்தினை இந்தக் காடைத்தனமான நடவடிக்கைகளை எதிர்ப்பதற்காக இணைந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். தொழிலாளவர்க்கத்தினது அரசியல் இயக்கங்களும் தொழிற் சங்கங்களும் எங்களது தோழர்களை பாதுகாப்பதற்கு முன்வருவதுடன் இந்தத் தாக்குதலை நிறுத்துவதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.

மார்ச் மாதம் 12ந் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளினது குண்டர்படையினால் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பிரிவான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக் கிளையின் மீது எதுவித காரணங்களுமின்றி ஒரு கேடுகெட்ட தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இத்தாக்குதலின் முழுப் பலமும் கடந்த பத்து வருடங்களாக கட்சிக்குத் தலமை தாங்கியதுடன் தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தில் இன்னும் நீண்ட வரலாற்றையும் கொண்ட தோழர் ஞானாவினை நோக்கி இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் பாரிசின் "லா சப்பல்" பகுதியின் தமிழ் கடைகளுக்கு முன்னால் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் நான்கு அங்கத்தவர்கள் கட்சியினது தொழிலாளர் பாதை பத்திரிகையை விநியோகம் செய்துகொண்டிருந்த நேரத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. மாலை ஐந்து மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கூலிக்கு அமர்த்தப்பட்ட தொழில் ரீதியான குண்டர்கள் தோழர் ஞானாவை அணுகி அவரது குடியிருப்புப் பத்திரங்களை காட்டுமாறு வற்புறுத்தினர். அவர் அதற்கு மறுப்பு தெரிவித்ததைத் தொடர்ந்து எதுவித எச்சரிக்கையுமின்றி தாக்குதலைத் தொடக்கினர். ஒரு உலோகக் கேபிளினால் திருப்பி திருப்பி அடித்ததின் மூலம் அவரது உடல் முழுவதும் காயங்களை விளைவித்தனர். அத்துடன் இக் குண்டர்கள் இன்னுமொரு கட்சியின் அங்கத்தவரின் முகத்தில் இதே கேபிளினால் தாக்கியதின் மூலம் பாரிய காயங்களை விளைவித்தனர்.

இத் தாக்குதலின்போது இவர்களால் அரசியல் ஆவணங்களையும் தனிப்பட்ட பொருட்களையும் கொண்ட பையினையும் கைப்பற்றிக் கொண்டனர். இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட வேளையில் ஏனைய பல குண்டர்கள் தெருவில் நிலையங்கள் எடுத்து நின்றதின் மூலம் தாக்குதலுக்கு எதிரான பாதுகாப்பு ஏதாவது மேற்கொள்ளப்பட்டால் தலையிடுவதற்கு தயாராகவிருந்தனர்.

கடந்த ஒன்ரரை வருடங்களாக பாரசில் தமிழீழ விடுதலைப் புலிகள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மீது மேற் கொள்ளப்பட்ட ஒரு தொடர் தாக்குதல்களின் இறுதியானதும் மோசமானதும் இத்தாக்குதலாகும்.

1994 ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அன்றைய சிறீலங்கா அரசுடனான "சமாதானப்" பேச்சுவார்த்தையை ஆதரிப்பதற்காக ஒழுங்கு செய்த கூட்டத்தில் தொழிலாளர் பாதை பத்திரிகையை விற்பனை செய்து கொண்டிருக்கையில தோழர் ஞானா புலிகளினது மேற்பார்வையாளரினால் முகத்தில் தாக்கப் பட்டார். இதிலிருந்து ஒவ்வொரு தொழிலாளர் பாதை பத்திரிகைப் பிரச்சாரங்களும் புலிகளினது தொடர்ச்சியான ஆத்திரமூட்டலுக்கு உள்ளாக்கப்பட்டது.

1995 மேதின ஊர்வலமொன்றில் புலிகளின் அங்கத்தவர்கள் தோழர் ஞானாவினை நோக்கி அவர் அழிக்கப்படுவார் என பயமுறுத்தினர். 1995 ன் யூன் மாதத்தில் தொழிலாளர் பாதை விநியோகித்துகொண்டிருந்த தோழர்கள் மீது "உங்களுக்கு பலதடவைகள் பத்திரிகை விற்கவேண்டாம் என்று சொல்லியும் நீங்கள் தொடர்ந்தும் செய்தால் உங்களை வேறுவிதத்தில்தான் கவனிக்க வேண்டும்." என்று புலிகளினால் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

ஜேர்மனியிலும் புலிகள் இதேமாதிரியான ஆத்திரமூட்டல்களை மேற்கொண்டனர். தொழிலாளர் பாதை விற்பனை செய்த கடைச் சொந்தக்காரர்களை பயமுறுத்தி விற்பனையை தடைசெய்தனர். மார்ச் 12ந் திகதி தாக்குதலுக்குப் பின்னர் ஒவ்வொரு இரவும் தோழர் ஞானாவும் இன்னுமொரு கட்சி அங்கத்தவரும் அவர்கள் அரசியல் வேலையை தொடர்ச்சியாக மேற்கொண்டால் கொல்லப்படுவார்கள் என்ற தொலைபேசிப் பயமுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். புலிகள் நீண்ட காலமாகவே ஏனைய இயக்கங்களுடனான அரசியல் வித்தியாசங்களை தீர்த்துக் கொள்வதற்கு அரசியல் போராட்டங்களை விடுத்து கொலைகளை செய்வது என்பதில் புகழ் பெற்றது. இந்த முறையை இலங்கையிலும் இந்தியாவிலும் அதனது அரசியல் எதிரிகள் ஒன்றுக்குப் பின் ஒன்றாக அழித்தொழிக்கப்பட்டனர். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மீதான புலிகளினது இந்தத் தாக்குதலும் கொலைப்பயமுறுத்தல்களும் புலிகளினது வலதுசாரிப் பரிமாணத்தினை நிறுவிக்காட்டுகின்றது.

இது மிகவும் வெளிப்படையாக தொழிலாள–வர்க்கத்தின் எதிர்ப்பினை அடக்குவதற்காக பாசிச முறைகளுக்குள் அடைக்கலம் புகுவதினை வெளிப்படுத்துகின்றது. யாழ்ப்பாணத்தினை சிறீலங்கா இராணுவம் கைப்பற்றியதுடன் புலிகளினது பிரிவினைவாதக் கொள்கைகள் தமிழ் மக்களை ஒரு முட்டுச் சந்திக்குள் கொண்டுசென்றுள்ளது. என்பது அவர்களுக்கு நன்றாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. வடக்கின் தமிழ் மக்கள் புலிகளினால் பணயக் கைதிகளாக்கப்பட்டு அகதி முகாம்களிலிருந்து அவர்கள் வெளியேறுவது தடைசெய்யப்பட்டிருப்பதுடன் ஒவ்வொரு எதிர்ப்புகளும் மோசமானமுறையில் அடக்கியொடுக–கப்படுகின்றது. அதேநேரத்தில் புலிகள் ஏகாதிபத்திய சக்திகளை "சமாதான" ஒப்பந்தத்துக்கான தரகர்களாக தலையிடுமாறு கோரிக்கை விடுக்கின்றனர். தெற்கில் புலிகள் தனது இராணுவ நடவடிக்கைகளை சிறீலங்கா இராணுவதிற்கு மேலில்லாமல் பொதுமக்கள் மீது அதுவும் விசேடமாக தொழிலாளர்கள் மீது திருப்பியுள்ளது. இது ஜனவரி 31ம் திகதி கொழும்பு மத்திய வங்கியின் மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மூலம் தெளிவாக்கப்பட்டது. இந்த பயங்கரவாதத் தாக்குதலில் 90க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன் 1200 பேர் காயமடைந்தனர். இதில் பாதிக்கப்பட்டவர்களில் பலர் மத்திய வங்கி தொழிற்சங்கத்தின் ஆதரவாளர்கள் அல்லது அங்கத்தவர்கள்.



*மேதின ஊர்வலத்தில் சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மேசையின் முன்னால் தாக்குதலில் ஈடுபட்ட புலிகள்.*

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் வேலைகள் இந்த தொழிற் சங்கத்தை சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளும் இனவாத யுத்தத்துக்கு எதிரான தொழிலாளவர்க்கத்தின் எதிர்ப்பின் மையமாக மாற்றியுள்ளது. கொழும்பு மத்திய வங்கியை அதனது இலக்காக தேர்ந்தெடுக்கும்போது புலிகளிற்கு இது நன்றாகத் தெரியும்.

தமிழ் மக்களுக்கு மேலான யுத்தத்துக்கு எதிரான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் நிலைப்பாட்டினை ஒப்பிட்டுப்பார்க்க முடியாது. பழைய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் போதும் அதேபோல் தற்போதைய மக்கள் முன்னணி அரசாங்கத்தின் கீழும் இந்தப் போருக்கெதிராக தொழிலாளர்களை அணிதிரட்டு–வதற்க்காக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அயராது போராடியிருக்கின்றது. இந்தப் போராட்டத்தினை மேற்கொண்டதிற்காக கட்சியின் காரியாளர்கள் பலர் சிங்களக் குண்டர்களினால் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு மேலான ஒடுக்குமுறையை தொடர்ச்சியாக எதிர்க்கும் அதே நேரத்தில் இதற்கான தீர்வினை புலிகளினது தேசிய பிரிவினைவாத முன்னோக்கு முன்வைக்கமாட்டாது என்பதை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வலியுறுத்துகின்றது. போரினதும்அடக்குமுறையினதும் பிரச்சினைகளின் தீர்வினை ஒரு வர்க்க அடித்தளத்தில் தமிழ் சிங்களத் தொழிலாளர்களை சோசலிச வேலைத்திட்டத்தின் கீழ் அணிதிரட்டுவதற்காக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் போராடுகின்றது. இந்திய சோசலிச குடியர
பாகமாக தமிழீழ சிறீலங்கா சோசலிசக் கு
போராட்டத்திற்கு அது தன்னை அர்ப்ப
இந்த முன்நோக்குக்கான ஆதரவு சமீப
ஏகமனதாக தமிழ்சிங்கள தொழிலாளர்க
வளர்ச்சியடைகின்றது. தொழிலாளர்
சமீபத்திய வெளியீடு "இனவாத யுத்தத்து
தொழிலாளவர்க்கத்தின்
தங்கியிருக்கின்றது." என்ற தலையங்கக் க
வெளியிடப்பட்டது. இக் கட்டுரை புலிகளி
தொடர்பான ஆளமான ஆய்வுகளை செய்

இப் பத்திரிகை பரவலாக விநியோகிக்க
தொழிலாளர்கள் மத்தியில் ஓர் கூர்மையா
கலந்துரையாடலை உருவாக்கியுள்ளது
தொழிலாளவர்க்கத்தின் இந்த அரசியல் வி
பயப்படுவதுடன் அதனை எதிர்க்கின்றனர்.

இதனால்தான் இவர்கள் புரட்சிக்
கழகத்திற்கு மேலான பாசிச
தாக்குதல்களுக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர்
குழுவும் அதனது கிளைகளும் இந்தத் தா
நிறுத்துவதற்கான ஒரு
ஏற்படுத்துவதற்கான அனைத்து
முறைகளையும் பிரயோகிக்குமென்று
செய்கின்றன. அதேநேரத்தில் பிரான்சு ஜேர்
ஏனைய ஐரோப்பிய தொழிலா
தொழிலாளவர்க்க இயக்க– ங்களையும்
காடைத்தனத்தை எதிர்க்கும்படியும் இந்தக்
இலங்கையிலும் இந்தியாவிலும்
எதிர்பாளர்களுக்குமேல் மேற்கொண்ட
கொலைகார வன்முறையினை பாரிசில் மேற்
அனுமதிக்க வேண்டாமெனவும்
விடுக்கின்றோம்.

# புலிகளின் தாக்குதலிற்கு எதிரான சர்வதேசப் பிரச்சாரம்

*1 ம் பக்க தொடர்ச்சி*

இத்தாக்குதல்களைக் கண்டித்து ஒரு பொதுக்கூட்டத்தினை நடாத்தியது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக் கிளை ஐரோப்பாவில் தமிழ் தொழிலாளர்கள் மத்தியில் இத் தாக்குதல்களைக் கண்டித்து விநியோகித்த அனைத்துலகக் குழுவின் அறிக்கை தொழிலாளர்களால் மிகுந்த ஆர்வத்துடன் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன் புலிகளின் இந்த நடவடிக்கையை கண்டனமும் செய்தனர்.

விசேடமாக அனைத்துலகக் குழுவின் ஜேர்மன் பிரித்தானியப் பிரிவுகளான சோசலிசத் தொழிலாளர் கழகமும் சர்வதேச கம்யூனிஸ்ட் கட்சியும் தொழிலாளவர்க்கத்தினுள்ளும் தொழிற்சங்–கங்களினுள்ளும் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக் கிளை அங்கத்தவர்களினது அரசியல் வேலை செய்யும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் போராட்டத்தில் நடைமுறை நடவடிக்கைகளில் 7ட்டன.

ஜேர்மனியில் நூற்றுக்கணக்கான தொழிற்–சங்கப்பிரதிநிதிகள் இடதுசாரிக்கட்சி அங்கத்தவர்கள் கண்டனக் கடிதங்களையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அலுவலகங்களுக்கு அனுப்பினர். மேதின ஊர்வலத்தை ஒழுங்கமைத்த–ஜேர்மன் தொழிற்சங்க சம்மேளனத்தின் டுசில்டோவ் பிராந்தியக் கிளையின் அதிகாரிகள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அங்கத்தவர்களை புலிகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்க மறுத்ததை தொழிலாளர்களிடம் அம்பலப்படுத்தும் நடவடிக்கைகளையும் சோசலிசத் தொழிலாளர்கழகம் மேற்கொள்கின்றது.

பெரியபிரித்தானியாவில் சர்வதேசக் கம்யூனிஸ்ட் கட்சி ஐவெநசயெவழையெட ஊழஅஅரளைவ "யசவல தொழிலாளர்கள் மாணவர்கள் மத்தியிலும் தொழிற்சங்கங்கள் மத்தியிலும் ஒரு சக்திவாய்ந்த போராட்டத்தினை மேற்கொண்டது. பல்கலைக் கழக மாணவ சங்கங்கள் பல தொழிற்சங்கங்களின் கிளைகள் இந்த தாக்குதல்களைக் கண்டித்து தீர்மானங்களை நிறைவேற்றின.

சர்வதேசக் கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொண்ட இந்த அரசியல் பிரச்சாரத்தின் அடித்தளத்தில் மூன்று பொதுக்கூட்டங்களை லண்டன் பிரட்போட் மான்செஸ்டர் நகரங்களில் யூன் மாதத்தின் ஆரம்பத்தில் தொழிலாளர்களுடன் இந்திய உபகண்டத்தினைச் சேர்ந்த தொழிலாளர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். சர்வதேசக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் தோழர் டேவ் கைலண்ட் பாரீசில் புலிகள் மேற்கொண்ட தாக்குதலுக்கு எதிராக சேகரித்த 541 கையெழுத்துக்களை புலிகளின் லண்டன் அலுவலகத்திற்கு அனுப்பியதுடன் பின்வரும் கடிதத்தினையும் எழுதியிருந்தார்.

"பெரியபிரித்தானியாவில் தொழிலாளவர்க்கம் முழுமையாகவும் மேற்கொள்ளப்பட இருக்கும் ஒரு பாரிய பிரச்சாரத்தின் ஆரம்பம்தான் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் கையெழுத்துக்களாகும். சர்வதேசக்கம்யூனிஸ்ட் கட்சியினால் இங்கு மேற்கொள்ளப்படும் இந்தப் பிரச்சாரமானது நான்காவது அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் சர்வதேசரீதியாக மேற்கொள்ளப்படும் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகும்.

ஐரோப்பாவில் நூற்றுக்கணக்கான அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்கள் மனிதஉரிமை ஸ்தாபனங்கள் நீங்கள் மேற்கொண்ட தாக்குதல்களைப் பற்றிய செய்திகளைப் பெற்றுள்ளன. வரப்போகும்
கண்டிப்பதுடன் எங்களது கட்சியின் அங்க
ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நட
நிறுத்தும் எங்களுடைய கோ
ஆதரவளிப்பதன் மூலம் இத் தாக்குதல்க
முடிவிற்கு கொண்டுவரும்
உறுதியாகவிருக்கின்றோம்."

நான்காவது அகிலத்தின் அனை
குழுவினால் மேற்கொள்ளப்பட்ட
தாக்குதலுக்கு எதிரான பிரசுரமானது
தொழிலாளர் வர்க்கத்தினுள் பாரிய தா
ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பிரச்சாரம் ஐ
எழுப்பிய அரசியல் கேள்விகள் தொழிலாள
அரசியல் மூலோபாயமான
தொழிலாளவர்க்கத்தின் ஐக்கியம்
அவசியத்தை உறுதியாக வ
கலந்துரையாடலை முன்னணிக்கு கொண்டுவ

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெ
கிளை நான்காவது அகிலத்தின் ஜேர்மன் பி
பிரிவுகளுடனான தனது அரசியல் கூட்
மூலோபாயத் தேவையை மீண்டு

படிப்பகம்

www.padippakam.com

# ஜேர்மனியில் சமூகப் போராட்டங்கள் வளர்ச்சியடைகின்றன.

இரண்டாம் உலகயுத்த முடிவின் பின் என்றுமில்லாதவாறு ஜேர்மன் தொழிலாளர்களும் அவர்களது குடும்பங்களும் பாரியளவிலான வேலைநீக்கலிற்கும் சம்பளவெட்டுக்களுக்கும் அவர்களது சமூக வெற்றிகளின் மேலான தாக்குதலுக்கும் இம்முறை முகம் கொடுக்கின்றனர்.

உத்தியோகபூர்வமான தரவுகளின்படி ஜேர்மனியில் வேலையற்றோரின் எண்ணிக்கை 4.5 மில்லியனாக காட்டப்பட்ட போதிலும் அதன் உண்மையான தொகை 8 மில்லியனிற்கும் அதிகமாய் உள்ளது. கடந்த வருட முடிவிலிருந்து இத்தொகை 11வீதமாய் கூடியுள்ளதுடன் தொடர்ந்தும் தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்வதும் தொழிற்சாலைகளை இழுத்து மூடுவதும் உக்கிரப்படுத்தப்பட்டுள்ளது. தொழிற்சங்கங்கள் அரசாங்கத்துடன் நடாத்தும் ஒவ்வொரு பேச்சுவார்த்தையும் தொழிலாளர்களின் வேலைநேரத்தை நீடிப்பதிலும் 20 அல்லது 30 வீதத்தில் சம்பளவெட்டுக்களை நடைமுறைப்படுத்துவதிலுமே முடிவடைகின்றது. ஓய்வூதியம் சமூகஉதவிப்பணம் பெறுவோர் வேலைநீக்கம் செய்யப்பட்டோர் அங்கவீனமுற்றோரிற்கும் இதுவரைக்கும் இருந்துவந்த சமூக உத்தரவாதம் முற்றாய் அழிக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளன. இவை சனத்தொகையின் பெரும்பகுதியினரை பொறுத்த அளவில் 19ம் நூற்றாண்டின் வாழ்க்கைத்தரத்திற்கு மீண்டும் திரும்பிப் போவதையே சமிக்கை செய்கின்றது.

இவை ஜேர்மனியில் உள்ள உண்மையான வர்க்க உறவுகளின் நிலையை எடுத்துக்காட்டுகின்றன. பல ஆண்டுகளாய் ஜேர்மனி முதலாளித்துவ பொருளாதாரத்தின் "வெற்றிக்கான" ஓர் நாடாகவும் தொழிற்சங்கங்களினதும் சமூகஜனநாயகக்கட்சிகளின் வர்க்கசமரச சீர்திருத்தவாத அரசியலிற்கூடாய் தொழிலாளர்களிற்கு உத்தரவாதமான வேலைத் தளத்தையும் உறுதியான வாழ்க்கைத்தரத்தையும் வழங்கமுடியும் என்ற கருத்திற்கான உதாரணமாய் விளங்கியது. இன்று இது போன்ற அனைத்து மாயைகளும் தினசரி தவிடுபொடியாக்கப்பட்டு வருகின்றது. தொழிற்சங்கங்களும் சமூகஜனநாயககட்சியும் கோல் அரசுடன் இணைந்து ஜேர்மன் தொழிலாளர்வர்க்கத்தின் செலவில் பாரிய நிறுவனங்களாலும் வங்கிகளாலும் தமது செல்வந்தத்தை அதிகரிப்பதற்கான அரசியலை நடாத்துகின்றனர்.

## புதிய "சமூகக் கூட்டு"

கடந்த காலங்களில் தொழிலாளர்களிற்கிடையேயும் முதலாளிகளிற்கிடையேயும் உருவாக்கப்பட்டிருந்த "சமூகக்கூட்டு" **(Sozial Partnashaft)** தொழிலாளர்களின் உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை உத்தரவாதம் செய்யுமென ஜேர்மன் தொழிற்சங்க சம்மேளனமும் **(DGB)** சமூகஜனநாயகக் கட்சியும் கூறிவந்தது. ஆனால் இன்று இச் "சமூகக்கூட்டு" பூகோளரீதியான போட்டியில் ஜேர்மனியின் நலன்களை பாதுகாக்க தொழிலாளர்கள் சுய தியாகங்களை ஏற்றுக்கொள்வதையே அர்த்தப்படுத்தும் எனக்கூறுகின்றனர்.

ஜனவரி 23ம் திகதி கோலுடன் தொழிற்சங்கங்கள் நடாத்திய பேச்சுவார்த்தையில் அவர்கள் "வேலைக்கான கூட்டு" **Bündnis für Arbeit** என்ற ஒன்றை நிறுவினர். இவ் "வேலைக்கான கூட்டு" எதிர்காலங்களில் சம்பளஉயர்வு கோரிக்கையை கைவிடுவதனூடாய் வேலை வாய்ப்பிற்கான உத்தரவாதம் செய்யப்படும் என தொழிற்சங்கங்களால் தூக்கிப் பிடிக்கப்பட்டது. "நோகக்கூடியவேலைகள் செய்யப்படவேண்டும்" என தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் கூறியபின் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் சம்பளத்தை வெட்டுவதற்காய் அரசுடன் ஒப்பந்தம் செய்யாத நாட்கள் இல்லை. 1930களை போலவே வேலைநீக்கம் தொழிலாளர்களின் மேல் மேலும் சம்பளவெட்டுக்களை நடைமுறைப்படுத்த பயன்படுத்தப்படுகின்றது.

பொதுச்சேவைகள் தொழிற்சங்கத்தின் தலைவர் சம்பளத்துடன் குறைந்ததால் வேலைநேரங்களும் குறைக்கப்படவேண்டும் என்று பிரேரித்துள்ளார். அதே நேரத்தில் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் ளுஉாரடவந ஓய்வூதியத் தொகையிலும் நோய்வாய்ப்பட்டிருக்கும் காலத்தில் வழங்கப்படும் பணத்திலும் பாரிய வெட்டுக்கள் ஏற்படுத்தவேண்டும் என்பதை கோல் அரசாங்கத்துக்கு பிரேரித்துள்ளார்.

சமூகஜனநாயகக்கட்சியின் முக்கிய பிரதிநிதிகள் இதைவிட மோசமான தாக்குதல்களை தொழிலாளவர்க்கத்தின் பரந்த தட்டுக்களின் மேல் நடைமுறைப்படுத்த முன்னிற்கின்றனர். சமூகஜனநாயகக் கட்சியின் நிதி ஆலோசகர் பின்வருமாறு கூறினார். "சமூகசேவைகளின் வலைப்பின்னல் மேல் ஆழமான வெட்டுக்களை நடைமுறைப்படுத்தாவிடின் அதன் பெறுபேறாய் பாரியளவில் வேலையில்லாப்பிரச்சினை உருவாகும். ஓர் நீண்ட காலப்போக்கில் ஜேர்மனி தனது அடித்தளத்தை தென்கிழக்கு ஆசியாவின் கட்டமைப்பிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது." சமூகஜனநாயகக்கட்சியின் இன்னொரு பேச்சாளர் குறிப்பிடுகின்றார் "வேலையில்லாப் பிரச்சினைக்கான காரணம் உயர்ந்த சம்பளம் என்பதில் தொழிற்சங்க சம்மேளனத்தின் **(IG Metal )** தலைவர் **Zwickel** தற்போது உடன்படுகின்றார். வேலைசெய்யும் நாட்கள் மிக நீண்டதாய் உள்ளது. அதேநேரத்தில் சம்பளமும் மிக உயர்வாய் உள்ளது என்பதில் நமக்கிடையே எதுவித சந்தேகமும் இல்லை."

கோல் அரசாங்கம் சமூகஜனநாயகக்கட்சியினதும் தொழிற்சங்க சம்மேளனத்தினதும் துரோகத்தை தொழிலாளவர்க்கத்தின் மேல் தாக்குதல் நடாத்துவதற்காய் காட்டப்பட்ட சமிக்கையாய் பார்க்கிறது. சமூகஜனநாயகக்கட்சியும் தொழிற்சங்க சம்மேளனமும் இதயபூர்வமாய் கோல் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பு செய்வதனூடாய் தொழிலாளர்கள் ஓய்வு பெறும் வயது அடுத்த வருடத்திலிருந்து ஓர் வருடம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் சுகவீனமாய் யாராவது லீவு எடுத்தால் அவர்களது சம்பளத்தை வெட்டவேண்டும் என்ற பிரேரிப்பையும் அவர்கள் முன்வைத்துள்ளனர்.

## பிரான்சின் படிப்பினைகள்

ஜேர்மன் தொழிலாளவர்க்கத்திற்கும் முதலாளித்து–வத்திற்குமிடையேயான முகம்கொடுப்பிற்கான நிலைமைகள் மிக தீவிர–மாய் வளர்ச்சியடைந்து வருகிறது. இது ஏனைய எல்லா நாடுகளையும் போலவே தொழிலாளர்–வர்க்கத்தின் பழைய இயக்கங்களிற்கெதிரான அரசியற்–கிளர்ச்சியானதொரு வடிவத்தை எடுக்கும்.

தொழிற்சங்க அதிகாரத்துவத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையேயான கூட்டு




...த்தில் பங்குகொள்ளும் துருக்கித் தொழிலாளர்கள்

முதலாளித்துவம் தொழிலாளர்வர்க்கத்திற்கு எதிராய் தனது ஆட்சியை பலப்படுத்திக் கொண்டதுடன் அதன் சக்திவாய்ந்த புரட்சிகர பாரம்பரியங்களையும் நசுக்கியது. இதை செய்வதற்கு ஜேர்மன் முதலாளித்துவம் மேற்கில் சமூகஜனநாயக தொழிற்சங்க அதிகாரத்துவத்திலும் கிழக்கில் ஸ்டாலினிஸ்டுக்கள் உருவாக்கிய பொலீஸ் ஆட்சியிலும் தங்கியிருந்தது. இன்று ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு **(DDR)** உடைந்து அதன் முதலாளித்துவ மறு இணைப்பின் ஆறு வருடங்களின் பின் ஸ்டாலினிசம் மட்டுமல்ல சமூகஜனநாயகமும் தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களின் முன்னால் முழுமனே மதிப்பிழந்து போயுள்ளன. மார்ச் 24ல் நடந்த பிராந்திய சபைத்தேர்தலில் தொழிலாளர்களும் இளைஞர்களும் தாம் மதிப்பு வைத்திருந்த இக்கட்சியிலிருந்து விலகிக்கொண்டனர். அதே நேரத்தில் அரைமில்லியனிற்கும் அதிகமான சமூகஜனநாயகத்தின் வாக்காளர்கள் அக்கட்சிக்கு புறமுதுகு காட்டினர்.

கடந்த வருடம் நவம்பர் டிசம்பர் மாதங்களில் பிரஞ்சு தொழிலாளர்வர்க்கம் சிராக்–யூப்பே அரசாங்கத்தின் நலன்புரி அரசை அதிகரிக்கும் கொள்கைகளுக்கெதிரான வேலைநிறுத்தத்தில் இறங்கியது.

இவ்வியக்கத்தின் முக்கியத்துவத்தை பற்றி நான்காம் அகிலத்தின் ஜேர்மன் கிளையான சோசலிசத் தொழிலாளர்கழகம் **(BSA)** தனது பத்திரிகையான **Neue Arbeiter Presse** இல் பின்வருமாறு குறிப்பிட்டது.

"பிரான்சின் சம்பவங்கள் ஐரோப்பாவிலும் சர்வதேச ரீதியிலும் அரசியல் அபிவிருத்திகளில் ஆழமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. இவை அரசியல் கொந்தளிப்புகளினதும் வர்க்கப்போராட்டத்தின் வளர்ச்சியின் பரந்த காலப்பகுதியினுள் நாம் நுழைந்துள்ளோம் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

பிரஞ்சு தொழிலாளர்வர்க்கத்தின் சுயாதீனமான புரட்சிகரக் கட்சி இல்லாமல் இருந்ததுதான் இப் பலமான இயக்கத்தின் பலவீனமாய் இருந்தது. இது தொழிற்சங்க அதிகாரத்துவம் தீவிரவாத குழுக்களுடன் இணைந்து அரசாங்கத்தின் சார்பில் நிலைமைகளைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்கியது.

முதலாளித்துவம் தனது நலன்களின் அடிப்படையில் சமுதாயத்தை ஒழுங்கு செய்யுமொரு திட்டத்தை வைத்திருக்கின்றது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அதன் கைகளில் அரசியல் அதிகாரம் உள்ளது. தொழிலாளர்வர்க்கம் முதலாளித்துவத்தடமிருந்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றாவிட்டால் அது முதலாளித்துவத்தின் நிபந்தனைகளிற்கு கீழ்படிய வேண்டியிருக்கும்."

பிரான்ஸ் சம்பவங்களின் புறநிலை முக்கியத்துவம் தொடர்பாகவும் அங்கு தொழிலாளர்கள் முகம்கொடுத்த அரசியல் விடயங்கள் தொடர்பான நமது ஆய்வும் ஜேர்மனியின் அபிவிருத்தியினூாய் நிரூபிக்கப்பட்டுள்ளன. ஜேர்மன் தொழிலாளர்களின் மக்கள் இயக்கமாய் சோசலிசத் தொழிலாளர் கழகத்தை கட்டியெழுப்புவதிலேயே அனைத்தும் தங்கியிருக்கின்றது. இது ஐரோப்பாவின் அரசியல் அபிவிருத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் பிரிவுகளை கட்டியெழுப்புவதனூடாய் வறுமைக்கும் வேலைநீக்கத்திற்கும் எதிரான ஐரோப்பியத் தொழிலாளர்களின் போராட்டம் ஐக்கியப்படுத்தப்பட்டு வங்குரோத்து தொழிற்சங்க அதிகாரத்துவங்களுக்கு எதிராய் திருப்பப்படவேண்டும்.

இதற்கான சாத்தியமான நிலைமைகள் வளர்ச்சியடைவதனை கடந்த 15ம் திகதி யூன் மாதம் பொன் நகரில் நடாத்தப்பட்ட ஊர்வலம் தெளிவுபடுத்தியது. 350000 ற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்துகொண்ட இந்த ஊர்வலம் ஜேர்மனியின் வரலாற்றில் நடாத்தப்பட்ட பெரிய தொழிற்சங்க ஊர்வலமாகும்.இந்த ஊர்வலத்தை தொழிற்சங்கங்கள் ஒழுங்குசெய்த போதிலும் பெரும்பான்மையான தொழிலாளர்கள் தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் அரசியலை நிராகரித்ததனை சோசலிசத் தொழிலாளர் கழகம் அவதானித்தது.

இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் அங்கத்தவர்கள் 10000ற்கும் மேற்பட்ட துண்டுப்பிரசுரங்களை விநியோகித்ததுடன்

படிப்பகம்

www.padippakam.com

# மக்கட் படுகொலை குண்டுவெடிப்பை கண்டனம் செய்!

# சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிர

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அரசியல் குழுவின் அறிக்கையின் சுருக்கம்: ஜனவரி 31ல் மத்திய வங்கி ஊழியர்கள் உட்பட நூற்றுக்கும் அதிகமானவர்களை கொன்றும் இன்னும் ஆயிரத்துக்கும் அதிகமானோரை காயப்படுத்தியதுமான தமிழீழ விடுதலைப் புலிகள் நடாத்திய குண்டுத்தாக்குதலை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வன்மையாகக் கண்டனம் செய்கின்றது. இதில் கொலையுண்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் நீண்டகால ஆதரவாளாரன மத்திய வங்கி ஊழியர் ஹரிச்சந்திர பழங்கசிங்கவையும் இன்னும் பல புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக ஆதரவாளர்கள் உள்ளடங்கலான சகலரையுமிட்டு ஆழ்ந்த துயரங்கொண்டுள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அவர்களின் குடும்பங்களுக்கு தனது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் காட்டுமிராண்டி இனவாத யுத்த நிலைமையின் கீழ் இந்தக் கொடிய நடவடிக்கையில் ஈடுபட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் படு பிற்போக்கு அரசியலின் ஒரு முக்கிய அம்சம் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கும் இனவாத யுத்தத்துக்கும் எதிராக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முன்வைத்த அரசியல் வேலைத்திட்டத்துக்கு பரந்த ஆதரவை வழங்கிவந்த மத்திய வங்கி ஊழியர்கள் மீது விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை நடாத்தியமையேயாகும். மத்திய வங்கி ஊழியர்கள் தமது தொழிற்சங்க தலைப்பீடத்துக்கு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர்களைத் திரும்பத் திரும்ப நியமனம் செய்ததோடு மட்டுமன்றி அதன் அங்கத்தவர்களிடையே அரசியல் ரீதியில் நனவுமிக்க தொழிலாளர்கள் சகலரும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின்வேலைத்திட்டத்துக்கு தியாகம் மிகுந்த ஆதரவையும் வழங்கினர். தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத ஒடுக்கு முறைக்கு எதிராக நீண்ட காலமாக பிரேரணைகளை நிறைவேற்றி வந்ததின் மூலம் மத்திய வங்கி ஊழியர்களில் பலர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக நடவடிக்கைகளில் பங்கு கொண்டனர். ஏழு மாதங்களுக்கு முன்னர் 1995 ஜீன் 27ந் திகதி நடைபெற்ற மத்திய வங்கி ஊழியர் சங்க ஆண்டு பொதுக் கூட்டத்தில் பொதுஜன முன்னணி அரசாங்கம் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகத் தொடுக்கும் தாக்குதல்களுக்கும் இனவாத யுத்தத்துக்கும் எதிரான பிரச்சாரத்தினை தொடுக்கும் வேலைத்திட்ட பிரேரணையை மத்திய வங்கி ஊழியர்கள் அங்கீகரித்தனர். அந்தப் பிரேரணை பின்வருமாறு குறிப்பிடுகின்றது. " இந்த இனவாத யுத்தத்தின் இறுதிப் பெறுபேறு சிங்கள-தமிழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் மீது சர்வாதிகாரத்தை திணிப்பதாகும். தமிழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களதும் தெற்கில் சிங்கள ஒடுக்கப்படும் மக்களினதும் கரங்களுக்கு விலங்கு மாட்டும் இந்த யுத்ததுக்கு முடிவு கட்டி தமிழீழம் மக்களும் சிறீலங்கா மக்களும் சமாதானமான முறையில் ஒன்றாக வாழக்கூடிய ஒரு தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்க வேண்டும். இந்தப் பிற்போக்கு யுத்தத்துக்கு தொழிலாளர் வர்க்கம் ஒரு சதமோ அல்லது ஒரு ஆளோ வழங்கக்கூடாது."

அவ்வாறே இனவாத யுத்த ஒடுக்கு முறைகளில் இருந்தும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் இருந்தும் பாதுகாப்பு பெறும்பொருட்டு தொழிலாளர்களின் ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு கமிட்டிகள் அமைக்கப்படவேண்டும். என்ற பிரேரணையை பு.க.க. முன்வைத்தவேளையில் மத்திய வங்கி ஊழியர்கள் அதை அங்கீகரித்து இருந்தனர். மறுபுறத்தில் அவர்கள் விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத பிற்போக்கு அரசியலை நிராகரித்தனர். ஹரிச்சந்திர பழங்கசிங்க இப்போராட்டத்தின் முன்னணியில் நின்றுவந்த புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஆதரவாளர் ஆவார்.

தமழ் மக்களை தேசிய ஒடுக்கு முறையில் இருந்தோ அல்லது இனவாத யுத்தத்தில் இருந்தோ விடுவிக்க அவசியமான பொதுஜன ஆதரவை வெற்றி கொள்ள முடியாது என்பதை விடுதலைப் புலிகள் புரிந்துகொண்டுள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு இன்று அவசியமாய் இருப்பது சிங்கள இனவாதத்தை தூண்டிவிட்டு இனவாயுத்தத்துக்கும் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் எதிராக தீவு பூராவும் உள்ள தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை ஒன்றுபடுத்தும் போராட்டத்தை சிதறடிப்பதன் மூலம் தமது ஆளுமையின் கீழ் ஏகாதிபத்தியத்திய முதலீட்டாளர்களின் சுரண்டலுக்கான நிலமையை சிருஷ்டிப்பதாகும். அதனுடன் ஏகாதிபத்திய சார்பு பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ஒடுக்குமுறையை மேலும் மேலும் உக்கிரமாக்கும் நடவடிக்கையுடன் இணைந்து கொண்டுள்ளது.

சமசமாஜ கம்யூனிச இ.தொ.கா. மலையக மக்கள் முன்னணி போன்ற கட்சிகளின் துணையுடனும் நவ சமசமாஜக் கட்சி தொழிற்சங்கத் தலைமைகளின் முண்டுகோலுடனும் பொதுஜன முன்னணி அரசாங்கம் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்கின்றது. பொதுஜன முன்னணி அரசாங்கத்தினை தனது கருவியாக்கிக் கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் விடுதலைப் புலிகளின் தாக்குதல் இடம் பெற்றதும் அதை கண்டித்து அறிக்கை வெளியிட்டது. இது விபத்துக்கு உள்ளானவர்களையிட்டு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கொண்டுள்ள அக்கறையினால் அல்ல. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் கையாட்களாக தொழிற்படும் ஆட்சியாளர்களைக் கொண்ட பல்வேறு இடங்களிலும் ஆக்கிரமிப்பு இராணுவம் ஊடுருவிக் கொண்டுள்ளது. ஐரோப்பிய யூனியனும் மற்றும் ஏகாதிபத்திய சக்திகளும் இத்தகைய கண்டன அறிக்கைகளை விடுத்துக்கொண்டு "பயங்கரவாதத்தை" நசுக்கும் சாட்டில் ஊடுருவப் பார்க்கின்றன. இந்த ஏகாதிபத்தியவாதிகள் யுத்தத்தை ஆயுதமாகக் கொண்டு ஒடுக்கப்படும் மக்களை ஒடுக்கித்தள்ளும் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு ஊக்கமளிக்கின்றன. இது இந்தியத் துணைக் கண்டத்தை காலனியாக்கும் பிற்போக்குத் திட்டத்தின் ஒரு பாகமாகும்.



*மத்தியவங்கி குண்டுவெடிப்பு*

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களால் " பாதிக்கப்பட்ட " கோடீஸ்வரர்களுக்கு சுடச்சுட பணம் வழங்குவது பற்றியே அரசாங்கம் கணக்குப் போட்டுள்ளதே தவிர மத்திய வங்கியிலும் மற்றும் வேலைத் தலங்களிலும் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் தலைவிதியைப் பற்றி அதற்கு அணுவளவும் அக்கறை கிடையாது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதம் தமிழ் மக்களுக்கு விடுதலையைக் வழங்காது. அது தமிழ் மக்களைப் பேரழிவுக்குள்தள்ளும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ அரசியலாகும். ஒடுக்கப்படும் மக்களின் தீர்க்கப்படாத ஜனநாயக உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தொழிலாளர் வர்க்க புரட்சியினால் மட்டுமே தீர்வு அனைத்துலக சோசலிசப் புரட்சி வேலை ஒரு பாகமாக இந்திய துணைக் கண்ட புரட்சியின் அடிப்படையில் சிங்கள யுத்தத்துக்கும் தமிழ் மு பிரிவினைவாதத்துக்கும எதிராக வடக்கு மாகாணங்களில் தொழிலாளர் வர் லங்கா-தமிழீழ சோசலிசக் குடியரசு ஒ நிறுவும் வேலைத்திட்டத்தின் அடிப்படையி வேண்டும்.

## மத்திய வங்கி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக குழுவின் தோழர். கரிச்சந் பழங்கசிங்கவின் நினைவு நீடூழி வாழ்க!

விடுதலைப் புலிகள் மத்திய வங்கியின் மீது நடாத்திய மக்கட் படு கொலை குண்டுத்தாக்குதலில் இறந்த மத்திய வங்கி ஊழியர்கள் பலரின் இறுதிச் சடங்குகளில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர்கள் கலந்து கொண்டதோடு காயமடைந்தவர்களை பார்வையிடுவதிலும் உதவிகளை வழங்குவதிலும் முன்நின்றனர். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் நீண்ட கால ஆதரவாளரான ஹரிச்சந்திர பழங்கசிங்கவின் இறுதிச் சடங்குகள் பெப்ரவரி 3ந் திகதி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முக்கிய பங்குடன் வெரல்லவத்தையில் நடைபெற்றது.

அவரின் இறுதிச் சடங்குகளில் 500க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டிருந்ததோடு புரட்சிக் கம்யூனிஸ்ட கழக அங்கத்தவர்களும் பெருவாரியானோர் அதில் அடங்குவர். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் சார்பில் அதன் மத்திய குழு உறுப்பினரும் " கம்கறு மாவத்த " ஆசியருமான கேரத்னாயக்க இரங்கல் உரை நிகழ்த்தினார். விடுதலைப் புலிகளின் குண்டு வீச்சினை கண்டனம் செய்த ரத்னாயக்க கொலையுண்ட பழங்சிங்க உட்பட்ட மத்திய வங்கி ஊழியர்களுக்கும் மற்றும் காயமடைந்தோருக்கும் அனுதாபம் தெரிவிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் " ஹரிச்சந்திர பழங்கசிங்கவை அவர் மத்திய வங்கியில் சேர்ந்த 1970ல் இருந்து அறியும். சிறிது காலத்துக்குள் அவர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவரானார். அவர் மத்திய வங்கி ஊழியர்களிடையேயும் மற்றும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களிடையேயும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் தொடுத்த அனைத்துலக சோசலிசத்துக்கான போராட்டத்துக்கு தன்னை அர்பணித்துக் கொண்டிருந்தார்.

அவர் இலங்கை முதலாளி வர்க்கம் வடக்கு-கிழக்கு தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக நடாத்திவரும் இனவாத யுத்தத்தினை எதிர்த்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நடாத்திய பிரச்சாரங்களில் முன்னணியில் நின்றவர். விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதத்தை பழங்கசிங்க எதிர்த்தார். அவர் போராடி வந்த புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வேலைத்திட்டம் சிறீலங்கா-தமிழீழம் சோசலிசக் குடியரசு ஒன்றியத்தை இந்தியத் துணைக் கண்ட சோசலிசக் குடியரசு ஒன்றியத்தின் பாகமாக அமைப்பதை உள்ளடக்கிக் கொண்டிருந்தது.

ஐக்கிய முன்னணிக் கூட்டரசாங்கம் யூஎன்பி. அரசாங்கம் பொதுஜன முன்னணி அரசாங்கங்களுக்கு எதிராக தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைக் காக்க புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொடுத்த போராட்டங்களில் பழங்கசிங்க இணைந்து நின்றார். சமசமாஜ ஸ்ராலினிச நவசமசமாஜ இன்று மத்திய வங்கி ஊழியர் சங்க தலைமையில் உள்ளவர்கள் போன்ற துரோகத் தலைமைகளுக்கு எதிராக புரட்சித் தலைமையைக் கட்டியெழுப்ப வேண்டுமென புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வலியுறுத்துகின்றது.

பழங்கசிங்க இருந்த அரசியலின் சார்பில் நின்று வந்ததால் மத்திய வங்கி ஊழியர் சங்க பதவிகளுக்கு ஊழியர்களால் தெரிவு செய்யப்பட்டார். அவர் தனது மகனையு கம்யூனிஸ்ட் கழக அரசியல் கூட் ஊர்வலங்களிலும் கலந்து கொள்ளச் செய்துள்ள வங்கி ஊழியர்கள் புரட்சிக் கம்யூனிஸ்ட் வேலைத்திட்டத்துக்கு முக்கிய ஆதரவினை வழ குறிப்பிட்ட ரத்னாயக்க பழங்கசிங்க உட்பட்ட கம்யூனிஸ்ட் கழகத்தின் குழுவினர் அரசாங்கத்தி முறைகளில் இருந்தும் விடுதலைப் தாக்குதல்களில் இருந்தும் பாதுகாப்பு பெறும் பாதுகாப்பு கமிட்டிகளை அமைக்கும்படி மத்திய பிரச்சாரம் செய்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய வங்கியுள் இடம் பெற்ற குண்டுத் மக்கட் படு கொலைகளும் யுத்தத்தில் இருந்து சமாதானத்தை உருவாக்குவது எப்படி என்ற பிர தோற்றுவித்துள்ளது. அதனை புரட்சிக் கம்யூனிஸ முன்வைக்கும் வேலைத்திட்டத்தின் அடிப்பட தேடிக்கொள்ள முடியும். இந்த இறுதிச் சடங்குகள கொண்டுள்ள மக்களுக்கு புரட்சிக் கம்யூனிஸ் விடுக்கும் செய்தி அதுவே.

மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் சார்பில கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்திய குழு உறு ரீ.என்.நிஹிஷான் இரங்கல் உரை நி பழங்கசிங்கவின் மறைவின் பேரில் நான்காம் அனைத்துலகக் குழுவின் கிளைகள் புரட்சிக் கழகத்திற்கு தங்களது இரங்கல் செய்திகளை வைக்கன.

www.padippakam.com

# நவசமாசக்கட்சி மத்தியவங்கிக் குண்டுதாக்குதலை நியாயப்படுத்துகின்றது.

...காண
...ளர் – ஒடுக்கப்படும்
...க்கு ஒரு முக்கிய
... உண்டு. அவர்கள்
...முதலாளிவர்க்கத்தின்
... யுத்தத்துக்கு
...வும் ஜனநாயக
...களுக்காகவும்
...வேண்டியுள்ளது.

இலங்கையின் வலதுசாரி பப்லோவாத அமைப்பான நவ சமசமாஜக் கட்சித் தலைவரான விக்கிரமபாகு கருணாரத்ன இலங்கை மத்திய வங்கி ஊழியர்களுக்கு தமிழ்ழ விடுதலைப் புலிகள் தொடுத்த பயங்கரவாத குண்டுத் தாக்குதலை நியாயப்படுத்தும் விதத்தில் ஒரு ஆத்திமூட்டும் பிற்போக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கை கூறுவது இதுதான். "குண்டு வெடிப்பினால் சிறப்பாக இனவாதத்துக்கு எதிராக முன்னணியில் நின்ற மத்திய வங்கி ஊழியர்கள் தூள்தூளாகிப் போயினர். இந்தத் தாக்குதலின் பிரமாண்டமான தன்மையின் மூலம் ஒடுக்கு முறைக்கு உள்ளாகி படுமோசமான நிலைக்குள் தள்ளப்பட்ட தமிழ் மக்களின் மனோநிலையும் சிறப்பாக தமிழ் போராளி இளைஞர்களின் பெரும் குழப்ப நிலையுமாகும்.

கார்ல் மார்க்ஸ் சுட்டிக் காட்டியதுபோல் சகல வரலாற்று நிகழ்வுகளும் மக்களின் பொதுப் பங்களிப்புடனேயே இடம் பெறுகின்றன. இத் தாக்குதல் எழுச்சி பெறும் தமிழ் தேசிய இனத்தின் மனோநிலை என்ற யதார்த்தத்தையிட்டு கண்களை மூடிக்கொண்டவர்கள் எவரும் என்றும் கண்களைத் திறந்து உண்மையை ஏற்றுக் கொள்வர் என எதிர் பாக்க முடியாது. "

இந்த நவ சமசமாஜ கட்சித் தலைவர் கூறுவது என்ன? மத்திய வங்கி ஊழியர்களையும் அயலில் உள்ள நிறுவனங்களின் ஊழியர்களையும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களையும் உயிர்ப் பலி கொண்ட குண்டுத் தாக்குதலின் மூலம் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் மனோநிலையை வெளிக் காட்டிக் கொண்டுள்ளதாம் அத்துடன் நின்றுவிடாத கருணாரத்ன இந் நிகழ்வு மக்களின் பொது பங்களிப்புடன் சிருஷ்டிக்கப்படும் ஒரு வரலாற்று நிகழ்வு எனவும் பொரிந்து தள்ளியுள்ளார்.

இந்த அறிக்கை விடுதலைப் புலிகளின் பிற்போக்கு மக்கட் படுகொலைகளை நியாயப்படுத்துவதுடன் நின்றுவிடாமல் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான ஒரு ஆத்திரமூட்டும் சேறடிப்புமாகும். விடுதலைப் புலிகளின் மக்கட் படுகொலைகளை நியாயப் படுத்தும் பொருட்டு கார்ல் மார்க்சின் பெயரையும் துணைக்கு இழுப்பதன் மூலம் நவ சமசமாஜக் கட்சித் தலைவர் மார்க்சிசத்துக்கும் கரி பூசுகின்றார்.

தமிழ் – சிங்களம் பேசும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் இந்த ஆத்திரமூட்டும் பிற்போக்கு அறிக்கையை வன்மையாகக் கண்டனம் செய்வதோடு நவ சமசமாஜ பிற்போக்கு அரசியலையிட்டும் விழிப்பாக இருக்கவேண்டும்.. நவ சமசமாஜக் கட்சி விடுதலைப் புலிகளதும் அத்தகைய வேறு அமைப்புகளதும் பயங்கர நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுப்பதன் மூலம் சிங்கள – தமிழ் மக்களை மோதவைக்கத் திட்டமிட்டு செயற்படுகின்றனர் என நாம் குற்றம் சாட்டுகிறோம். நவ சமசமாஜக் கட்சியின் இந்த நடவடிக்கை ஆளும் வர்க்கத்தின் பிற்போக்கு திட்டங்களின் ஒரு பாகமாகும்.

பொதுஜன முன்னணி அரசாங்கம் வடக்கு – கிழக்கில் நடாத்தும் இனவாத யுத்தத்தின் மூலம் ஆயிரக் கணக்கானோர் உயிரிழந்ததோடு இலட்சக் கணக்கானோர் உறைவிடங்களைத் துறந்து அகதிகளாக வெளியேற நேரிட்டது. இவர்கள் பட்டினிக்கும் நோய் நொடிகளுக்கும் ஆட்பட்டுள்ளனர். நவ சமசமாஜக் கட்சி இந்த யுத்தத்துக்கு பொறுப்புச் சொல்லியாக வேண்டும். பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர வக்காலாத்து வாங்கிய இக் கட்சி இனவாத யுத்தத்துக்கு ஒரு மூடு திரையாக முன் வைக்கப்பட்ட " இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு" என்பதை அரவணைத்துக் கொண்டது. இது முன்னர் நவ சமசமாஜக் கட்சி ஜயவர்த்தனா அரசாங்கத்தின் வட்ட மேசை பேச்சு வார்த்தைகளுக்குள் நுழைந்து கொண்டு இனவாத யுத்த இயக்கங்களுக்கு முண்டு கொடுத்தது. 1987ல் இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பினை இக் கட்சி ஏகாதிபத்தியவாதிகளுக்கு அடிகொடுத்த முற்போக்கு நடவடிக்கையாக வர்ணித்தது.

இனவாத யுத்தத்தின் எடுபிடிகளான இவர்கள் இன்று அந்த யுத்தத்தின் தீய விழைவுகளை சாதகமாக்கிக் கொண்டு சிங்களம் பேசும் தொழிலாளர்கள் ஒடுக்கப்படும் மக்களை விடுதலைப் புலிகள் படுகொலை செய்வது நியாயமாகி உள்ளதாகக் கூறிக் கொள்கின்றனர்.

தமது தேசியவாத வேலைத் திட்டம் வங்குரோத்தடைந்து ஏகாதிபத்தியவாதிகளிடம் அடைக்கலம் தேடும் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் மனோநிலையையோ அல்லது எந்தவிதமான ஜனநாயக உரிமைகளையோ பிரதிநிதித்துவம் செய்யவில்லை. அது இந்த இனவாத யுதத்த்தை முடிவுக்கு கொணர்வதற்கும் ஜனநாயக உரிமைகளை உத்தரவாதம் செய்வதற்கும் தென் பகுதியில் உள்ள தொழிலாளார் ஒடுக்கப்படும் மக்களின் எதுவிதமான உதவியையும் எதிர்பார்க்கவில்லை. இனவாத யுத்தத்துக்கு எதிராக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தலைமையில் நீண்ட காலப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த மத்திய வங்கி ஊழியர்களைப் படுகொலை செய்வதில் விடுதலைப் புலிகள் இறங்கியதின் மூலம் அது நன்கு தெளிவாகியுள்ளது.

விடுதலைப் புலிகள் தேசிய ஜனநாயக உரிமைகளுக்காக தமிழ் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டுகின்ற ஒரு அமைப்பு அல்ல. அது தமிழ் ஒடுக்கப்படும் மக்களைப் பொறுத்த மட்டில் தனது பிற்போக்கு இயக்கத்துக்காக பொதுஜனங்களைக் கசக்கிப் பிழியும் ஒரு அமைப்பாக பரிணாமம் கண்டுள்ளது. நீண்ட காலத்துக்கு முன்னர் சிங்கள இராணுவத்திலிருந்து பாதுகாப்புப் பெறும் பொருட்டு தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் விடுதலைப்புலிகள் பக்கம் திரும்பியிருக்கலாம். ஆனால் இன்றோ பொதுமக்களிடையே விடுதலைப்புலிகள் தொடர்பான கொதிப்பு அதிகரித்த வண்ணம் உள்ளது. இந்த தேசியவாத முதலாளித்துவ அமைப்பு இன்று ஏகாதிபத்தியவாதிகளிடம் இருந்தே உதவியை எதிர்பார்க்கின்றது. அது ஏகாதிபத்தியவாதிகளின் முதலீடுகளைக் கொண்டு பராமரிக்கப்படும் ஒரு காலனியின் ஏஜண்டு ஆளும் வர்க்கமாக ஸ்தாபிதமாக விரும்புகின்றது.

பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளி வர்க்கமும் விடுதலைப புலிகளின் குண்டு வெடிப்பை தமது இனவாத யுத்தத்தை மேலும் உக்கிரமாக்கவும் தென்மாகாணங்களில் ஒடுக்குமுறை நிலைமையை உச்சக்கட்டத்துக்கு முன்னெடுக்கவும் பயன்படுத்திக் கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் குண்டுத் தாக்குதலை நியாயப்படுத்திய நவசமசமாஜக்கட்சிச் செயலாளரின் அறிக்கை பின்வருமாறும் குறிப்பிட்டது. "சிறப்பாக இனவாதத்துக்கு எதிராக முன்னணியில் நின்ற மத்தியவங்கி ஊழியர்கள் தூள்தூளாகிப் போயினர்."

இதையிட்டு கூறி வைக்க வேண்டியது இதுதான் இனவாதத்துக்கு எதிராக மத்தியவங்கி ஊழியர்களை முன்னணியில் நிறுத்தும் போராட்டத்திற்கு தலைமை தாங்கியது புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே. அவ்வாறே அப்போராட்டமும் நவசமசமாஜக் கட்சி அதன் மத்தியகுழு அங்கத்தவரான செ.தொ. கருணாரத்னவைக் கொண்டு புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் போராட்டத்தை உடைத்தெறிய நடாத்திய முயற்சியை தோற்கடித்தவாறே இடம்பெற்றது.

யூ.என்.பி.– பொதுஜன முன்னணி அரசாங்கங்களின் இனவாத யுத்தத்துக்கும் தமிழ் மக்கள் ஜனநாயக உரிமைகளின் பேரில் பிரச்சாரம் செய்யும் உரிமையை இரத்துச் செய்த ஆறாவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்துக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான அடக்குமுறைக்கும் அவ்வாறே தமிழ் முதலாளித்துவ பிரிவினை வாதத்துக்கும் எதிராக புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் நடாத்திய போராட்டத்துக்கு மத்தியவங்கி ஊழியர்களின் சங்கத்தினுள் இனவாத இராணுவ இயக்கத்துக்கு எதிராக சமர்ப்பித்த பிரேரணைகளையும் பிரச்சாரங்களையும் நவசமசமாஜக்கட்சி வன்மையாக எதிர்த்ததோடு புரட்சிக்கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர்களை வேட்டையாட மத்தியவங்கி நிர்வாகத்துடன் இணைந்து கொண்டது. சிங்கள – தமிழ் பேசும் தொழிலாளர்களின் அனைத்துலக ஐக்கியத்தினை உடைத்து எறியும் விதத்திலேயே இக்கட்சி செயற்பட்டு வந்துள்ளது வருகின்றது.

நவ சமசமாஜக் கட்சி வடக்கு – கிழக்கு மாகாண தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகளுக்காக நின்று வரவில்லை. அக்கட்சி செயலாளரின் அறிக்கை பின்வருமாறு குறிப்பிடுகின்றது தமிழ் மக்களுக்கு சமத்துவம் சுதந்திரம் சுயநிர்ணய உரிமையை வழங்கவும் வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றவும் சகல இடதுசாரி சக்திகளும் ஐக்கியப்பட வேண்டும்". நவசமசமாஜக் கட்சி தமிழ்மக்கள் என்ற பேரில் சுயநிர்ணய உரிமையை கோருவது தமிழ் முதலாளிகளின் பேரிலாகும். தமிழ் முதலாளித்துவ அரசினைத் திணிப்பதற்காகும்.

விடுதலைப்புலிகளின் குண்டுத் தாக்குதல் பொதுஜனமுன்னணி அரசாங்கம் யுத்தத்தை எவ்வாறு தென்மாகாணங்களுக்கு அழைத்துக் கொண்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. வடக்கு – கிழக்கு தமிழ் ஒடுக்கப்படும் மக்களை ஒடுக்கித் தள்ளவும் தென்மாகாணங்களில் தொழிலாளர் – ஒடுக்கப்படும் மக்களை இராணுவ – பொலிஸ் ஒடுக்குமுறையின் கீழ் அவர்களின் உரிமைகளை தவிடுபொடியாக்கி ஏகாதிபத்திய சுரண்டலுக்கு உள்ளாக்கவும் யுத்தத்தினை உக்கிரமாக்குவதன் மூலம் பொது ஜனமுன்னணி அரசாங்கம் முயற்சிக்கின்றது. இனவாத யுத்தத்துக்கு எதிராகவும் விடுதலைப்புலிகளின் பிரிவினைவாதத்துக்கு எதிராகவும் தென்மாகாணங்களிலும் வடக்கு – கிழக்கு மாகாணங்களிலும் தொழிலாளர் வர்க்கத்தினது ஒன்றிணைந்த போராட்டத்தினை இந்திய தொழிலாளர்வர்க்கத்தின் உதவியுடன் அபிவிருத்தி செய்யவேண்டிய பாரிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்ழ விடுதலைப்புலிகள் உட்பட்ட ஏகாதிபத்தியச் சார்பு தமிழ் முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களின் மூலம் தமிழ் தொழிலாளர் – ஒடுக்கப்படும் மக்கள் விடுதலையை அடைய முடியாது. தென் மாகாணங்களில் பொதுஜனங்கள் மீது விடுதலைப்புலிகள் நடாத்தும் தாக்குதல்களின் முக்கிய இலக்கு சிங்கள – தமிழ் தொழிலாளர்களிடையே அனைத்துலகவாத ஐக்கியம் உருவாவதை நாசமாக்குவதேயாகும். நவசமசமாஜக் கட்சி விடுதலைப்புலிகளின் குண்டுத் தாக்குதலை நியாயப்படுத்தி நனவான விதத்தில் முன்னுரிமை வழங்கியிருப்பது இந்த பிற்போக்கு நடவடிக்கைக்காகவேயாகும்.

தென்மாகாண தொழிலாளர் – ஒடுக்கப்படும் மக்களுக்கு ஒரு முக்கிய பொறுப்பு உண்டு. சிங்கள முதலாளிவர்க்கத்தின் இனவாத யுத்தத்துக்கு எதிராகவும் ஜனநாயக உரிமைகளுக்காகவும் போராட வேண்டியுள்ளது. அந்தப் போராட்டத்தின் மூலமே வடக்கு – கிழக்கு மாகாணங்களின் தொழிலாளர் – ஒடுக்கப்படும் மக்களை ஏகாதிபத்திய சார்பு முதலாளி வர்க்கத்துக்கு எதிராக ஐக்கியப்படுத்த முடியும். இதற்கான வேலைத்திட்டம் இந்தியத் துணைக்கண்ட சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக சிறீலங்கா – சோசலிசக்குடியரசு ஒன்றியத்துக்காகப் போராடுவதேயாகும். தமிழ் தேசிய இனத்தின் தேசியஜனநாயக உரிமைகளை இதன் அடிப்படையில் மட்டுமே உத்தரவாதம் செய்யமுடியும்.

நவசமசமாஜக் கட்சியின் வேலைத்திட்டம் இதற்கு முற்றிலும் எதிரான ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ வேலைத்திட்டமாகும். அது வடக்கில் விடுதலைப்புலிகள் உட்பட்ட தமிழ் முதலாளித்துவ இயக்கத்தைப் பலப்படுத்துகின்றது. வடக்கில் பொதுஜனமுன்னணி அரசாங்கம் இனவாதிகளுக்கும் இராணுவத்துக்கும் ஜே.வீ.பி. பாசிச இயக்கத்துக்கும் கைகொடுக்கின்றது. இக்கட்சி தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக எதிர்ப்புரட்சி சக்திகளைப் பலப்படுத்துகின்றது.

## ...சமசமாஜக்கட்சி அலுவலகத்தின் மீது பொலீஸ் வேட்டை.

...சமாஜக் கட்சி அலுவலகங்களுக்கு மேல் ...லீசாரினால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் ...டையை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ...க் கண்டனம் செய்கின்றது.

...மாஜக்கட்சிப் பத்திரிகையான "கரய" வின் ... கருத்துப்படி யூலை முதலாம் திகதி ...ளவில் பிரதி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ...ன் தலைமையிலான 40 பொலீசார் ...ஜக்கட்சியின் அலுவலகத்தினை ...ட்டனர்.

பொலீஸ்படையானது துப்பாக்கிகள், ...க்கிகள் கைக்குண்டுகள், ...கைக்குண்டுகள் ஆகியவற்றினால் ...யாகியிருந்தது.

...டவடிக்கை ஏன் மேற்கொள்ளப்படுகின்றது ...வித விளக்கத்தினையும் கொடுக்காமல் ...வர்களைப்பற்றிய விபரங்களை பொலீசார் ... கொண்டனர். அத்துடன் கட்சி [illegible] அனைத்து ஆவணங்களையும் இவர்கள் பார்வையிட்டனர்.

நவசமசமாஜக்கட்சி செயலாளர் பொலீசார் முற்றுகையிட்ட சந்தர்ப்பத்தில் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் நடந்துகொண்டிருந்ததாகவும் பொலீசாரினால் கூட்டத்தில் பங்குகொண்ட மத்தியகுழு அங்கத்தவர்களின் பெயர்கள் வற்புறுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தார். இந்த பொலீஸ் முற்றுகை மக்கள்முன்னணி அரசாங்கம் இலங்கை மின்சாரசபை வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களுக்கு எதிராக **"Operation Shock"** என்ற இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட சந்தர்ப்பத்திலேயே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

நவசமசமாஜக்கட்சியின் தலைவர்கள் மக்கள்முன்னணி அரசாங்கத்திற்கும் இந்த பொலீஸ் வேட்டைக்கும் உள்ள உறவுபற்றி ஒரு வார்த்தை தன்னும் குறிப்பிடவில்லை. இந்த வகையிலான ஒரு அரசியல்கட்சியின் அலுவலகங்களின் மீதான பொலீஸ் வேட்டை அரசாங்கத்தின் உயர்பதவிகளில் இருப்பவர்களின் அனுமதியின்றியோ அல்லது அவர்களுக்கு தெரியாமலோ இடம்பெறமுடியாது.

அரசாங்கத்தின் மேல்மட்டத்தில் நவசமசமாஜக்கட்சியின் தலைவர்கள் நெருங்கிய தொடர்பினை வைத்திருந்தும் இவர்கள் மக்கள்முன்னணி அரசாங்கத்தை பதவிக்கு கொண்டுவர அனைத்தும் மேற்கொண்டதும் பகிரங்க இரகசியமாகும்.

எனினும் இந்த பொலீஸ் வேட்டை தொடர்பாக இவர்கள் மக்கள் முன்னணி அரசாங்கத்திற்குள்ள தொடர்பை மூடிமறைக்கும் வெட்கம்கெட்ட முயற்சியில் இறங்கியுள்ளனர். ஏகாதிபத்திய எதிர்ப்புவாதிகள் என்று நாடகமாகும் அரசியல் போக்குகளை மட்டுமல்ல அனைத்து அரசியல் எதிர்ப்புக்களையும் மக்கள்முன்னணி அரசாங்கம் அடக்கியொடுக்க முயல்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. இது [illegible] சர்வாதிகாரத்துக்கான தயாரிப்பின் ஒரு பகுதியாகும்.

படிப்பகம்

www.padippakam.com

# இந்தியப் பொதுத் தேர்தல் சோசலிசப் பதிலீட்டுக்காக ரொக்சிஸ்டுக்கள் போட்டி

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவுடன் ஐக்கியம் பூண்ட இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகம் நடந்து முடிந்த இந்தியப் பொதுத்தேர்தலின் போது சென்னையிலும் கல்கத்தாவிலும் தொழிலாளர்கள் இளைஞர்கள் ஒடுக்கப்படும் மக்கள் என்போரிடையே முக்கியமான பிரச்சாரங்களை நடாத்தியது.

மூன்று முக்கிய முதலாளித்துவக் கூட்டுக்களுக்கு எதிராக ஒரு சோசலிசப் பதிலீட்டுக்காக போட்டியிட்ட சோ.தொ.க.தின் மூன்று வேட்பாளர்களும் மொத்தம் 1451 வாக்குகளை வெற்றி கொண்டனர். கல்கத்தாவில் டம் டம் மாவட்டத்தில் போட்டியிட்ட ஜோற்றன் றோய் 1058 வாக்குகளையும் வடசென்னையில் போட்டியிட்ட கே.பழனி 307 வாக்குகளையும் வில்லிவாக்கம் தொகுதியில் தமிழ்நாடு மாநிலசபைக்குப் போட்டியிட்ட எம்.கைலாசம் 76 வாக்குகளையும் வெற்றிகொண்டனர்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப்பகுதியான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் மூன்று அங்கத்தவர்கள் சோசலிசத் தொழிலாளர் கழக அங்கத்தவர்களுடன் இந்த தேர்தல் பிரச்சாரத்தில் கூட்டாக ஈடுபட்டிருந்தனர். 10.000க்கும் அதிகமான சோசலிசத்தொழிலாளர் கழகத்தின் தேர்தல் அறிக்கைகள் இந்த தேர்தல் பிரச்சாரத்தின்போது விநியோகிக்கப்பட்டன. இதில் 5000 பிரதிகள் தமிழில் சென்னையிலும் 4000 வங்காளி 1500 ஹிந்தி பிரதிகள் கல்கத்தாவிலும் விநியோகிக்கப்பட்டன.

இந்த தேர்தல் அறிக்கை மூன்று முக்கிய அடிப்படைக் கொள்கைகளை மையமாகக் கொண்டிருந்தது அனைத்துலகவாதம் தொழிலாளர்வர்க்கத்தின் அரசியல் சுயாதீனம் சோசலிச சமத்துவத்துக்கான போராட்டம் என்பவையே அவை.

சோசலிசத் தொழிலாளர் கழகம் இந்தியத் தொழிலாளர்களுக்கும் அனைத்துலகிலுள்ள அவர்களின் வர்க்க சகோதரர்களுக்கு இடையேயும் இந்தியாவின் உள்ளேயான ஹிந்து முஸ்லீம் கிறிஸ்தவர்களுக்கும் மற்றும் மொழிக் குழுக்களுக்கு இடையேயும் தேசிய உணர்வுகளைத் தூண்டிவிடும் சகலவிதமான தேசியவாதங்களையும் பிரிவினைவாதங்களையும் வன்மையாக எதிர்த்தது. அயல்நாடுகளான பாகிஸ்தான் பங்களாதேஷ் பர்மா நேபாளம் இலங்கையிலிருந்து அகதிகளையும் வெளிநாட்டுத் தொழிலாளர்களையும் திருப்பியனுப்பக் கோரும் தேசியவெறிப் பிரச்சாரங்களை அடியோடு நிராகரிக்கும்படி அவர்கள் தொழிலாளர்களைக் கோரினார்கள்

சோசலிசத் தொழிலாளர் கழகம் இலாபமுறைக்கு முடிவுகட்டும் ஒரு தொழிலாளர்–விவசாயிகள் அரசாங்கத்தை ஒரு சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் நிறுவும் திட்டத்தை முன்வைத்தது. அவர்கள் சகலருக்கும் கண்ணியமான தொழில் வீட்டுவசதி கல்வி சுகாதார வசதிகளை வழங்கும்படியும் சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யும்படியும் மரணதண்டனையை ஒழிக்கும்படியும் மகளிருக்கு எதிரான சகல பாகுபாடுகளுக்கும் முடிவுகட்டும்படியும் வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கும் அகதிகளுக்கும் எதிராக நெறிப்படுத்தப்பட்டுள்ள சகல சட்டங்களையும் அகற்றும்படியும் கோரினர்.



தோழர் பழனி



தோழர் ரோய்



தோழர் கைலாசம்

இது சகல உருவிலான தேசிய அடக்குமுறைகளையும் கண்டனம் செய்தது. காஷ்மீர் பஞ்சாப் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் இருந்து இந்திய இராணுவத்தை நிபந்தனையின்றி வாபஸ் பெறும்படியும் கோரியது. இந்தியன் ட்ரொக்சிஸ்டுகள் இந்திய முதலாளித்துவ அரசையும் பிரிவினைவாதத்தையும் எதிர்த்த அதேசமயம் இந்தியத் துணைக்கண்டத்தின் ஐக்கிய சோசலிசக் குடியரசினை ஸ்தாபிக்குமாறு அழைப்பு விடுத்தனர்.

சென்னையில் சோ.தொ.க. புரட்சிக்கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர்களுடன் லேலன்ட் ஆட்டோ தொழிற்சாலை துறைமுகம் அம்பத்தூர் கைத்தொழில் பேட்டை பீ.அன்ட்.சீ. மில் முதலான இடங்களில் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். பிரச்சாரத்தில் ஈடுபட்டோர் வேலைநிறுத்தம் செய்துவரும் அம்பத்தூர் கைத்தொழில் பேட்டையைச் சேர்ந்த கொரோமொன்டால் ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர்களுடன் கலந்துரையாடினர். அவர்கள் அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வுகள் வழங்கப்படாததை எதிர்த்து மூன்று மாதங்களாக வேலைநிறுத்தம் செய்து வந்தனர். அவர்கள் கடந்த தேர்தலில் எந்த ஒரு வேட்பாளருக்கும் தாம் வாக்களிக்கப் போவதில்லை எனத் தெரிவித்திருந்தனர். காரணம் அவர்கள் எவருமே தம்பக்கம் தலைவைத்துக் கூடப் படுக்கவில்லை என அவர்கள் தெரிவித்தனர். ஒரு மெகாபோனில் பேசி அனுதாபம் தெரிவிக்கவும் அவர்கள் தவறிவிட்டுதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர். சோசலிசத் தொழிலாளர் கழக வேட்பாளர் கே.பழனி தொழிலாளர்களை தனிமைப்படுத்தியதற்காக கொரமொன்டால் ஆடை ஊழியர்சங்கத் தலைமையை கண்டனம் செய்தார். அவர் தொழிலாளர்களை அவர்களின் சொந்த நடவடிக்கைக் குழுக்களை நிறுவும்படியும் கைத்தொழில் பேட்டையிலுள்ள ஏனைய தொழிலாளர் பக்கம் திரும்பும்படியும் வேண்டிக் கொண்டார்.

இரண்டு நாட்களுக்கு பழனி தலைமையிலான ஒரு குழு கோலார் தங்கச்சுரங்க பிராந்தியத்துக்குச் சென்றது. இது தமிழ்நாடு மாநிலத்துக்கு அருகிலுள்ள கர்நாடக மாநில எல்லைக்குச் சமீபமாக உள்ளது. அங்கு தொழிலாளர்களிடையே 135 தேர்தல் அறிக்கை பிரதிகள் விற்பனையாகின. அதில் பல தொழிலாளர்கள் அதனை ஏற்கனவே வாசித்திருந்தனர். அவர்கள் மத்தியிலுள்ள சோசலிசத் தொழிலாளர் கழக ஆதரவாளர்களுக்கு இது தபாலில் அனுப்பப்பட்டிருந்தது. இரண்டு தொழிலாளர்கள் சோ.தொ.க. த்தில் சேர இணக்கம் தெரிவித்தனர். அதில் ஒருவர் கூறியதாவது தொழிலாளர்களுக்கு ஒரு அனைத்துலகக் கட்சி அவசியமாகவுள்ளது. இக்கட்சி மார்க்சிசத்துக்காகப் போராடுகின்றது. ஆதலால் நான் இந்தக் கட்சியில் சேர தீர்மானித்துள்ளேன் என்றார்.

சோசலிசத் தொழிலாளர் கழகம் ஏப்ரல் 29ம் திகதி சென்னையில் உள்ள கொரதூர் பஸ்தரிப்பு நிலையத்தில் வெற்றிகரமான ஒரு பகிரங்கக் கூட்டமொன்றை நடாத்தியது.

இதில் சென்னை வேட்பாளர்களான பழனியும் கைலாசமும் பேச்சாளராக விளங்கினர். பீ.மோசஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சோ.தொ.க. தேசியச் செயலாளர் அருண்குமாரும் உரைநிகழ்த்தினார்.

பிராந்திய முதலாளித்துவக் கட்சியான தி.மு.க.வின் ஒரு வேட்பாளரும் அவரின் ஒரு கூட்டம் ஆதரவாளர்களும் குண்டர்களும் கூட்டம் நடைபெற்ற இடத்தை ஆக்கிரமித்து அதைக் குழப்பியடிக்க முயன்றனர். அவர்கள் தமது வாகனத்தில் இருந்த ஒலிபெருக்கி மூலம் கூச்சலிட்டனர். ஆனால் அங்கு நின்ற பொலீசார் அவர்களை அகற்ற மறு[...] ஆனால் இக்கும்பலுக்கு அங்கு எதுவி[...] கிட்டாததால் அவர்கள் சொற்ப நேரத்தில் [...] அகன்று சென்றனர். சோசலிசத் தொழில[...] பேச்சாளர்கள் இந்த ஆத்திரமூட்டும் நடவடி[...] பொலிசாரின் பாத்திரத்தையும் கண்டனம் செ[...]

கல்கத்தாவில் சோசலிசத் தொழிலா[...] புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் சேர்ந்த கு[...] சணல் ஆலை புடவை விமானநிலைய [...] தொழிலாளர்களிடையே பிரச்சாரம் செய்த[...] அறிக்கைகள் பாரநகர் அகர்பரா கமர்ச[...] கஹரகதா சணல் ஆலைகளில் விநியோக[...] தொழிலாளர்களில் பலர் உத்தரப் பிர[...] மாநிலங்களைச் சேர்ந்த ஹிந்தி மெ[...] தொழிலாளர் ஆவர். அதில் பெரும்பான்மை[...] வயதுக்கு மேற்பட்டவர்கள். இவர்கள் சிறி[...] பராமரிப்பு இல்லாததுமான குடிசைகளில் வ[...]

மேற்கு வங்காளத்தில் உள்ள சணல் [...] பெரும்பாலானவை காலனித்துவ ஆட்சி[...] பிரித்தானியரால் நிறுவப்பட்டவையாகும். [...] குறைந்த கூலிக்கு உழைப்பைச் சுரண்[...] மாநிலங்களைச் சேர்ந்த ஏழைக் கிராம[...] கொணர்ந்தனர். இந்த ஆலைகள் [...] காலாவதியான நிலையிலேயே உள்ளன.

கல்கத்தாவில் வீட்டுக்கு வீடு [...] பிரச்சாரத்தில் தொழிலாளர்களும் இ[...] வேட்பாளர் றோயின் பேச்சுக்கு கவனம் செ[...] தேர்தல் அறிக்கைகளையும் வாங்கினர். தே[...] உதவிய அவர்கள் மேற்கொண்டு கலந்துரை[...] நடாத்தவும் ஒழுங்குகள் செய்தனர்.

# புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர் பொலிசாரினால் கைது

புரட்சிக்கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவரான செல்லையா ராஜ்குமார் 22வயது அரலகன்வெல பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு மூன்றுமாத தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தப் பொலீஸ் வேட்டையை வன்மையாகக் கண்டனம் செய்யும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அவரை விடுதலைசெய்ய அனைத்து முயற்சிகளும் எடுக்கும்.

கைதுசெய்யப்பட்ட பின்னர் கிடைத்த தகவல்களின்படி அரலகன்வெல பஸ்நிலையத்தில் வவுனியா பஸ்சுக்காக காத்து நிற்கையில் இரண்டு பொலிஸ் உளவாளிகளால் அவர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இதன் பின்னர் இவரின் கைகால் உடையும் அளவுக்கு தாக்கப்பட்டதோடு தடுத்துவைக்கும் விதிகளின் கீழ் கொணரப்பட்டார். தாம் உயிர் பிழைக்க முடியாத அளவுக்கு விடயங்கள் வளர்ச்சி கண்டுள்ளதால் தமது உயிரைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கும்படியும் ராஜ்குமார் கேட்டுக்கொண்டுள்ளார். ராஜ்குமார் இனவாத யுத்தத்தினால் வீடுவாசல்களை இழந்த இலட்சோபலட்சம் தமிழ் ஒடுக்கப்படும் மக்களில் ஒருவர். இராணுவத்தினர் ஆனையிறவைத் தாக்க நடாத்திய தாக்குதலின் போது அவர் அங்கிருந்து வெளியேற நேரிட்டது. இதனால் அவர் வருடக்கணக்காக சாவகச்சேரி அகதிகள்முகாமில் இருக்க நேரிட்டது.இந்நிலையில் ஆனையிறவு உப்பளத்தின் தொழிலாளியான அவரது மாமாவான ஒரு மீனவராக வாழ்க்கையை ஆரம்பித்த ராஜ்குமார் திருமண வாழ்வில் நுழைந்து ஆறுமாதங்கள் ஆகின்றது.

இந்நிலையிலேயே அவர் கடந்த யூன் 12ம் திகதி வவுனியாவில் வாழும் தனது பெற்றோரைச் சந்திக்கும் பொருட்டு உடப்புவில் இருந்து புறப்பட்டார்.

உடப்பு வாழ்க்கையும் அவர்களுக்கு அவ்வளவு ஒரு சுமூகமானதாக இல்லை. பல தடவைகளில் இராணுவ–பொலீஸ் தாக்குதல்களுக்கு அவர்கள் உள்ளாக நேரிட்டது. புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் இந்த சந்தர்ப்பங்களில் இத் தாக்குதல்களுக்கு எதிராக இப்பிரதேசத்தில் பிரச்சாரம் செய்தது. இதனால் ஈர்க்கப்பட்ட தமிழ்–ஒடுக்கப்பட்ட மக்களில் ராஜ்குமாரும் ஒருவர். அவர் இப்பிதேசத்திலுள்ள இடம்பெயர்ந்தோர் மீனவர்கள் மற்றும் ஒடுக்கப்படும் மக்களிடையே கட்சியைக் கட்டியெழுப்ப போராடியுள்ளார். அவர் சரியான விதத்தில் விளங்கிக் கொண்டதன்படி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இனவாத யுத்தத்துக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராக சிங்கள–தமிழ் தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்துக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ள ஒரே அரசியல் கட்சியாகும். ஏகாதிபத்தியச் சார்பு ஒடுக்குமுறை முதலாளித்துவ முறையினைக் காப்பதில் ஈடபட்டுள்ள சகல கட்சிகள் இயக்கங்களுக்கும் எதிராக தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் பாதுகாப்புக்காகவும் இராணுவ



தோட்டத்தொழிலாளர் மத்தியில் பிரச்சாரம் செய்யும் எமது அங்கத்தவர்கள்

சோசலிசக்குடியரசு ஒன்றிய வேலைத்திட்டத்துக்காகவும் போராடும் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் ஏகாதிபத்தியசார்பு முதலாளித்துவத்தில் இருந்து மீட்சிபெற்று ஜனநாயகத்தை அடைய வேறுபாதை கிடையாது என்கிறது. ராஜ்குமாரை விடுதலை [...] வேலைகளில்புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக[...] ட்டுள்ளது. அதற்கு கை[...] தொழிலாளர்பாதை வேண்டிக்கொள்கின்றத[...]

படிப்பகம்

www.padippakam.com

# வதேச வர்க்கப் போராட்டத்தில் ஒரு புதிய கட்டம்

## சின் வேலைநிறுத்த அலையின் அரசியல் பாடங்கள்

பொதுச்சேவைத்துறை தொழிலாளர்களின் வேலைநிறுத்த இயக்கம் தனியே பிரான்சிலும் ஐரோப்பாவிலும் மாத்திரமன்றி ஐக்கிய ம் உள்ளடங்கலாக உலகம் பூராவும் வர்க்கத்தின் போராட்டத்தில் ஒரு புதிய கட்டியம் கூறுகிறது.

ணக்கான வேலைகளின் அழிப்பையும் க்கூடிய விதத்தில் பிரான்சின் நலன்புரி அழிப்பதற்கும் அரசுக்குச் சொந்தமான களை தனியார் மயமாக்குவதற்குமான ாதிபதி ஜக் சிராக்கினதும் பிரதம மந்திரி பயினதும் திட்டத்திற்கு எதிராக இரண்டு ம் மேலாக மில்லியன் கணக்கான ள் வேலைநிறுத்த நடவடிக்கைகளையும் ாட்ட ஊர்வலங்களையும் மேற்கொண்டனர்.

ளர்கள் தங்களது ஓய்வூதியத்தையும் வகளையும் சமூகத் தேட்டங்களையும் உறுதியாக நின்று புகையிரதப் மெற்றோ சேவை பஸ் கடற்பிரயாணம் ஸ்தம்பிதமடையச் செய்தனர். அவர்கள் சகரிப்பு அத்தியாவசிய சேவைகள் இடையூறு விளைவித்தனர். ஆசிரியர்கள் ர் மாணவர்கள் போன்றோரும் இச் சமூக இணைந்து கொண்டனர். பாரிஸ் மற்றும் ான நகரங்கள் முற்றுமுழுதாக முடங்கச் து.

லைநிறுத்த இயக்கம் வெள்ளைக் கொலர் ள் உத்தியோகத்தர்கள் சிறு விவசாயிகள் சொந்தக்காரர்கள் போன்றோரும் ான பரந்துபட்ட உழைக்கும் மக்களின் ரவினை வென்றுகொண்டது. இவர்கள் ஐக்கிய அமெரிக்காவில் உள்ளதைவிட யர்ந்த அளவிலான வேலையின்மை ளையும் அரசாங்கத்தால் கின்ற சுகாதார சேவையையும் தற்போது வழங்குகின்ற பிரான்சின் நலன்புரி மீதான அரசாங்கத்தின் தாக்குதலால் ள்ளனர்.

இயக்கத்தின் விஸ்தீரணம் பிரெஞ்சு த தனிமைப்படுத்தியது. அதே நேரத்தில் வீடன் ஜேர்மனி இங்கிலாந்து ஐரோப்பா லைநிறுத்தங்கள் எழுச்சியடைந்தன. பொதுச் றையிலான வேலைகளின் மீதும் சமூக ங்களின் மீதுமான இதையொத்த எதிராக டிசம்பர்–13ல் புருஸல்சில் தொழிலாளர்கள் ஒரு பிரமாண்டமான ஊர்வலத்தை நடத்தினர்.


வேலைநிறுத்தங்கள் ஐரோப்பா பூராவுமான வக் கொள்கையின் னத்தையும் கேள்விக்குள்ளாக்கியது. சு மீதான யூப்பேயின் தாக்குதல் மஸ்ரிச் யின் **(Maastricht Treaty)** – இதனது ள் ஜேர்மனியினாலும் அதனது மத்திய பண்டஸ் வங்கியாலும்**(Bundes Bank)** கின்றன– கீழான ஐரோப்பிய நாணய பில் நுரசழிநயெ ஆழநெவயசல ருழைெ பற்றுவதற்கு மையத்தில் உள்ளதாகும்.

முதலாளித்துவம் ஐரோப்பிய நாணய பை ஒரு ஒருங்கிணைந்த சந்தையையும் யும் ஸ்தாபிப்பதற்கும் அதனது அமெரிக்க எதிராளிகளுக்கு எதிராக ஐரோப்பிய பின் போட்டிப் பாத்திரத்தை அபிவிருத்தி க முன்னெடுக்கின்றன. இத் திட்டத்தின் ஐரோப்பாவின் சமூக நலன்புரி அமைப்பைக் விளங்குகிறது. பிரான்சிலும் ஜேர்மனியிலும் ண்டம் பூராவும் பெருவர்த்தகம் அதனது சலவை அதிகரிக்கின்றதும் சந்தைக்கும் ான பூகோளப் போராட்டத்தில் அதனது பலவீனப்படுத்துகின்றதுமான ள முடியாத ஊதாரித்தனமாக மில்லியன் க்கள் தங்கியுள்ள நலன்புரி சேவையைப்

வருடங்களாக அமெரிக்க ஆளும் வர்க்கம் லத்திட்டங்களை அழித்துக் கொண்டு தவேளையில் ஐரோப்பாவில் உள்ள அதன் இதனுடன் ஒப்பிடும்பொழுது குறைந்த ந்துக் கட்டுவதாய் விளங்குகின்றபோதிலும் நடவடிக்கைகளை எடுக்கின்றன. ஆனால் மீதான இன்றைய தாக்குதல் தொழிலாள மீதான தாக்குதலில் ஒரு புதிய பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இது லாப உள்ள ஒரு தீர்வு காணமுடியாத வெளிப்பாடாக வருகின்றது.

புரி சேவை– இது வரிவிதிப்பின் மூலமோ ரசாங்க கடன் வழங்கல் மூலமோ

பெற்றுக்கொள்ளப்பட்ட உபரி மதிப்பில் இருந்தான ஒரு குறைப்பேயாகும். இந்த உபரி மதிப்புத்தான்– ஒரு தொழிலாளி உற்பத்தி செய்த பெறுமதிக்கும் அவருக்கு வழங்கப்படுகின்ற கூலிக்கும் இடையிலான வித்தியாசம்– எல்லா லாபங்களினதும் மூலமாகும். தொழிலாள வர்க்கத்தின் மீதான சுரண்டலில் பிரமாண்டமான அதிகரிப்பு இருந்தும் உபரிமதிப்பின் பாரிய அளவு வீழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது ஏனெனில் உற்பத்தி நிகழ்வுப் போக்கில் இருந்து தொழிலாள வர்க்கத்தின் பரந்த தட்டினரை தொடர்ந்து அகற்றுவதற்கான ஆளும் வர்க்கத்தின் நகர்வினால் ஆகும்.




*யூப்பேயினது திட்டத்திற்கெதிராய் பிரான்சுத் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டம்.*

சந்தைக்கும் லாபத்திற்குமான இன்றய பூகோளப் போராட்டத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் ஒவ்வொரு பகுதியினரும் "சர்வதேச ரீதியில் போட்டித்திறன் மிக்கதாக" இருப்பதற்கு தொடர்ச்சியாக செலவுகளைக் குறைக்கவேண்டி உள்ள அதேவேளையில் அதற்கு கிடைக்கின்ற லாபத்தில் தொழிலாள வர்க்கத்திற்கான சமூக நலன்புரி கொடுப்பனவுகள் என்ற வடிவத்தில் ஏற்படுகின்ற எல்லாக் குறைப்புகளையும் குறைக்கவேண்டியுள்ளது. முதலாளித்துவ வாதிகளின் ஒரு கன்னை இவ்வழியில் செலவுகளை வெட்டுவதற்கு முன்னரேயே அதனது எதிராளி விரைவாக தொழிற்பட வேண்டியுள்ளதுடன் அல்லது ஒரு முட்டுச்சந்தியை முகங்கொடுக்க வேண்டிய அபாயம் உள்ளது. இவ்வகையில் போட்டிப் போராட்டத்தில் ஒரு புதிய சுற்று அசைவு உருவாக்கப்படுகிறது. இது ஒரு போதும் முடிவுறாத ஒரு நிகழ்வுப்போக்காகும்.

பிரெஞ்சு மக்களுக்கு இன்று முன்மொழியப்படும் சிக்கன நடவடிக்கைகள் ஒவ்வொரு நாட்டிலும் திரும்பத் திரும்ப மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இதனால்த்தான் இன்றய வேலைநிறுத்தங்களுக்கு மத்தியிலும் முழு ஐரோப்பிய முதலாளித்துவ வர்க்கத்தினதும் நலன்களின் பேரில் தொழிலாள வர்க்கத்தின் மீது ஒரு தோல்வியைச் சுமத்துவது எவ்வாறு என்பதை கலந்துரையாடுவதற்கு சிராக் ஜேர்மன் அதிபர் கோல் ஐ சந்திப்பதற்கு பறந்தார்.

புதிய அணுகுமுறை காலத்தில் இருந்த அனைத்து சீர்திருத்தங்களையும் கலைத்துவிடுகின்ற நிலையில் உள்ள அமெரிக்க ஆளும் வர்க்கம் தனது சொந்தக் கொள்கைகளுக்கு ஐரோப்பாவிலான எழுச்சியில் அபாயகரமான தாக்கங்களை தெளிவாக அறிந்து கொண்டுள்ளது. இதனால்தான் ஒரு சில பெரும் கூட்டுத்தாபனங்களால் சொந்தமாக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் ஒலிபரப்பு பத்திரிகைத்துறை பிரான்சிலான சமூக எழுச்சிகளைப்பற்றி மிகவும் அருமையாகவே செய்திகளை வெளியிட்டது.

ஆனால் பத்திரிகைத் தணிக்கையினால் இச் சம்பவங்களில் வெளிப்படுத்தப்படும் ஓர் அடிப்படை உண்மையை மாற்றிவிட முடியாது. வேலை நீக்கங்கள் வரவு செலவுத் திட்ட வெட்டுக்கள் அல்லது தொழிற்சாலை மூடல்கள் என்பவற்றிற்கு எதிரான எந்தவொரு போராட்டமும் சாத்தியமில்லை என்ற கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களதும் முதலாளித்துவ அரசியல்வாதிகளதும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களினதும் எல்லாப் பிரகடனங்களும் இருந்தும் இன்றைய எழுச்சி தொழிலாள வர்க்கத்தினது சமூக சக்தியையும் புரட்சிகர ஆழ்ந்த தன்மையையும் மீண்டும் ஒரு முறை சுட்டிக்காட்டியுள்ளது.

### தொழிலாள வர்க்கத்தின் தலைமை நெருக்கடி

ஆனால் பரந்துபட்ட இயக்கம் பிரான்சிலும் உலகம் புராவும் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் மிகவும் விமர்சன ரீதியான பிரச்சனையான ஒரு புதிய தலைமையினதும் புதிய அரசியல் மூலோபாயத்தினதும் தேவைக்கு விடைகொடுக்கவுமில்லை தன்னளவில் கொடுக்கவும் முடியாது.

பரந்துபட்ட விசாலமான வேலைநிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் இருந்தும் அதனது சொந்த ஆதரவு குறுகியும் கூட பிரெஞ்சு அரசாங்கம் அதிகாரத்தில்

குறிக்கின்றது. அதனது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த எதிர்காலமாக விளங்கியது அரசியல் சுலோகங்களின் வருகையின்மையாகும். சிராக் அரசாங்கத்தை தூக்கியெறிவதற்கான அழைப்பு எதுவும் விடப்படாததுடன் பிரான்சில் உள்ள எந்தவொரு அரசியல் போக்கும் இந்தக் கோரிக்கையை எழுப்பக்கூடவேயில்லை. வேலைநிறுத்த இயக்கத்தை ஆதிக்கம் செலுத்திய அரசியல் முன்னோக்கு அரசாங்கம் அதனது சமூகக் கொள்கைகளை மாற்றுவதற்கு பரந்துபட்ட அழுத்தத்தின் மூலம் சாதாரணமாக கட்டாயப்படுத்தப்பட முடியும் என்ற ஒரு பிழையான முன்னெதிர்பார்ப்பை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

அதனது எல்லா சமூக சக்திக்கு மத்தியிலும் பிரெஞ்சுத் தொழிலாள வர்க்கம் இன்றய போராட்டத்தினுள் ஒரு முன்கூட்டியே தயார் செய்யப்பட்ட அரசியல் மூலோபாயத்துடன் நுழையவில்லை. இதுதான் அதனது பாரிய பலவீனமாகும்.

இந்த விடைய நிலையிற்கான பொறுப்பு பழைய தொழிலாளர் கட்சி தொழிற்சங்க அதிகாரத்துவங்களிலேயே உள்ளது. வேலைநிறுத்தப் போராட்டங்களை அடக்கியும் வேலைவெட்டு சிக்கன நடவடிக்கைகளை சுமத்துவதில் ஆளும் வர்க்கத்துடன் கூடி உழைத்தும் இவர்கள் மீண்டும் மீண்டும் தொழிலாள வர்க்கத்தினை காட்டிக் கொடுத்துள்ளனர். இன்று பிரெஞ்சு தொழிலாளர்கள் சிராக் யூப்பே ஆகியோருக்கு எதிரான ஒரு அரசியல் பதிலீட்டின் வாழுந்தன்மையில் ஐயறவாக உள்ளார்கள் எனில் அது பெருமளவில் 1968ன் பொதுவேலை நிறுத்தத்தை ஸ்ராலினிச கம்யூனிஸ்ட் கட்சி காட்டிக்கொடுத்ததினதும் மிக அண்மையில் சோசலிஸ்ட் கட்சி மித்திரனால் தலைமை தாங்கப்பட்டும் ஸ்ராலினிஸ்ட்டுக்களால் பின் ஆதரவு வழங்கப்பட்டதுமான கூறப்பட்ட சோசலிச அரசாங்கம் ஒரு தசாப்தமாக பரந்துபட்ட வேலைவெட்டினை சுமத்தியும் சமூக வேலைத்திட்டங்களின் மீதான தாக்குதலை ஆரம்பித்து வைத்ததினதும் விளைவுகளினாலேயே ஆகும்.

இதன் மறுபக்கத்தில் முதலாளித்துவ வர்க்கம் பிரெஞ்சு சமூகத்தை தனது சொந்த நலன்களின் அடிப்படையில் மீளமைப்புச் செய்வதற்கான ஒரு திட்டவட்டமான திட்டத்தைக் கொண்டுள்ளதுடன் அது அரசில் அரசியல் அதிகாரத்தைக் கொண்டுள்ளமை இத் திட்டத்தை சுமத்துவதை இலகுவாக்குகின்றது. இது அதனுடைய பாரிய பலமாகும்.

பிரான்சின் நெருக்கடி ஒரு முட்டுச் சந்தியில் உள்ளது. தொழிலாள வர்க்கத்திற்கு புரட்சிகரத் தலைமை இன்மையினால் இறுதியில் அது வேலைக்குத் திரும்பக் கட்டாயப்படுத்தப்படும் என்பதைக் கணித்துக் கொண்டு சிராக்கும் யூப்பேயும் முழு பிரெஞ்சு ஆளும் வர்க்கமும் ஒரு பொறுத்திருக்கும் விளையாட்டினை மேற்கொள்கின்றனர். அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியினதும் சோசலிஸ்ட் கட்சியினதும் தொழிற்சங்க கூட்டுகளினதும் ஸ்ராலினிச சமூக ஜனநாயகவாத அதிகாரத்துவங்களின் மீதும் நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு தங்கியுள்ளனர். பிரெஞ்சு மூலதனத்தின் இந்த உயர்

அடைவதை தடுப்பதற்கு தலையிட்டுக்கொண்டுள்ள ஒரு தொகை குட்டி முதலாளித்துவ தீவிரவாத குழுக்களினால் வக்காலத்து வாங்கப்படுகின்றனர்.

தங்களது போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு பிரெஞ்சுத் தொழிலாளர்களுக்கு தேவைப்படும் அடிப்படையான கருத்துப்பாடுகள் எவை?

முதலாவதாக இப்போராட்டம் சிராக் யூப்பே அரசாங்கத்தை தூக்கி எறியவேண்டியுள்ளதுடன் ஒரு பதில் தொழிலாளர் அரசாங்கத்திற்கு அடிப்படையை உருவாக்கக் கூடிய தொழிலாளர் சபைகள் போன்ற தொழிலாள வர்க்கத்தின் பரந்துபட்ட ஜனநாயகக் கருவிகளை உருவாக்க வேண்டும்.

இரண்டாவதாக பிரெஞ்சுத் தொழிலாளர்கள் தங்களது சமூக நிலமைகளை மஸ்ரிச் திட்டத்தினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் முதலாளித்துவ ஆட்சியின் நிறுவனங்களிற்கு எதிராக முழு ஐரோப்பிய தொழிலாள வர்க்கத்தினதும் ஒருங்கிணைந்த நடவடிக்கையின் ஊடாகவே பாதுகாக்க முடியும்.

உத்தியோக பூர்வ தொழிற்சங்கங்களும் குட்டி முதலாளித்துவ தீவிரவாதக் குழுக்களும் இக் கருத்துப்பாடுகளை மிகவும் கசப்புடன் எதிர்க்கின்றன. போர்க்குணம் மிக்க வேலை நிறுத்தங்களும் பரந்துபட்ட எதிர்ப்புக்களும் போதுமானவை என்கின்ற பிரமையை அவர்கள் முன்னெடுப்பதுடன் இவ்விதமாக பரந்துபட்ட இயக்கத்தினை ஆளும் வர்க்கத்தின் கரங்களில் கொடுப்பதற்காக வேலை செய்கின்றனர்.

பிரெஞ்சு முதலாளித்துவ வாதிகள் தொழிற்சங்க அதிகாரத்துவத்தில் அதனது தங்கியிருப்பு பற்றி மிகவும் நனவாக உள்ளனர். தொழிற் சங்க அங்கத்தவர்களின் வீழ்ச்சி பற்றி குறிப்பிடுகையில்– பிரெஞ்சுத் தொழிலாளர்களின் 8 வீதத்தினர் மாத்திரமே தொழிற் சங்கங்களில் உள்ளனர்– வேலை கொள்வோர் கூட்டமைப்பின் தலைவர் ஜோன் கண்டியோ **(Jean Gandio)** ஒரு அண்மைய பேட்டியில் பின்வருமாறு பிரகடனப்படுத்தினார். "தொழிற் சங்கங்கள் மேலும் பலவீனம் அடையுமாயின் நாங்கள் எல்லாவற்றையும் இழந்துவிடுவோம். ஆகவே அவர்களது தலைகள் நீருக்கு மேலே இருப்பதற்கு நாங்கள் வழிகளைக் கண்டுகொள்ள வேண்டும்."

சோசலிஸ்ட் கட்சியினது தொழிற் சங்கம் நலன்புரி அரசு மீதான யூப்பேயின் தாக்குதலுக்கு வெளிப்படையாக ஆதரவு அளித்தமை பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியையும் **(P.C.F)**அதன் தொழிற் சங்கக் கூட்டான **C.G.T** யையும் **(Confederation Generale de Travailleurs)** அத்துடன் வலதுசாரி தொழிற்சங்கமான **FO** வையும் **(Force Ouvriere)** அரசுடனான பேச்சுவார்த்தைகளின் தலைமையில் இட்டது.

ஸ்ராலினிஸ்ட்டுக்கள் ஜேர்மனிக்கு எதிராக நடாத்தப்படும் பிரெஞ்சுத் தேசியவாதத்தை முன்னெடுக்கின்றனர். டிசம்பர் 9ம் திகதிய கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையான 'கியுமானிற்றே' **(L'Humaanite)** வேலை நிறுத்த இயக்கத்தை பற்றி பின்வருமாறு பிரகடனப்படுத்தியது "இது எங்களது

www.padippakam.com

உறுதிப்படுத்துகின்றது".

**C.G.T** யினதும் **F.O** வினதும் உத்தியோகத்தர்கள் யூப்பேயினது இடைநிலையாளர் ஜோன் மத்தியோலியுடனும் **(Jean Matteoli)** சமூக விடய அமைச்சர் ஜக் பாரோவுடனும் **(Jacques Barrot)** சந்தித்துக்கொண்டுள்ளனர். அவர்களது ஒரேயொரு கோரிக்கை சமூக பாதுகாப்பு சீர்திருத்தங்களை யூப்பேயுடனான நேரடிப் பேச்சு வார்த்தையின் மூலம் கலந்துரையாடுவது மட்டுமேயாகும். சோசலிசக் கட்சி தொழிற் சங்கத்துடன் இணைந்துகொண்ட குழு இனியும் யூப்பேயின் திட்டத்தை வாபஸ் வாங்குவது பற்றி வலியுறுத்திக் கொண்டிருக்கவில்லை.

குட்டிமுதலாளித்துவ தீவிரவாதக் குழுக்கள் ஸ்ராலினிஸ்ட்டுக்களுடன் நெருக்கமான கூட்டில் வேலைசெய்கின்றனர். **L.C.R** தன்னை பிழையாக ட்ரொட்ஸ்கிஸ்டாக பிரகடனப்படுத்திக் கொள்ளும் நான்காம் அகிலத்தின் ஐக்கிய செயலகத்தின் பிரெஞ்சுக் கிளை – அண்மையில் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியுடன் **(P.C.F)** தங்களது முதலாவது தொடர் கலந்துரையாடல்களை நடாத்தினர். பிரெஞ்சு முதலாளித்து வர்கத்திற்க்கான இக் கூட்டத்தின் முக்கியத்துவத்தை பிரதான முதலாளித்துவப் பத்திரிகையான லு மொன்ட் **(Le Mond)** "அலன் கிறிவினும் **(Alain Krivine L.C.R)** ன் தலைவர் றொபேட் கியுவும் **(Robert Hue)** கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் தமது பழைய விரோதத்தைப் புதைத்தனர்" என தலைப்பிடப்பட்ட ஒரு முன்பக்க கட்டுரையை பிரசுரித்ததில் காணக்கூடியதாக இருந்தது.

ஸ்ராலினிஸ்ட்டுக்களுடனான நெருக்கமான கூட்டிற்கரிய முன்னோக்கினை தயார் செய்கையில் டு.ஊ.சு ன் பத்திரிகையான றூஜ் சுழரபந இல் ஒரு கட்டுரை பின்வருமாறு பிரகடனப்படுத்தியது. "இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள புதிய உறவுகள் இறுதியாக ஒரு ஐக்கியப்பட்ட நடவடிக்கையை சிறப்பாக தேடிக்கொண்டுள்ள எல்லா போர்க்குணம் மிக்க கம்யூனிஸ்ட்டுகளுக்குள்ளும் ஆழ்ந்த அவசியமான கலந்துரையாடல்களுக்கு இட்டுச் செல்லுமென நாங்கள் நம்புகின்றோம்".

இக்கூட்டு பரந்துபட்ட இயக்கத்தில் "அரசியல் தேவையில்லை" **(No Politics)** என்ற கோஷத்தின் – தீவிரவாத குழுக்களால் முன்னெடுக்கப்பட்டது – வர்க்க உள்ளடக்கத்தை தெளிவாக்கியுள்ளது. இது சோசலிச அரசியலை அகற்றுவதற்கான கோஷமாக இருப்பதுடன் முதலாளித்துவ வர்க்கத்தின் அதிகாரத்துவ ஏஜன்சிகளது பிற்போக்கு அரசியலின் தொடர்ச்சியான ஆதிக்கத்தை உறுதிப்படுத்தும்.

## ஒரு புதிய கட்சிக்கான தேவை

வேலைநிறுத்த இயக்கத்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காகவும் அவகாசம் எடுத்துக் கொள்வதற்காகவும் அரசாங்கம் ஒரு தந்திரோபாய பின்வாங்கலை செய்யக்கூடும் ஆனால் இறுதியில் முதலாளித்துவ வர்க்கத்தினை அவர்களது வேலைத்திட்டத்தின் அடிப்படைத் திசையில் இருந்து மாற்றுவதற்கு அழுத்தம் கொடுக்க முடியாது ஏனெனில் இது லாப அமைப்பினது நெருக்கடியினால் இழுத்துச் செல்லப்படுகிறது.

தொழிலாள வர்க்கம் முதலாளித்துவ வரிகத்திடம் இருந்து அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும். அல்லது விரைவிலோ அன்றி சற்று தாமதமாகவோ அதனது உச்சரிப்புக்கு கீழ்பட கட்டாயப்படுத்தப்படும். ஒன்றில் தொழிலாள வர்க்கத்தின் நலன்களில் சமூகத்தை மீளமைப்பதற்கான ஒரு வேலைத்திட்டத்துடன் ஒரு தொழிலாளர் அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கான அரசியல் இயக்கத்தை இது அபிவிருத்தி செய்யவேண்டும். அல்லது இது பின்தள்ளப்படும்.

இந்த முன்னோக்கிற்கான போராட்டத்தில் பிரெஞ்சுத் தொழிலாளர்கள் ஒரே எதிரியை முகங்கொடுக்கும் தமது வர்க்க சகோதர சகோதரிகளுடன் நனவுபூர்வமாக இணைவதற்கு முயற்சிக்க வேண்டியுள்ளதுடன் ஒரு ஐக்கியப்பட்ட போராட்டத்தினூடு மாத்திரமே வெற்றியடைய முடியும். இந்த போராட்டங்களை வழிநடத்துகின்ற அரசியல் முன்னோக்கு சோசலிச ஐக்கிய ஐரோப்பிய அரசுகளுக்கான போராட்டமாக விளங்கவேண்டும். இது மட்டும் தான் முதலாளித்துவ ஐரோப்பிய நாணய ஒருங்கிணைப்புக்கும் பழைய அதிகாரத்துவங்களின் பிற்போக்கு தேசிய வாதத்திற்கும் பதிலீடாகும்.

ஆனால் பிரான்சில் போராடப்பட வேண்டிய பிரச்சனைகள் ஐரோப்பிய எல்லைகளையும் கடந்து செல்கின்றது. இவை பிரபஞ்சத்தன்மை வாய்ந்தவை. ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தொழிலாளர்கள் – ஐக்கிய அமெரிக்கா கனடா ஜப்பான் அவுஸ்திரேலியா லத்தீன் அமெரிக்கா பூராவும் – இதையொத்த தாக்குதல்களேயே முகங்கொடுக்கின்றனர். அமெரிக்கத் தொழிலாளர்கள் பிரான்சிலான சம்பவங்களை நோக்கி தங்களது கவனங்களை திருப்பவேண்டியுள்ளது. ஏனெனில் அவை தொழிலாள வர்க்கத்தின் சமூக சக்தியை வெளிக்காட்டுவதுடன் ஐக்கிய அமெரிக்காவில் வந்துகொண்டுள்ள எழுச்சிகளை முன்காட்டுவதுடனும் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தொழிலாளர்கள் முகங்கொடுக்கின்ற அடிப்படையான பிரச்சனைகளையும் பணிகளையும் எழுப்புகின்றன.

# இராணுவத்தின் கீழ் யாழ்ப்பாணக் குடாநாடு

யாழ்ப்பாணக் குடாநாட்டை இராணுவம் கைப்பற்றியதன் பின்னர் பொதுமக்களின் வாழ்க்கை வழமைக்குத் திரும்பிவிட்டதாக காட்ட பொதுஜன முன்னணி அரசாங்கமும் சகல முதலாளித்துவப் பத்திரிகைகளும் இடைவிடாது பிரச்சாரம் செய்து வருகின்றன. இந்த பிரச்சாரத்தின்படி மக்களுக்கு அவசியமானவை கிடைக்கின்றன. பாடசாலைகள் திறக்கப்பட்டுவிட்டன. பல்கலைக்கழகம் திறக்கப்படவுள்ளது. விவசாயிகளுக்கு அவசியமான அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் நிச நிலைமையோ இதற்கு முற்றிலும் முரண்பட்டது. இது இராணுவ – பொதுஜனமுன்னணி அரசாங்க இரும்புச் சுவர்களால் சூழப்பட்டுள்ள பகுதிகளில் இருந்துவரும் தகவல்கள் மூலம் ருசுப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த பல வருடங்களாக இனவாத யுத்தத்தின் மத்தியில் விடுதலைப்புலிகளின் அடக்குமுறைகளுக்கு முகம்கொடுத்து வந்த தமிழ்மக்கள் இன்று இராணுவ ஆட்சியின் கீழ் கொணரப்பட்டுள்ளனர்.

யுத்தத்தால் நாசமாக்கப்பட்ட கட்டிடங்களின் இடிபாடுகளால் நிரம்பி வழியும் யாழ்ப்பாண நகரினூடாக இராணுவ – பொலீஸ் தடைமதில்கள் எழுப்பப்பட்டுள்ளன. பொதுமக்களின் உணவுப்பொருள் தட்டுப்பாட்டைப் போக்க பொருட்கள் மூட்டைமூட்டையாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக முதலாளித்துவ அரசாங்க சார்பு பத்திரிகைகள் கூறிக்கொண்ட போதிலும் குடாநாட்டு மக்களின் தினசரி வேலை கூடையும் கையுமாக உணவுப்பொருள் தேடி அலைவதேயாகும். இதை பொதுஜனமுன்னணி அரசாங்கத்தின் கைக்கூலிகளாக செயற்படும் தமிழ் முதலாளித்துவக் கட்சி அங்கத்தவர்களின் பாராளுமன்ற பேச்சுக்கள் கூட நிருபித்துக் கொண்டுள்ளன.

யாழ்குடாநாட்டில் அரிசித் தட்டுப்பாட்டை போக்க உடன் நடவடிக்கை! யாழ் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபைத் தலைவர் இரண்டு மாதங்களில் பொருட்களின் விலைகுறையும் வர்த்தக அமைச்சர் என்றெல்லாம் அறிக்கைகள் தினமும் வெளிவந்து கொண்டிருந்த போதிலும் "யாழ்ப்பாணத்தில் அரிசி விலை உயர்ந்திருப்பது உண்மையே...அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது" என்பதை இந்த அதிகாரசபையின் தலைவரே ஒப்புக்கொண்டுள்ளார். கூட்டுறவுச் சங்கங்களில் அரிசி ஒரு கிலோ ரூபா 20ஆக விற்கப்படுகின்ற போதிலும் அங்கு தேவையான அரிசி கிடையாது. அவை காலையில் கடைதிறந்த சொற்ப வேளையிலேயே தீர்ந்து போகின்றது. இதனால் அரிசி விலை ரூபா. 140யும் தாண்டியுள்ளது. ஏனைய பொருட்களதும் நிலையும் இதற்கு ஒன்றும் குறைந்ததல்ல. சமீபத்தில் அரசாங்கத்தினால் அங்கு கூட்டிச்செல்லப்பட்ட ஒரு முதலாளித்துவ தமிழ்பத்திரிகை நிருபர் இந்த அவலத்தை பின்வருமாறு வருணிக்கிறார் "நாம் பிரயாணம்செய்த பஸ்வண்டி நின்றதுதான் தாமதம் மக்கள் எங்களை சூழ்ந்துகொண்டார்கள். அரிசிஇல்லை மா இல்லை உபஉணவுப்பொருட்கள் இல்லை என்ற வார்த்தைகளையே கேட்கவேண்டியிருந்தது."

யாழ் நகருக்குள் இராணுவம் நுழைந்திருப்பது வழக்கமான பெருந்தெருக்களினால் அல்ல. இவற்றுக்குஅக்கம்பக்கமாக உள்ள வீடு வளவுகள் தோட்டம் துரவுகள் என்பவற்றை இராணுவ கனரக வாகனங்கள் தகர்த்து தரைமட்டமாக்கியே சென்றுள்ளன. ரிவிரச இராணுவ நடவடிக்கைகளால் தமது வீடு வாசல்களைத் துறந்து வெளியிடங்களில் இருந்துவிட்டு பெரும் எதிர்பார்ப்புக்களுடன் திரும்பிய வலிகாமத்தைச் சேர்ந்த மக்களில் கணிசமான பகுதியினர் இன்னமும் கோவில்களிலும் பொதுஇடங்களிலும் தங்கியுள்ளதாகத் தெரிய வருகின்றது. பெரும் பிரச்சாரத்துக்கு மத்தியில் திரும்பிய சுமார் இரண்டுலட்சம் மக்கள் இராணுவத்தின் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் முடிவடையாததால் இங்ஙனம் தங்கியிருக்க நேரிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. யாழ் மாநகரசபை வட்டாரங்களைத் தவிர்ந்த பிராந்தியங்களில் பாடசாலை திறக்கப்பட்டோ அல்லது சிவில் நிர்வாகம் ஆரம்பமாகும் அறிகுறியோ காணப்படவில்லை. இம்மக்கள் குடாநாட்டுக்குள் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அங்கிருந்து வெளியேற அனுமதியில்லை.

விடுதலைப்புலிகள் இல்லாத இடங்களில் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் குண்டுகளின் வெடிப்பினால் பொதுமக்களும் சிறுவர்களும் இறக்கும் செய்திகள் வந்தபடியே உள்ளன. குடாநாடு இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் வந்த பின்னர் விடுதலைப்புலிகள் இடைக்கிடையே நடாத்தும் கெரில்லா தாக்குதல்களாலும் யுத்த அணிதிரட்டலாலும் மக்கள் ஒடுக்குமுறைக்கு உள்ளாகியுள்ளனர். அத்தோடு இளைஞர்களும் யுவதிகளும் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு கப்பலில் ஏற்றப்பட்டு கொழும்புக்கு கொணரப்படுவது பற்றிய செய்திகள் வந்தபடியே உள்ளன.

யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் திருமதி என்.கனகரட்ணத்தின் கருத்துப்படி மலேரியா நெருப்புக்காய்ச்சல் வயிற்றோட்டம் போன்ற நோய்கள் தீவிரமாகப் பரவி வருகின்றன.இவற்றுக்கு சிகிச்சை அளிக்க கொழும்பில் இருந்து மருந்துப் பொருட்களை எதிர்பார்த்துக் கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த யுத்தத்தினால் ஆஸ்பத்திரிக்கும் அதன் உடமைகளுக்கும் 50 மில்லியன் வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. டாக்டர்கள் வைத்திய நிபுணர்கள் ஆகியோருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இரண்டு முக்கிய தேசியப்பாடசாலைகளான இந்துக் கல்லூரியிலும் இந்து மகளிர் கல்லூரியிலும் 50சதவீதமான மாணவர்களே வருகை தருகின்றனர். ரிவிரச இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் சுமார் 2100 மாணவர்கள் கல்வி கற்ற இந்துக் கல்லூரியில் இப்போது 987 மாணவர்களே இருப்பதாகவும் 2058 மாணவிகள் இருந்த இந்து மகளிர் கல்லூரியில் 925 மாணவிகளே உள்ளதாயும் தெரிகிறது. ஆசிரியர்களின் எண்ணிக்கையும் நூற்றுக்கு ஐம்பது வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது.

யுத்தக் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் கல்வியைத் தொடர பாடசாலைகளுக்கு வரும் ஒடுக்கப்படும் மாணவர்களைப் பொறுத்தமட்டிலும் எதுவித கருணையும் காட்டப்பட மாட்டாது என்பதை இராணுவப் பேச்சாளரான பிரிகேடியர் சரத் முனசிங்க யாழ்நகரில் வைத்தே தெரிவித்துள்ளார் பள்ளிக்கூடப் பிள்ளைகள் என்பதற்காக அவர்களின் அடையாள அட்டைகளை சோதிக்காமல் அனுப்ப முடியாது" என்றுள்ளார். இடம் பெயர்ந்தவர்களில் வன்னி சென்ற மக்களின் நிலை பெரும் அவஸ்தை நிறைந்ததாக உள்ளது. அவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் – உலர் உணவு நிறுத்தப்பட்டுள்ளது. அடைபட்டுக் கிடக்கும் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் கிடையாது. நடைமுறையில் இருந்த இடாப்பில் கையெழுத்திடும் ஏற்பாடுகளும் நிறுத்தப்பட்டுவிட்டன. கிளாலி போக்குவரத்து அடைபட்டதாலும் வன்னி இராணுவ சோதனைக் கெடுபிடிகளாலும் இம் மக்கள் அங்கிருந்து வெளியேறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ரிவிரச இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து அமுலுக்கு வந்த நாளுக்கு 25 பேருக்கு அனுமதி வழங்கும் கோட்டா முறையில் எதுவித மாற்றமும் இல்லை. இடம்பெயர்ந்த மாணவர்களுக்கென யூலை 8ம் திகதி இடம்பெறவுள்ள க.பொ.த. சாதாரண பரீட்சையைத் தொடர்ந்து தமது குழந்தைகளுக்கு அங்கிருந்து வெளியேற வாய்ப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நூற்றுக்கணக்கான பெற்றோர்களும் உறவினர்களும் வவுனியாவில் கிழமைக்கணக்காகக் காத்துக் கிட[...] சொல்லும் தரமன்று.

யாழ்ப்பாணக் குடாநாட்டை [...] கைப்பற்றிக்கொள்ள பெ[...] அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கிய தம[...] கூட்டணி பீ.ஆர்.எல்.எப். ஸ் பீடீ.பி. [...] தமிழ் முதலாளித்துவ குழுக்கள் இல[...] மக்களிடையே தமது ஆதிக்கத்தை நிலை[...] செல்ல ஏற்பாடு செய்து தருமாறு [...] கெஞ்சிக் கொண்டுள்ளன. "தமிழ் ஆ[...] யாழ்ப்பாணம் வந்திறங்க அனுமதிக்க [...] மக்கள் தம்மைக் கேட்டுக்கொண்டுள[...] அரசாங்கம் இராணுவ ஆட்சியைத் [...] காலில் நிற்கின்றது. வெளிநாட்டு மு[...] தனது கண்காணிப்பின் கீழ் இ[...] இறக்குவதே அரசாங்கத்தின் திட[...] முதற்கட்டமாக ஜனாதிபதி கடனுத[...] நாடுகளின் தூதுவர்களுடன் யூன் [...] பேச்சுவார்த்தை நடாத்தினார். [...] செய்திகளின்படி இவர்கள் அரசியல் [...] ஏற்படுத்தும்படியும் ஐ.நா. வேலைத்திட்ட[...] நடவடிக்கை எடுக்கும்படியும் [...] கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

இதே சமயம் ஏகாதிபத்தியத்திடமிருந்[...] எதிர்பார்க்கும் பிரபாகரனின் விடுதலைப்பு[...] இந்தியாவின் புதிய அரசாங்கத்திடமி[...] தமிழ்நாடு மாநில அரசாங்கத்திடமிருந்[...] வேண்டிக்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டை இராணுவ[...] கொணர்ந்ததும் கிழக்கு மாகாணத்தில் இ[...] இராணுவ நடவடிக்கைகளும் அந்தப் [...] இலங்கை முதலாளிகளின் [...] போட்டுக்கொள்ளும் திட்டம் மட்டுமல[...] யுத்தம் இந்தப் பிரதேசங்களில் மக்க[...] ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கத் [...] இருப்பதோடு அது தென்[...] இராணுவமயத்தை விஸ்தரிக்கும் [...] நேரடியாக இணைந்து கொண்டுள[...] முதலாளித்துவத் தலைவர்களின் ஆ[...] பிற்போக்கு திட்டத்துக்கு கிடைத்துள்ளது[...]

விடுதலைப்புலிகளின் [...] பொதுஜனங்களின் மீது கொடிய அ[...] இறக்கப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள[...] வெறுப்பும் எதிர்ப்பும் பரந்து [...] பொதுஜனமுன்னணி அரசாங்கத்தின் [...] யோசனைகள் எனப்படுபவை [...] ஒடுக்குமுறைக்கு எதுவிதமான [...] வழங்கிவிடாது. அது பிற்போக்கு அரசிய[...] வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்[...] மூடுதிரையாகப் பயன்படுத்தப்பட்டு வருகி[...] ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தி[...] செலவினங்களுக்கான ஒதுக்கீடு 3800 கோ[...] 4600 கோடியையும் தாண்டியுள்ளது. அவ[...] இதை மேலும் அதிகரிக்க [...] தீர்மானித்துள்ளதாக பிரதிநிதி அமைச்ச[...] வெளிநாட்டுப் பத்திரிகையாளர் மத்தியி[...] கூறியுள்ளார். இராணுவத்துக்கும் பொ[...] 10000 பேரை புதிதாகத் திரட்ட பொ[...] அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. யுத்தம் [...] பேரழிவு மக்கள் மத்தியில் பெரிதும் [...] கொண்டுள்ள நிலையில் [...] இராணுவத்திற்குத் திரட்ட அரசாங்க[...] பிரச்சார இயக்கத்தினை முன்னெடுக்[...] இருந்த போதிலும் எதிர்பார்த்த இலக்கினை [...] எட்டமுடியாது போய்விட்டது. நூற்றுக்கு[...] வேலையின்மைக்கு பலியாகிக் [...] நிலையிலேயே இது இடம்பெறுகின்றது.

தமிழ் – சிங்களம் பேசும் தொழிலாளர[...] மக்களின் முன்னுள்ள இன்றைய [...] சிறீலங்கா – தமிழீழ சோசலிசக் குடியரசு ஒ[...] அவர்களை ஒன்றிணையச்செய்து போரா[...] இந்த யுத்தம் எமது யுத்தம் அல்ல! [...] ஒருசதமோ ஒரு சதமோ ஒரு ஆளோ [...] வடக்கு – கிழக்கிலிருந்து இராணுவத்தை [...] எனக் கோருவதன் மூலம் தென்[...] தொழிலாளவர்க்கம் தமிழ் தொழிலாளர[...] மக்களுடன் சகோதரத்துவத்தை வளர்த்து[...] அவர்களின் பாதுகாப்பை ஊர்ஜிதம[...] முன்செல்ல வேண்டும். தொழிலாள[...] போராட்டங்கள் வளர்ச்சிபெறும் ஒரு நில[...] ஒரு சோசலிசப் பதிலீட்டுக்கான [...] தீர்க்கமானது. தொழிலாளவர்க்கம் [...] பதிலீட்டை முன்வைக்கத் த[...] முதலாளிவர்க்கம் இராணுவ சர்வாதிகார[...]



யாழ்ப்பாணத்திற்கு திரும்பி செல்லும் அகதிகள்

www.padippakam.com

# ாலினின் பாரிய பயங்கரதின் மூலங்களும் விளைவுகளும்.

ஷ்ய சோசலிச வரலாற்றாசிரியரான வடிம்
Glasgow பல்கலைக் கழகத்தில் மார்ச்
ட்டது. இவர் ரஷ்யாவில்
5 தத்துவவியல் பேராசிரியரும்
ள்ள சோவியத் பல்கலைக்கழகத்தின்
யின் தலைவர்களில் ஒருவரும்
–1930 காலப்பகுதியின் ஸ்ராலினுக்கு
த்தின் ஆய்வுகள் தொடர்பாக உலக
கமைகளை பெற்றவர்களில்
வர் சோவியத் யூனியனினுள்
எதிராக போராடியவர்களின் வரலாறு
ங்கள் அடங்கிய புத்தகத் தொகுதி
உள்ளார். இதில் 3 பாகங்கள்
ந்துவிட்டது.

ட்ட 3 பாகங்களிலும் லெனினினது
ன காலங்கள் தொடர்பாகவும் 1923
ர்கள் உருவாக்கப்பட்டது
936ல் நிகழ்ந்த மொஸ்கோ
தொடர்பாகவும் எழுதப்பட்டுள்ளது. 4ம்
37ல் நிகழ்ந்த பயங்கர களையெடுப்பு
றுதி 6ம் பாகம் 1938 40
சோவியத் அரசினாலும் அதன்
னாலும் லியோன் ட்ரொட்ஸ்கியை
ற்கு மேற்கொள்ளப்பட்ட சதிகள்
ஆராய்கின்றது.

ான்காம் அகிலத்தினால் ஒழுங்கு
தொடர் விரிவுரைகளில் ஒன்றாகும்.
ில் 400 மாணவர்கள் தொழிலாளர்கள்
மது ஆதரவைக் காட்டினர். அத்துடன்
அவுஸ்திரேலியாவில் நிகழ்த்திய
500 க்கு மேற்பட்ட மாணவர்கள்
லாற்றாசிரியர்கள் தொழிலாளர்கள்
இவ் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த
டுத்தனர்.

வெளியிடுவதன் மூலம்
ன தொழிலாளர்களது அரசியல்
பதிலை வழங்க முடியும் என்ற
ழிலாளர் பாதையின் சார்பில்
ம்.

தொடர்பான உலகின் முக்கிய
ங்களில் ஒன்றான இங்கு பேசுவதில்
றேன்.

று மனித வரலாற்றில் ஒரு துன்பகரமான
டர்பாக கலந்துரையாடவுள்ளோம். இது
ரலாற்று ரீதியான கலைரீதியான பல
எழுதப்பட்ட போதிலும் பெரும்பாலும்
புரியாததொன்றாகவே இருக்கிறது.
பல தசாப்தங்களும் மக்கள் பாரிய
கூறப்பட்டது தொடர்பாகவோ அல்லது
என கூறப்பட்டது தொடர்பாகவோ
**KOV** காலகட்டம் அல்லது எம்மால்
குறிப்பிடப்படும் 1937 என்பது
அறியவேண்டியிருக்கும். இது
நாவல்கள் நாடகங்கள் திரைப்படங்கள்
ுள்ளது. நான் இவற்றில் ஒரு
ிப்பிட விரும்புகிறேன். அது ரஷ்யாவில்
மற்கில் எழுதப பட்ட **HEMINGWAY**
ருக்காக அந்த மணி ஒலித்தது" **(FOR**
**BELL TOLLS)** என்பதாகும் இது
நிகழ்வுகளை உள்ளடக்கியுள்ளது.

ளையெடுப்பு மனிதகுல வரலாற்றில் ஒரு
யாத நிகழ்வாகும். எமது நூற்றாண்டில்
ிரான இரத்தம் தோய்ந்த பாரிய ஒடுக்கு
கெழ்ந்த போதும் இது ஒரு
ாகும். ஹிட்லரின் சித்திரவதை
கொல்லப்பட்டவர்களை விட அதிக
ராலினால் கொல்லப்பட்டனர். நான்
த சென்றிருந்தபோது 1915ம் ஆண்டு
பால் ஒருசில நாட்களில் 10 லட்சம்
கொல்லப்பட்டதாக உள்ளூர்வாசி
ரிவித்தார். இவை இனரீதியான
ன் உதாரணமாகும். நான் இன்று
ாவில் நிகழ்ந்த படுகொலைகள்
உங்களுக்கு மேலதிகமாக
ல்லை. இந் நிகழ்வுகள் எதுவுமே
றவேற்றும் படையால் மக்கள் செய்யாத
ாத இக் கொடிய குற்றங்களிலிருந்து
ுவிப்பதற்காக செய்யப்பட்டவை அல்ல.

சாவியத் வரலாற்றில் மூன்று முக்கிய
ாடர்பாக பார்ப்போமாயின் முதலாவது
உள்நாட்டு யுத்தம் இரண்டாவது
ா முறையில் செய்யப்பட்ட

கூட்டுப்பண்ணையாக்கல் மூன்றாவது பாரிய பயங்கரவாத காலகட்டம். முதல் இரண்டு நிகழ்வுகளுக்கும் ஒரு வரலாற்று ஒற்றுமை அல்லது சமாந்தரம் இருப்பதை காணலாம். உதாரணமாக சோவியத் யூனியனின் உள்நாட்டு யுத்தத்திற்கும் 19ம் நூற்றாண்டின் மத்தியில் நிகழ்ந்த அமெரிக்க உள்நாட்டு யுத்தத்திற்கும் ஒரு பொதுத்தன்மை இருப்பதை காணலாம். ட்ரொட்ஸ்கி இவ் இரு யுத்தத்தினையும் ஒப்பிட்டு ஒரு புத்தகம் எழுத இருந்தார். பலாத்கார கூட்டுப் பண்ணையாக்கல் இது 6 வருடங்கள் நிகழ்ந்தது. இது ஒரு உள்நாட்டு யுத்தத்திற்கு ஒப்பிடக்கூடியது ஏனெனில் அது நடைமுறைப்படுத்தப்பட்ட கொடிய வழிமுறைகளும் அதற்காக ஸ்ராலினால் பிரயோகிக்கப்பட்ட பலாத்கார வழிமுறைகளுமாகும். நாங்கள் இப் பலாத்கார கூட்டுப்பண்ணை முறைகளுக்கும் பிரெஞ்சுப் புரட்சியின் பின்னர் நிகழ்ந்த **"Vendée"** இற்கும் சமாந்தரங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் வரலாற்றாசிரியர்கள் எவ்வளவு முயன்றபோதும் அவர்களால் சோவியத் யூனியனின் உள் நிகழ்ந்த பாரிய பயங்கரத்துக்கு இணையான முக்கிய நிகழ்வு ஒன்றையும் காணமுடியாமற்போனது.

இந் நிகழ்வுகள் தொடர்பாக நீங்கள் அறிந்துள்ளீர்கள் அல்லது விளங்கிக் கொண்டுள்ளீர்கள் என கருதுகையில் எனது நினைவில் உள்ளது இந்த பாரிய களையெடுப்பு தொடர்பாக இருக்கும் புனைகதைகளேயாகும். இது தொடர்பாக முதலாவதும் முக்கியமானதும் பாரிய பயங்கரங்கள் தொடர்பான புள்ளிவிபரங்களாகும். புத்தகத்திலிருந்து புத்தகத்திற்கு ஆய்விலிருந்து ஆய்விற்கு பாதிக்கப்பட்டவர்களின் தொகை அதிகரித்துக் காட்டப்படுகின்றது. உதாரணமாக **Anton Antonov-Ovseenko** ஆல் எழுதப்பட்ட **Portrait of a Tyrant** ஒரு கொடுங்கோலனின் சொரூபம் என்ற மேற்குலகில் பரவலாக அறிந்திராத புத்தகத்தில் 1935–41 க்கு இடையில் 19,400,000 பேர் லூப்யன்காவிற்கு **(Lubyanka)** மொஸ்கோவில் இருந்த **GPU** தலைமையகம் கொண்டு செல்லப்பட்டதாகவும் அதில் 70 லட்சம் பேர் கொல்லப்பட்டதாகவும் மீதிப்பேர் முகாங்களுக்கு அனுப்பப்பட்டதாகவும் எழுதுகின்றார். இவர் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் அரசியல் நிர்ணய சபைக்கு **KGB** யினால் கொடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றை ஆதாரமாக கொண்டுள்ளேன் என்கிறார். யுடநஒயனெநச **Solzhenitsyn** இனால் எழுதப்பட்ட வூந குசைளவ ஊசைஉடந முதலாவது சுற்று என்ற புத்தகத்தில் மேலும் சற்று திரிக்கப்பட்ட ஆய்வு ஒன்றை கொடுக்கின்றார். சிறையிலும் முகாங்களிலும் இருந்தவர்களின் தொகையை அவர்களே அதிகரித்துக் கூறியது அவர்களது தனிப்பட்ட குணாம்சத்தை காட்டுவதாக வஞ்சனையுடன் எழுதுகின்றார். அவர் தனது புத்தகத்தில் சிறையில் இருந்தவர்கள் பின்வருமாறு கூறியதாக எழுதுகின்றார். "அரசாங்க அதிகாரிகள் சிறையின் அதிகாரகள் நிர்வாகிகள் முபுடீயினர் மட்டுமே சிறைக்கு வெளியே உள்ளனர்" என கூறியதாக குறிப்பிடுகின்றார். **Solzhenitsyn** 12–15 லட்சம் பேர் மட்டுமே சிறைவைக்கப்பட்டிருந்ததாக குறிப்பிட்டு விட்டு 30 லட்சம் பேர் சிறையில் இருந்ததாக சிறையில் இருந்தோர் கூறியதாக எழுதுகின்றார். ஆனல் சிறையில் இருந்தோர் சிறையிருந்தோரின் தொகையை இரண்டு மடங்காக கூட்டி காட்டியிருந்தாலும் ளுழடணாநவைளலெஇ உண்மையில் சிறையிருந்தோரின் தொகையை நான்கு அல்லது ஐந்து மடங்கு அதிகரித்து காட்டுகின்றார். உண்மையான புள்ளி விபரங்களை திரித்ததற்கான முக்கிய காரணங்களில் ஒன்று சோவியத் யூனியனில் இருந்த கட்சி அதிகாரத்துவத்தின் சூதுவாது தன்மையையும் இவர்கள் 1980களின் இறுதியிலும் 1990ன் ஆரம்பங்களிலும் தங்களது கைகளில் இந்த உண்மையான தகவல்களை மறைப்பதற்குமாகும்.

## ஒரு தெளிவான சித்திரம் விபரணம்

இப்போது நிலைமை மிக தெளிவடைந்திருப்பதுடன் நாம் உண்மையான தகவல்கள் தொடர்பான மேலதிக விளக்கத்தையும் பெற்றுள்ளோம். நான் எனது ஆய்வுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்த நான்கு வேறுபட்ட தகவல்களையும் புள்ளி விபரங்களையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். 1954ம் ஆண்டளவிலிருந்து மத்தியகுழுவிற்கும் அரசியல் நிர்ணய சபைக்கும் **KGB** யால் அனுப்பப்பட்ட தகவல்கள் சனத்தொகை மதிப்பீட்டாளர்களால் 1937இ 1939 ம் ஆண்டு சனத்தொகை மதிப்பீட்டிற்காக செய்யப்பட்டதாகும். அந்தநேர சிறையில் இருந்தோரின் கணக்கெடுப்பும் செய்யப்பட்டது. அதிகாரத்துவம் இந்த கணக்கெடுப்பில் ஒரு பிரத்தியேக கவனத்தை கொணடிருந்தது. அதாவது இந்த கணக்குகள் மிகச் சரியாக எடுக்கப்பட்டு பதிவேடுகளில் குறிக்கப்பட்டிருந்தது. முகாங்களின் அதிகாரிகளுக்கு இவ் உண்மையை அதிகரித்துக் காட்டவேண்டுமென்ற தேவை இருக்கவில்லை ஏனெனில் கைதிகளின் எண்ணிக்கை உற்பத்தி செய்யவேண்டிய பொருட்களின் கணிப்பீட்டுக்கு தேவையாக இருந்தது. இறுதியாக நான் 1954ல் தொடங்கி 1992ல் முடிவடைந்த புனர்நிர்மாணம் செய்யப்பட்டவர்களின் தொகையை கூற விரும்புகிறேன்.

ஒருவர் இவ் எல்லா தகவல்களையும் ஒப்பிடுவாரானால் ஸ்ராலினின் காலத்தில் அரசியல் காரணங்களுக்காக ஒடுக்குமுறைக்கு உள்ளானோரின் தொகை 40,000,000 4மில்லியன் ஆகும். கொல்லப்பட்டவர்களின் தொகை 700,000 இருந்து 800,000 வரை ஆகும். உண்மையில் இத்தொகையானது எந்நிலைமைகளிலும் திகைப்படையச் செய்ததோடு உலக வரலாற்றில் இவ்வளவு தொகையிலான மக்கள் அரசியல் காரணங்களுக்காக ஒடுக்கப்படவில்லை. இவர்களில் அரைவாசியினர் 1937–38க்கும் இடையில் சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர். மரணதண்டனைக்கு உள்ளானவர்களினதும் தொகை சோவியத் வரலாற்றில் அது நீடித்திருந்த முழு நாட்களில் தண்டனைக்கு உள்ளானவர்களின் தொகையைவிட 6 மடங்கு



வாடிம் ராகோவின்

அதிகமானதாகும்.

மேலும் இப் பாரிய பயங்கரம் தொடர்பான பல கட்டுக்கதைகள் புத்தகத்திலிருந்து புத்தகத்திற்கு வேறுபட டதாக காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக ஸ்ராலினின் பயங்கரத்தை எதிர்த்தமைக்காக மத்திய குழுவினதும் அரசியல் நிர்ணய சபையினதும் முழு அங்கத்தவர்களும் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் ஒரு கட்டுக்கதையும் உள்ளது. இதையும்விட புகாரினின் தீரத்தனமான நடவடிக்கைகளுக்காக கைது செய்யப்பட்டதாக ஒரு புனைகதையும் உண்டு. ஆனால் சகலவகையறாக்களிலும் மிக வித்தியாசமான நோக்குடன் எழுதப்பட்ட புத்தகங்களிலும் உள்ள மிகவும் அடிப்படையான புனைகதை என்னவெனில் இந்த பாரிய களையெடுப்பிற்கான முக்கிய காரணம் முட்டாள்த்தனமான உணர்வற்ற ஸ்ராலினின் மனநோய்தான் என்பதே. இப் புனைகதைகளின் பிரதிநிதிகளுள் குருச்சேவும் அவரது கூட்டாளிகளும் அடங்குவர். இதன் மற்றய பிரதிநிதிகள் 1980ன் முடிவிலும் 1990ன் ஆரம்பத்திலும் சோவியத் யூனியனுள் இருந்த பலவகை எழுத்தாளர்களாவர். இப்படியான போக்கை நான் கம்யூனிச விரோதிகளானகளான **Solzhenitsyn, Robert Conquest** போன்றோரின் எழுத்துக்களிலும் காணக்கூடியதாக இருந்தது.

எல்லாவற்றிற்கும் முதலாவதாக நான் ஸ்ராலினின் மனநோய் **(Paranoia)** தொடர்பாக ஒருசில வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன். ஸ்ராலினுக்கு நெருக்கமானவர்களான மோலோரோவ் **(Molotov)** ஸ்ராலினின் மகளான **Svetlana Aliluyeva** இன் தகவலின்படி ஸ்ராலின் இறுதிக்காலங்களில் மிகமோசமான மனநோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்பதில் ஒரு சந்தேகமும் இல்லை. ஆனால் பாரிய களையெடுப்பு நடத்திய காலகட்டங்களில் அவரின் மனநிலை சிறப்பாக இருந்ததுடன் அந்தக் காலகட்டத்தை அவரின் "பிரகாசமான காலங்கள்" எனவும் குறிப்பிடலாம். அதாவது ஆத்திரமூட்டல்களுக்கும் கொலைக் குற்றங்களுக்கும் சிறப்பான சூத்திரதாரியாக இருந்ததுடன் கணிப்பிடுவதிலும் தனிநபர் ஆளுமையிலும் திறம்பட இருந்ததுடன் மிகமோசமான நிலைமைகளில் வழமைக்கு மாறான அமைதியுடனும் அல்லது வஞ்சனையுடன் பேசக்கூடிய தன்மையையும் கொண்டிருந்தார்.

இப்படியான புனைகதைகளின் இருப்பையிட்டு நாங்கள் எவ்வாறு விளக்கமுடியும்? அண்மைக் காலங்களாக பல ஆய்வாளர்கள் சில உண்மையான தகவல்களை அடையக் கூடியதாக இருந்தது. ஆனால் உண்மையை மறைக்க தங்கள் வசம் உள்ள தகவல்களை தேர்ந்தெடுத்ததற்கும் அல்லது தங்கள் வசமுள்ள தகவல்களை எடுத்துக்காட்ட மறுப்பதற்குமான காரணம் என்ன என்பதை நாம் விளங்கிக்கொள்ள முடியும். உதாரணத்திற்காக பிரபல்யமான ஓரளவு விபரமான ரஷ்ய வெளியீடான இரு தொகுதிகளை உள்ளடக்கிய **Robert Conquest d; THE GREAT TERROR** பாரிய பயங்கரம் என்ற புத்தகத்தை எடுத்துக் கொள்வோம்.

அண்மையில் நான் இப்புத்தகத்தை படித்தபோது 200க்கு குறையாத உண்மை நிகழ்வுகள் தொடர்பான பிழைகளை கண்டுபிடித்தேன். இவற்றுள் அரைவாசி பிழைகளுக்கான காரணம் ஒன்றில் ஆய்வாளருக்கு போதிய தகவல்கள் கிடைக்கவில்லை அல்லது அவர் பிழையான நம்பமுடியாத தகவல்களை இலகுவாக நம்பியுள்ளார் என எடுத்துக் கொள்ளலாம். மற்றய அரைவாசிக்கான காரணம் கொன்குயெஸ்ற் **(Conquest)** உண்மையில் கிடைக்கக்கூடிய ஆதாரங்களை பாவிக்கவில்லை. உதாரணமாக எதிர்ப்பாளர்களின் அறிக்கை **(Bulletin of the Opposition)** யில் வெளிவந்த லியோன் ட்ரொட்ஸ்கியின் கட்டுரைகள் போன்றவை. இப் பாரிய களையெடுப்புக்கள் ஸ்ராலினின் முக்கிய எதிரியான லியோன் ட்ரொட்ஸ்கிக்கும் அவரின் தொடர்ச்சியான நான்காம் அகிலத்துக்கும் எதிரான போராட்டம் என்பதன் கீழ் நடந்தது என்பதை நாம் மறந்துவிட முடியாது. முக்கியமானதொன்று என்னவெனில் ஊழநெரநளவ புத்தகத்தின் பாரிய வேலையில் மூன்று பக்கங்களில் மட்டுமே ட்ரொட்ஸ்கியின் கருத்துக்கள் செயற்பாடுகள் தொடர்பாக குறிப்பிட்டுள்ளார். மூன்று பக்கங்களிலும் நான் 10 முக்கிய கருத்துக்களை ஆய்வுக்குள்ளாக்கினாலும் உண்மையற்றவையாக இருப்பதை கண்டுகொண்டேன். இவற்றுள் ஒன்று என்னவெனில் கட்சியினுள் ட்ரொட்ஸ்கி ஏற்கனவே சகல அரசியல் எதிர்ப்புக்களையும் ஒடுக்கிவிட்டார் என்பதும் மற்றயது கூட்டுப்பண்ணை காலங்களின் போதுபாதிக்கப்பட்ட எவருக்கும் ட்ரொட்ஸ்கி தனது எந்தவொரு அனுதாபத்தையும் வெளிக்காட்டவில்லை என்பதுமாகும்.

## வளர்ச்சியடையும் எதிர்ப்புக்கான பொறுப்பு

நாங்கள் இவ் ஆய்வை சரியான முறையில் அணுகுவதென்றால் அதாவது ஸ்ராலின் ஏன் இக் களையெடுப்பை செய்ய வேண்டியிருந்தது என்பதற்கான சரியான காரணம் சோவியத் யூனியனுக்கும் அதற்கு வெளியேயும் கம்யூனிச இயக்கத்துக்குள் ஸ்ராலினுக்கு எதிராக வளர்ந்த எதிர்ப்பாகும்.

இதை கவனத்தில் கொண்டு நான் சுருக்கமாக மிக முக்கியமான ஆண்டான 1932 தொடர்பாக கூற விரும்புகிறேன். இந்த வருடம் ஸ்ராலினின் குழுவினரின் அரசியலின் விளைவால் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கிய வருடமாகும். நாட்டின் பல பாகங்களில் முக்கியமாக உக்கிரேனிலும் வட காவ்காசிலும் சிறிய அளவிலான உள்நாட்டு யுத்தம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. இவ்வேளையில் விவசாயிகளுக்கு எதிராக இராணுவத்தை நிலைகொள்ளச் செய்ய வேண்டியதோடு பீரங்கி டாங்கி படைகளை பிரயோகிக்க வேண்டியிருந்தது. பல பிரதேசங்களில் முக்கியமாக எனக்கு ஞாபகத்திலுள்ளது **Ivanovo** பிரதேசத்தில் முக்கிய நெசவு தொழிற்சாலை கைத்தொழில் மையம் தாங்கமுடியாத வாழ்க்கை நிலைமைகளுக்கு எதிராக தொழிலாளர்கள் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலைமைகளின் கீழ் இதுவரை தலைமறைவாக இயங்கி வந்த சில எதிர்ப்புக் குழுக்களின் நடவடிக்கைகள் மீண்டும் புத்துயிர்ப்படைந்தன. அவர்கள் ஸ்ராலினுக்கு எதிரான போராட்டத்திற்காக ஒன்றுபடுவதற்காக சில திட்டவட்டமான முயற்சிகளை செய்தனர். தனது இடது வலது எதிர்ப்பு குழுக்களுடனான அரசியல் சித்தாந்த முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற்கு ஸ்ராலின் பிரயோகித்த கிறிமினல் நடவடிக்கைகள் அவரின் தன்மைகளில் ஒன்றாகும். 1932ம் ஆண்டளவில் இடது வலது எதிர்ப்பாளர்களிடம் இருந்த முரண்பாடுகள் விலக்கப்பட்டிருந்தன அல்லது ஓரளவு சுமூகமாயிருந்தன. முக்கிய புரட்சிகர எழுத்தாளரான **Victor Serge** நாடுகடத்தப்பட்டு பின்னர் ஐரோப்பாவுக்கு வந்த பின்னர்தான் பல முன்னைநாள் வலது எதிர்ப்பாளர்களை சந்தித்ததாகவும் புகாரினின் ஆதரவாளர்கள் அப்போது அவர்கள் லியோன் ட்ரொட்ஸ்கி தொடர்பாயும் இடது எதிர்ப்பாளர்கள் தொடர்பானதுமான அவர்களது அணுகுமுறை கணிசமான அளவு மாறியுள்ளதாக கூறியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

1932ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் புகாரினின் ஆதரவாளர்கள் மொஸ்கோவில் ஒரு மாநாடு கூட்டி ஸ்ராலினை எவ்வாறு எதிர்ப்பது என்பது தொடர்பாக ஆராய்ந்தார்கள். 3 வருடங்களுக்கு முன்னர் 1932ம் ஆண்டில் இளமையான மிக பிரபல்யம் அற்ற புகாரினின் ஆதரவாளரான இப்போது 95 வயதுடைய **Valentin Astrov** இனை சந்திக்ககூடியதாக இருந்தது. முதலாவது இளம் வலது எதிர்ப்பாளர்களது **(Right Oppositionists)** கூட்டம் இவரது வீட்டில் நடந்தது. அத்துடன் அவர்கள் ஸ்ராலினை பலாத்காரத்தால் தூக்கி எறியவேண்டியது தொடர்பாக பகிரங்கமாக

www.padippakam.com

கலந்துரையாடியதை மிகவும் ஞாபகத்தில் வைத்திருந்தார். அவர் தனது தோழர்களுக்கு ஸ்ராலினுக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொள்ள விரும்பவில்லை என கூறியதால் அடுத்த கூட்டம் வேறு ஒரு இடத்தில் அவர் கலந்துகொள்ளாமலே நடந்தது. பின்னர் **Valentin Astrov, NKVD** இனால் கைதுசெய்யப்பட்டபோது இந்த இடங்களில் அவ்வப்போது நடந்த கூட்டங்களில் என்ன விவாதிக்கப்பட்டது என விசாரணையாளர்கள் கேட்டபோது **Astrov** தனக்கு இப்படியான கூட்டங்கள் தொடர்பாக எதுவும் தெரியாது என நேர்மையாக பதிலளித்தார்.

இதேவேளையில் பல இடது எதிர்ப்பாளர்கள் இவர்களில் ஏற்கனவே அடிபணிந்துபோன பலருடன் தாமும் இணைந்து போராட்டத்தில் இருந்து விலகிக் கொண்டனர். இவர்களில் முக்கியமானவர்கள் **Ivan Nikitovich, Smirnov,** வின் குழுவை சேர்ந்தவர்களாகும். நாங்கள் இவர்களில் இருந்து 5 தடவை கைதுசெய்யப்பட்ட பெண் ஒருவரின் மகளிடம் இருந்து இவை தொடர்பான தகவல்களை ரஷ்ய வெளியீடான இரு தொகுதிகளை பெற்றோம். **Tatiana Miagkova** இன் மகள் எவ்வாறு இவ் இடது எதிர்ப்பாளர்களின் அங்கத்தவர்கள் தனது தாயின் வீட்டில் ஒன்றுகூடினர் என்பது தொடர்பாக கூறினார். இக் கூட்டத்தில் சினோவியேவ், கமனேவ் தாங்கள் ஸ்ராலினை அகற்ற வேண்டியதுடன் உடன்படுவதாகவும் ட்ரொட்ஸ்கியுடன் தொடர்பு ஏற்படுத்தப்பட வேண்டியதையும் ஏற்றுக் கொண்டனர். அவ்வேளை அவர்கள் தாம் 1917ல் விட்ட தவறைவிட விட்ட பெரிய தவறு 1927ல் இடது எதிர்ப்பாளர்களுடன் பிரிந்துபோனதுதான் என குறிப்பிட்டனர். 1932 முழுவதும் இவ் எதிர்ப்பாளர் குழுவினர் மத்தியில் எவ்வாறு பொதுவான ஸ்ராலின் எதிர்ப்புக் குழு ஒன்றை கட்டுவதென்பது தொடர்பான கலந்துரையாடல்கள் நடந்தன. இதற்கு முன்னர் 1931ம் ஆண்டு **Smirnov** பேர்லினுக்கு உத்தியோக பூர்வமாக வந்தபோது ட்ரொட்ஸ்கியின் மகனான லியோன் சடோவை சந்திக்கக் கூடியதாக இருந்தது. அவர்கள் ட்ரொட்ஸ்கிக்கும் சோவியத் யூனியனில் உள்ள எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் சேர்ந்து வேலைசெய்வது தொடர்பாகவும் **Smirnov** விற்கும் ட்ரொட்ஸ்கிக்கும் இடையில் விடையங்கள் பரிமாறிக்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடினர். இந் நிலையில் இருந்து ட்ரொட்ஸ்கிக்கும் சடோவிற்கும் சோவியத் யூனியனில் இருந்த பல எதிர்ப்புக்குழுக்களுக்கும் இடையில் இறுக்கமான தொடர்பு ஏற்படுத்தப்பட்டது.

## மொஸ்கோ வழக்குகள்

அமெரிக்க வரலாற்று ஆசிரியரான **J. Archgettv** ம் பிரான்சு வரலாற்று ஆசிரியரான **Pierre Broué** ஆகியோரே 1932 நிகழ்வுகள் தொடர்பாக முதலாவதாக எழுதியவர்களாவர். இவர்கள் முன்னனர் மூடப்பட்டிருந்த ட்ரொட்ஸ்கியின் ஆவண காப்பகங்களிருந்து 1980ற்கு பின்னர் எடுத்த தகவல்களை அடித்தளமாக கொண்டிருந்தனர். நான் எனது புத்தகத்துக்கான ஆய்வுகளின் போது மொஸ்கோ வழக்குகளின் முதலாவது வருடமான 1936 தொடர்பாக அவர்கள் குறிப்பிடப்படாத தகவல்கள் குறித்து அறியக்கூடியதாக இருந்தது. இவ் வழக்கும் அது தொடர்பாக கூறப்பட்டவையும் ஒரு முழுப்பொய்யாகும். இவ்வழக்கில் சாட்சியளித்தவர்களில் ஒருவரான **Ivan smirnovw** இன் மாஜி மனைவியான **Safonova** இவ்வழக்கில் வெறுக்கத்தக்க பங்குவகித்தவர். 1936 இன் பின்னர் அவர் விடுதலை செய்யப்பட்டு பின்னர் 1956 இல் முதலாவது மொஸ்கோ வழக்குகள் தொடர்பாக விசாரணைக்குழு நியமிக்கப்பட்டபோது மீண்டும் சாட்சியமளித்தார். இந்த வழக்குகளில் அவர் **Smirnow** இனும் மற்றவர்களாலும் கூறப்பட்டவற்றில் **90%** ஆனவை உண்மைக்கு புறம்பானவை என கூறினார். உண்மைக்கும் பொய்க்கும் உள்ள உறவை ஒப்பிட்டுப்பார்த்தால் நாங்கள் ஒரு சரியான விகிதத்திற்கு வரமுடியாது என்பது உண்மைதான். எப்படியிருந்தபோதும் 1956ல் நிறுவப்பட்ட விசாரணைக்குழு உண்மையுடன் தொடர்பான **10%** த்தை தன்னும் கண்டுபிடிக்கும் நோக்குடன் நிறுவப்பட்டதல்ல.

**Pierre Broué** கூறியது போல் அவ் வழக்கு கூறப்பட்ட அதிகாரத்துவத்திற்கு எதிரானவர்களிடையே கூட்டங்கள் கலந்துரையாடல்கள் உண்மையில் நடந்தது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதைவிட ட்ரொட்ஸ்கியின் மகனான லியோன் சடோவ் ஆல் எழுதப்பட்ட பிரசித்திபெற்ற செம் புத்தகம் **The Red Book** ல் ”உண்மையில் என்ன நிகழ்ந்தது” என்ற அத்தியாத்தின் கீழ் எழுதியுள்ள இக்கூட்டங்கள் தொடர்பான கருத்துக்கள் இதனை உறுதியாக்குகின்றது. அவராலும் சகல நிகழுவுகளையும் எழுத முடியாது இருந்ததுடன் அப்புத்தகம் எழுதப்பட்ட வேளையில் அப்படி சகலதையும் எழுதாமல் இருக்கவேண்டியும் இருந்தது. உதாரணத்திற்கு லியோன் ட்ரொட்ஸ்கிக்கும் லியோன் சடோவுக்கும் இடது எதிர்ப்பாளர்களுக்கும் இடையே முக்கிய தொடர்பாளராக இருந்தவரான **YURI GAVAN** ஒரு பழைய போல்சுவிக் ஆவார். இவரின் பெயர் மொஸ்கோ வழக்குகளில் பலதடவை குறிப்பிட்டபோதும் அவ்வழக்குகளில் சாட்சியாகவோ அல்லது குற்றவாளியாகவோ தோன்றாததுடன் தண்டனைக்குள்ளானவர்களிலும் அவர் இருக்கவில்லை.

ட்ரொட்ஸ்கியும் சடோவும் **GPU** ஆல் அவரை அடையாளம் காண முடியவில்லை என்ற முடிவுக்கு வந்தனர்.

நான் உதாரணம் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். ட்ரொட்ஸ்கி நோர்வேயில் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டிருந்தபோது அப்போதுதான் முதலாவது மொஸ்கோ வழக்குகள் நடந்து கொண்டிருந்தது லியோன் சடோவ் அவருக்கு ஒரு கடிதம் அனுப்ப முயன்றார். அக் கடிதம் சற்று வழமைக்கு மாறாக இருந்தது. வழக்கமான ரஷ்ய எழுத்தின்படி **"TY"** க்குப் பதிலாக **"VY"** என்று ட்ரொட்ஸ்கிக்கு எழுதவேண்டியிருந்தது. அவர் அக் கடிதத்தில் சதியாளர்களான **Smirnov, Gaven** போன்றவர்கள் தொடர்பாக குறிப்பிடுகின்றார். நாங்கள் இவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும் ஏனெனில் இப் பெயர்கள் வழக்கின்போது வெளிப்படையாக குறிப்பிடப்பட்டது. மிகவும் கவனிக்க வேண்டியது என்னவெனில் 1932ம் ஆண்டு பல எதிர்ப்புக் குழுக்கள் இயங்கிக் கொண்டிருந்தபோதும் இக் குழுக்களில் இருந்து பலர் 1932–33ல் கைது செய்யப்பட்டிருந்த போதும் 1932ல் இப்படியான குழுக்கள் இருந்தன என்பதற்கான எந்தவொரு சாட்சியையும் விசாரணையாளர்களால் கண்டுபிடிக்க முடியாதிருந்தது. இதற்கான காரணமாக 1935–1936 வரை இக் குழுக்களை சேர்ந்த ஒரு தொகையினர் சுதந்திரமாக உலாவ முடிந்தது. 1935–36 க்கு பின்னர் மோசமான சித்திரவதை முறைகள் பிரயோகித்த பின்னரே விசாரணையாளர்களால் ஸ்ராலினிச எதிர் குழுக்களின் இருப்பு தொடர்பாக அறிய முடிந்ததுடன் அதில் பல பழைய எதிர்ப்பாளர்கள் மட்டுமல்ல புதியவர்களும் இணைந்திருந்ததை கண்டுபிடிக்கக் கூடியதாக இருந்தது.



*1917 ல் செஞ்சதுக்கத்தில் உரை நிகழ்த்தும் லியோ ரொட்ஸ்கி*

## ரியூற்றின் குழு

1932ம் ஆண்டு விசாரணையாளர்களுக்கு எதிராளர்களின் குழுக்களில் ஒரு பிரிவு மட்டுமே இருப்பதாக அறியக் கூடியதாக இருந்தது. அக்குழுவின் ஒரு பிரிவுதான் ரியூற்றின் குழுவாகும். ரியூற்றின் வரலாறு சுவாரசியமானதாகும். 1927ம் ஆண்டு அவர் ஒரு உறுதியான ஸ்ராலினிஸ்ட் ஆவர். மொஸ்கோவில் நடந்த இடது எதிர்ப்பாளர்களின் கூட்டங்களை கலைப்பதற்கான காடையர்கள் குழுவுக்கு அவரே தலைமை தாங்கியுள்ளார். 1928ம் ஆண்டு ஸ்ராலினின் அங்கும் இங்கும் **(Zigzag)** செல்லும் அரசியலுக்கு எதிரான வலது எதிர்ப்பாளர்களின் மொஸ்கோ கட்சி குழுவின் தலைவர்களில் ஒருவராக இருந்தார். 1930ல் ரியூற்றின் பழைய போல்ஷிவிக் குழுக்களுடன் கலந்துரையாடல்களை செய்ததுடன் இடது எதிர்ப்பாளர்களுடன் இணைந்து ஸ்ராலினுக்கு எதிராக இயங்க வேண்டும் என்ற நிலைமையில் இருந்தார். 1932ம் ஆண்டு மார்க்சிச லெனினிச கூட்டமைப்பின் நிறுவனராகவும் இருந்தார். இவர் இக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 100 பக்கங்கள் அடங்கிய முன்நோக்கின் பெரும்பகுதியை எழுதியதுடன் இதன் தலைவராயும் இருந்தார் எப்படியிருந்தபோதும் ரியூற்றின் அரசியல் முன்னோக்கு பல கட்சி அங்கத்தவர்கள் உட்பட பலரால் சேர்ந்து எழுதப்பட்டது என்பது தெளிவாகும்.

இப் புதிய அறிக்கையில் ஒன்று தெளிவாக இருந்தது அதாவது இன்று கட்சியை பிரிவுபடுத்தும் புதிய பிரச்சனையின் முன்னே பழைய எதிர்ப்புவாதிகளிடையே இருந்த முரண்பாடுகள் களையப்பட்டுவிட்டன. இன்று கட்சியை பிளவுக்குள்ளாக்கியுள்ள புதிய பிரச்சனைகள் என்னவெனில் கட்சியை கட்டுப்படுத்தும் ஸ்ராலினிச குழுவுக்கும் அக்டோபர் புரட்சியின் நலன்களை அழிப்பவர்களுக்கும் அதற்கு எதிராவனவர்களுக்கும் இடையே உள்ள முரண்பாடாகும். ரியூற்றின் முன்னோக்கு ஸ்ராலினுக்கு எச்சரிக்கையாக இருந்ததுடன் மிகுந்த பயத்தினை அளித்தது. இதன் விளைவாக இதனை வாசிக்காமலும் மத்திய குழுவின் அங்கத்தவர்களுக்கு இதனை விநியோகிக்காமலும் ஒரு மத்திய குழு கூட்டத்தொடரில் ரியூற்றினை கண்டித்தார். ஆனால் இவ் எதிர்ப்பு இயக்கத்தின் முழு அளவிலான நடவடிக்கைகள் தொடர்பாக 4 வருடங்களின் பின்னர் 1936ம் ஆண்டே தெளிவாக தெரிய வந்தது. இது அவரை ஆவேசம் அடையச் செய்ததுடன் பாரிய பயங்கரத்தை தொடக்கி வைப்பதற்கான உந்து சக்தியையும் கொடுத்தது.

நேரம் பற்றாக்குறை காரணமாக நான் இங்கு மேலும் அதிகமான கேள்விகள் தொடர்பாக மேலதிகமாக சொல்ல விரும்பவில்லை. 1937ல் ஸ்ராலினுக்கு எதிரான ஒரு இராணுவச் சதி நடந்ததா இல்லையா என்பது தொடர்பாக விவாதிக்க விரும்புகிறேன். இக் கேள்வி தொடர்பாக சுருக்கமாக எடுத்து கூறுவதானாலும் அது இன்னொரு முழு விரிவுரையாகிவிடும். 500 பக்கங்கள் அடங்கிய எனது அண்மைய புத்தகத்தில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி இக் கேள்வி தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ளது. நான் வெகுவிரைவில் இது ஆங்கிலமொழியில் மேற்கில் வெளிவரும் என எதிர்பார்க்கிறேன்.

## ஸ்ராலினின் பயங்கரத்தின் விளைவுகள்

நான் இப்பாரிய பயங்கரத்தின் உலக ரீதியான விளைவுகள் தொடர்பாக சுருக்கமாக கூறவிரும்புகிறேன். இதன் விளைவுகள் முக்கியமான மூன்று தலைமுறை போல்ஷிவிக்குகளை நிர்மூலம் செய்ததுடன் நின்றுவிடவில்லை.

முதலாவது தலைமுறையினர் தலைமறைவாக இருந்து தயாரிப்பு செய்து அக்டோபர் புரட்சியை நடாத்திய லெனினின் பழைய போராளிகள். இரண்டாவது தலைமுறையினர் உள்நாட்டு யுத்த காலகட்டத்தில் பாரிய அளவில் கட்சியில் இணைந்து கொண்டவர்கள். மூன்றாவது தலைமுறையினர் ஸ்ராலினிசத்தின் நிலைமைகளில் வளர்ந்து வந்த புதிய தலைமுறையினர்.

இம் மூன்று தலைமுறையினரை நிர்மூலமாக்கியதன் மூலம் அழிக்கப்பட்டதென்னவெனில் போல்ஷிவிக் உணர்மையாகும். போல்ஷிவிக்குகளின் தனித்தன்மையுடன் அதன் பிரத்தியேக தன்மையும் அவர்களின் உலக நோக்கும் அழிக்கப்பட்டது. அவர்களின் உணர்மை முழுவதும் அழிக்கப்பட்டதானது ரஷ்யாவுக்கு மட்டுமான துக்ககரமான நிகழ்வு அல்ல சர்வதேச கம்யூனிச இயக்கத்துக்கே இழப்புமட்டுமன்றி வரலாற்றில் ஒரு பாரிய அரசியல் இயக்கம் இல்லாதும் ஒழிக்கப்பட்டது. சோவியத் யூனியனில் பல்லாயிரக்கணக்கான வெளிநாட்டு கம்யூனிஸ்டுகளும் அரசியல் குடியேற்ற வாசிகளும் கொல்லப்பட்டனர் அல்லது சிறைகளுக்கோ அல்லது முகாங்களுக்கோ அனுப்பப்பட்டனர். இவர்களுள் கூடுதலாக தண்டனை பெற்றவர்கள் இராணுவ ஆட்சிகள் நடந்த நாடுகளில் இருந்து வந்தவர்கள்– அங்கு கம்யூனிஸ்ட் கட்சிகள் சட்டவிரோதமாக இருந்தது. 1937ம் ஆண்டு அரைவாசி ஐரோப்பிய அரசுகள் பாசிச அல்லது அரைபாசிச அரசுகளாக இருந்தன. சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் இழப்பை இதனை தனிய வைத்து மட்டும் கணிப்பிட முடியாது. நூறு அல்லது ஆயிரக் கணக்கான மக்கள் தாம் கண்ட பயங்கரத்தினால் அதாவது மொஸ்கோ வழக்கினாலும் பாரிய பயங்கரத்தாலும் தாக்கப்பட்டனர்.

இந்த பாரிய பயங்கரத்தின் பின்னர் தப்பியிருந்த பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் ஒன்று முற்றுமுழுதாக சீரழிந்து போயினர் அல்லது அவநம்பிக்கை கொண்டவர்களாக இருந்தனர் அல்லது ஸ்ராலினின் குற்றங்களில் பங்கு கொண்டனர். இவர்களுள் 1950 களில் ஸ்ராலினிசத்திற்கு எதிராக போராடிய முக்கிய நபர்கள் சிலரும் அடங்கியிருந்தனர். உதாரணமாக 1980களில் வெளிவந்த ஆவணங்களில் கங்கேரியாவை சேர்ந்த **IMRE NAGY** 1930ன் பின் சோவியத் யூனியனில் இருந்ததாக தெரியவந்துள்ளது. அவர் **GPU** வின் நேரடி கைக்கூலியாகியதுடன் அவரின் குற்றச்சாட்டின் கீழ் டசின்கணக்கான கங்கேரிய பல்கேரிய கம்யூனிஸ்ட்டுக்கள் கைதுசெய்யப்பட்டனர். இந்த ஆவணங்களில் டீட்டோ யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சியினுள் களையெடுப்பு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் இது தொடர்பாக பின்வருமாறு எழுதியுள்ளார். ”சிலவேளை மக்கள் இப்படிக் கூற கேள்விப்பட்டுள்ளேன் நான் ட்ரொட்ஸ்கிச வாதியுமல்ல நான் ஒரு ஸ்ராலினிச வாதியுமல்ல” அவர் தொடர்ந்து ”இப்படி கூறுபவர்கள் கட்டாயம் ட்ரொட்ஸ்கிச வாதிகளே” என எழுதியுள்ளார்.

1939ம் ஆண்டு யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சி தனது மாநாட்டில் கட்சியுள் வெற்றிகரமான களையெடுப்பு நடத்தப்பட்டதாகவும் அதனை தொடர்ந்து நடாத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டது. இது டீட்டோவினால் நடாத்தப்பட்டது. இதன் பின்னர் இக் களையெடுப்பில்

இணைந்து கொண்டவர் **Milovar Djilas**
நினைவுகளில் இருந்து அவர் தல
தொடர்பாகவும் சாகசம் தொடர்பாகவும்
கூறவில்லை. ஆனால் இரண்டாம்
தொடர்பான அவரது விமர்ச
கவனத்துக்குரியது. யூகோஸ்லாவிய
கட்சியின் முக்கிய தலைவர்களில் **Petro**
அதிகாரத்துவம் தொடர்பாக 1940ம் அ
ஒன்றை வெளியிட்டார். பின்பு இது யூகோ
தடைசெய்யப்பட்டுவிட்டது. 1942ம் அ
**Petrouch** ஒரு ட்ரொட்ஸ்கிஸ்ட் என்று
உளவுச் சேவையின் கையாள் எனவு
**Petrouch** பலமாக தாக்கப்பட்டபோதும்
ஒருபோதும் ஒத்துக் கொள்ளவில்லை
கூறுகின்றார். **Djilas** இது தொடர்பாக கூ
இருந்தது ஏனெனில் அவரும் இந்த ஒ
பங்கெடுத்துக் கொண்டதாலாகும்.

நாம் சோவியத் யூனியனுக்கு
களையெடுப்புகளில் பலியானவர்களுக்
புதியவர்கள் 1937ல் உள்ளெடுக்கப்பட்ட
பலரும் மிகவும் ஆச்சரியத்துடன் தா
கனவுகூட கண்டிராத கட்சியி
அதிகாரத்திலும் பதவிகளை நிரப்பினர்.

நான் இவர்களில் ஒரு சிலரின் பெ
விரும்புகிறேன். 1936ம் ஆண்டு பிரெஷ்னே
கைத்தொழில் நுட்ப கல்லூரியின் அதிப
1937ல் நகர சோவியத்தின் தலைவரா
1938ம் ஆண்டு கட்சியின் பிராந்திய குழு
ஆனார். 1936ம் ஆண்டு கொஸ்கின் **(K**
தையல் இயந்திர தொழிற்சாலையின்
இருந்தார். 1937ல் லெனின்கிராட்டில் கட
பதவியை வகித்ததுடன் 1939ம் ஆண்டு க
குழுவிற்கு தெரிவு செய்யப்பட்டார். அ
தொழிற்துறையின் மந்திரியா
சொவ்நார்கொம் **(Sovnarkom)**
தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.
**(Gromyko)** ஒரு பொருளாதார ஆய்வா
இராஜதந்திர நடவடிக்கைகள் எதிலும்
ஆனால் அவர் 1943ம் ஆண்டு அமெ
தூதுவராக அனுப்பப்பட்டார். ஸ்ராலினின்
யூனியன் மிக மோசமான நிலைமையின்
இந் நிலைமையின் கீழ் இப்படிய
முன்னொருபோதும் பகிர்ந்திராத
பதவிகளை அடைந்தனர். திடீரென அவர்
வாகனங்களும் சாரதிகளும் கிடைத்
அவர்களுக்கு சோவியத்தில் வசதியான
நிறுவப்பட்ட கட்டிடங்களில் வீ
கிடைத்தன. அதைவிட சகல மு
பெற்றனர். அவர்கள் ஸ்ராலினுக்
செய்யமுடியாமல் இருந்தபோதும் அவர்
இழிவான செயல்களையும் செய்த
ஸ்ராலினுக்கு விசுவாசமாக இருந்தனர்.

பெரும்பான்மையான அங்கத்தவர்க
இயக்கத்தில் சேர்ந்தது பாசிச எதி
கட்டத்தில் என்பதை நாம் ஞாபகத்
வேண்டும். இந்த பாரிய பயங்கரத்
செய்ததன் மூலம் எந்தவித எதிர்ப்புமின்றி
உடன்படிக்கையை செய்யக்கூடியதாக இ
பயங்கரத்தினால்தான் இதன்பின்னர் சே
எதிர்ப்பு சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்பட
இருந்தது. ஸ்ராலினின் இக் குற்றம் தா
வாதத்தை நடைமுறைப்படுத்த சாத்தியம
அத்துடன் இப் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்
1937ல் இருந்து கிட்டத்தட்ட 50 வருடங்
இருந்தது. இவர்கள் 1956ல் குருஷேவ் இ
அம்பலப்படுத்தியபோது தோன்றிய
தலைமுறையினரிடையே சோசலிச
தோன்றக்கூடாது என்பதையிட்டு மிகவும்
இருந்தனர். பின்னர் இவர்கள் நச்சுத்
ஊழலில் வெட்கங்கெட்ட
பங்கெடுத்துக்கொண்ட நற்குணங்களற்ற
வறுமையுடைய ஒரு முழு தலைமுறை
செய்யப்பட்டனர். முழு நாடும்
வித்தியாசமானதாக இருந்தது. இவர்
தகுதியற்ற தன்மையினால் இவர்களால்
அரசியல் சிந்தனைகளையும் முன்கொ
முடியவில்லை.

இவற்றை நாம் மனதில் நிறுத்திக் கொ
எம்மால் சோவியத் யூனியனில்
நடந்தவற்றை தெளிவாக விளங்கிக்கொ
நாங்கள் சிலவேளைகளில்
போன்றவர்களை தெளிவாக விளங்கிக்
கடந்த 60 வருடங்களாக கம்யூனிச
ஏற்றுக் கொண்டிருந்தோம் என்று சொல்
ஜெல்ஸ்டின் அல்லது யக்கோவ்லெவ்
வெட்கங்கெட்ட கம்யூனிச எதிர்ப்பாளர்க
எப்படி என்பதையும் விளங்கிக்கொள்
முன்னைநாள் கட்சி அதிகாரத்துவத்திலிரு
குடியரசுகளின் தலைவர்களாக மாறியுள்
அதேபோல் இன்றைய குடியரசுக
நிகழ்கின்றது என்பதையும் எம்மால் விள
முடியும். இவர்கள் இன்று அதிதீவிர தேசி
மாறியுள்ளனர். பாரிய பயங்கரத்தின் எதி
இப்பிரதேசங்களில் தொடர்ந்து

www.padippakam.com

# ஷ்ய தேர்தல்கள் சமூக
# ச்சிக்கான
# லகட்டத்தை திறந்து
# கிறது.

3ம் திகதிய இரண்டாம் கட்ட ஜனாதிபதி
ர்தலில் பொறிஸ் ஜெல்சினின்
வற்றியானது ரஷ்யாவினுள் பாரிய சமூக
ான காலகட்டத்தை திறந்து
மற்கத்தைய நிதி மூலதனத்தின் பிர–
ஜனாதிபதியை சுற்றியுள்ள ஸ்டாலினிச
திலிருந்து முதலாளித்துவத்திற்கு
ரஷ்ய சம்மேளன கம்யூனிஸ்ட் கட்சியின்
டி சுகானோவின்**(Gennady zyuganov)**
வி முதலாளித்துவ மறுசீரமைப்பை விடை–
ற்கான ஒரு தேர்தல் முடிவு எனப்
கின்றனர். உண்மையில் இத்தேர்தலில்
வாக்குகள் மேற்கத்தைய
ளினதும் உருவாகிக்கொண்டிருக்கும்
லாளித்துவத்தினதும் நலன்களை
ன தொழிலாள வர்க்கத்தின் மீது
தாக்குதல்களுக்கும் சமூக
் தொழில் வசதி வாழ்க்கைத்தரம் மீதான
கும் எதிரானதாகும்.

முழுவதும் உள்ள அரசாங்கங்களும்
ர்புச் சாதனங்களும் ஜெல்ஸ்டினது இந்த
ஜனநாயகத்திற்கு"கிடைத்த வெற்றியென
னர். லண்டனில் பினான்ஸ்சியல் டைம்
ல்சினை "ரஷ்ய வரலாற்றில் ஜனநாயக
செய்யப்பட்ட முதலாவது தலைவர்" என
ப்பத்திரிகை தொடர்ந்து எழுதுகையில்
கள் வெளிவந்தவுடன் "மொஸ்கோவின்
ல் மூடிமறைக்கப்பட முடியாத வெற்றி
கட்டுப்படுத்தப்பட முடியாத நிலையில்
க் குறிப்பிடப்பட்டது.

திகாரத்துவ வாதியான ஜெல்சினால்
தூக்கிப்பிடிக்கப்படும் இந்த
ாது" உள்ளடக்கம் என்ன? ரஷ்ய
பார்க்க மலிவான நாடகத்தை
கொள்வதற்கு ஒருவருக்கு மிகவும்
ருக்கும். அடித்தளமான கேள்விகளில்
கும் ஒரு கருத்து வேறுபாடுமில்லை.
ாத்த ஜனாதிபதியோ அல்லது அவருக்கு
ரோ முதலாளித்துவ மறுசீரமைப்புக்கான
தரவை வலியுறுத்தியதுடன் சர்வதேச
நிதியத்திற்கும் மேற்கத்தைய
க்கும் தாங்கள் நம்பிக்கை உரியவர்கள்
திக் காட்டுவதற்காக மிகவும் கடுமையாக
ள்.

ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரம் ரஷ்ய
ால் நேரடியாக முதலிடப்பட்டது.
ய நிதியத்தினால்' **(IMF)** கடந்த மாதம்
10.2 மில்லியன் டொலர் கடனானது
க்காக தாரளமாக செவு செய்யப்பட்டது.
ங்கள் தனியார்மயமாக்கப்பட்டதன் மூலம்
ஸ்டாலினிச நிர்வாகிகளை
ாக்கியதும் மட்டுமல்லாமல் ஜெல்சினது
ரத்திற்கு பணத்தினை வாரி இறைத்தனர்.
கவும் பிரதானமான தேர்தல் தொகுதியை
தட்டே பிரதிநித்துவப்படுத்தியது.
முன்னாள் சோவியத்யூனியனின்
ழுமையாக கொள்ளையடித்தும் தங்களை
வளம்படுத்திக்கொள்வதற்கு ஆட்சியில்
் ஒருதடையாக இருக்குமெனப் பயந்தனர்.

## டர்பு சாதனங்களின் பாத்திரம்

னியனின் உடைவிற்கு பின்பு உருவாகிய
பிரிவானது ஜெல்சினுக்கு ஆதரவை
மில்லியன் கணக்கான டாலர்களை
தல் பிரச்சாரத்திற்கு வாரிக் கொட்டினர்
டங்கள் இப்படியான செலவுகளுக்கு
விதித்தருந்தது பற்றி இவர்கள் ஒருவிதக்
எடுக்கவில்லை. கிரெம்ளின் அதிகாரிகள்
சார்பான பிரச்சாரங்களை செய்திகளின்
முக்கியத்துவம் கொடுப்பதற்கு
ர்களுக்கு லஞ்சம் கொடுத்ததை
த்துக்கொண்டார்கள். இதை செய்வதற்கு
டுதலை செய்யப்பட்ட" தொடர்புச்
ஒருவிதமான கஸ்டமும்
ல. இது ஜெல்சினின் ஆட்சியுடன் இறுக்கி
ருந்தது. இதனது செய்தி வெளியிடும்
ிரஷ்னேவினது காலத்தில் சோவியத்
சாதனங்கள் செய்ததில் இருந்து
வேறுபடவில்லை.

மிதமிஞ்சிய விபரங்களுடன் தெரிவிக்கப்பட்டது. அதே வேளையில் இரவு நேர செய்தி அறிக்கைகள் நிர்வாணமான கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரத்திற்கு பயன்படுத்தப்பட்டது. சுகானோவினதும் அவரது ஆதரவாளர்களதும் பற்றிய செய்திகள் முற்று முழுதாக இருட்டடிப்புக்கு உள்ளாக்கப்பட்டது. தேர்தல் பிரச்சாரங்களின் இறுதி நாட்களில் ஒரு கிழமைக்கு மேலாக ஜெல்சினின் தலைமறைவானதுடன் திட்டமிடப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்திற்கு கூட வராமல் விட்டது தொடர்பாகவும் அவரது உடல் நிலை தொடர்பான செய்திகள் பற்றி ஒரு தகவல்களும் தெரிவிக்கப்படவில்லை.

மேற்கத்தைய ஆலோசகர்கள் சீ.ஐ.ஏ. உளவாளிகள் தொடர்பு சாதன நிபுணர்கள் ஆகியோர் கொண்ட ஒரு படை ஜெல்சினின் தேர்தலை தனக்கு சாதகமான முறையில் திருப்புவதற்கு உதவி செய்வதற்காக மொஸ்கோவுக்கு வரவழைக்கப்பட்டார்கள். யூலை 15 டைம் பத்திரிகை ஜெல்சின் மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்காக மொஸ்கோவில் அமெரிக்க குடியரசு கட்சியின் பிரதிநிதிகள் மேற்கொண்ட பிரசித்தி பெற்ற நடவடிக்கைகளை தனது ஆசிரிய தலையங்கத்தில் எழுதியது. உண்மையில் இது அமெரிக்க அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஜெல்சின் சார்பான நடவடிக்கைகளில் ஒரு மிகவும் சிறிய பகுதியாகும். யூன் 16 திகதிய முதலாம் கட்ட தேர்தலுக்கும் யூலை 3ம் திகதிய இரண்டாம் கட்ட தேர்தலுக்கும் இடையில் அளிக்கப்பட்ட வாக்குகளில் ஏற்பட்ட பாரிய மாற்றமானது மொஸ்கோவில் ஜெல்சின் அரசாங்கத்தினாலோ அல்லது அரசாங்கத்திற்கு சார்பான மொஸ்கோ அதிகாரிகளினாலோ தயாரிக்கப்பட்ட கள்ள வாக்குகளினாலேயே ஏற்பட்டது என பரவலாக சந்தேகிக்க படுகிறது. வட கவுக்காசஸ் பிராந்தியத்தில் டாகஸ்தானில் உதாரணமாக முதலாவது கட்டத் தேர்தலில் சுகானோ ஜெல்ஸ்டினுக்கு எதிராக பெரும்பான்மையான வாக்கு வித்தியாசத்தினால் வெற்றி பெற்றிருந்தார். ஆனால் இரண்டு கிழமைகளின் பின்னர் 54–43 என்ற விகிதாசாரத்தில் தோல்வியடைந்திருந்தார்.

ஜெல்சின் கடந்த மார்ச் மாதத்தில் புதிய சட்டங்களை தயார் செய்திருந்தார். இவைகள் தேர்தலை இரத்து செய்து பாரளுமன்றத்தை மூடி சுகானோவினது ரஷ்ய சம்மேளனக் கட்சியை தடைசெய்வதை நோக்கமாக கொண்டிருந்தது. இந்த உண்மையை ஐக்கிய அமெரிக்காவின் தொடர்புச் சாதனங்கள் முழுமையாக மூடிமறைக்கையில் யூலை 2ம் திகதி நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை ஒருசிறு குறிப்பை எழுதியதுடன் நிறுத்திக் கொண்டது. எப்படியாயிருந்தபோதும் மார்ச் மாதத்தில் ஜெல்சினுக்கு மிகவும் நம்பிக்கைக்கு பாத்திரமானவரும் மெய் பாதுகாவலருமான ஜெனரல் அலெக்ஸ்சாந்தர் கோசாகோல் இப்படியானதொரு நடவடிக்கைக்கு சார்பாக பகிரங்கமாக பேசியிருந்தார். இது ஒரு தொடர் எதிர்ப்புக்களை உருவாக்கியதனாலேயே. தேர்தலைத் தொடர்ந்து நடத்துவதென்ற முடிவு எடுக்கப்பட்டது.

## லேபேட்டின் பாத்திரம்

இறுதியில் இரண்டாம் கட்டத்தேர்தலில் வெற்றி பெறுவதற்கான நிலைமைகளை ஜெல்சின் தனது அரசாங்கத்தினுள் ஜெனரல் அலெக்சாந்தர் லெபேட்டை இணைத்துக் கொள்வதன் மூலம் ஏற்படுத்திக் கொண்டார். லேபேட் முதற்கட்டத்தேர்தலில் 15வீத வாக்குகளை பெற்றதன் மூலம் 3ம் இடத்தில் இருந்தார். மகாருஷ்ய தேசிய வாதியும் யூத எதிர்ப்பு வாதியுமான இவர் சிலியின் பாசிச சர்வாதிகாரியான ஓகொஸ்ரோ பினோசேயை பகிரங்கமாக புகழ்நதிருந்தார். ஐக்கிய அமெரிக்காவின் முழுமையான ஆதரவுடன் ஜெல்சின் இவரை தனது பாதுகாப்பு தலைவராக நியமித்ததுடன் பாதுகாப்பு மந்திரி பாவெல் கிரேசோவயும் இன்னும் மூன்று முக்கிய உதவியாளர்களையும் பதவியில் இருந்து விலக்கினார். முதலாம் கட்டத் தேர்தலில் லெபேட்டுக்கு வாக்களித்த 11 மில்லியன் வாக்காளர்களில் பெரும்பான்மையானோர் இரண்டாம் கட்டத் தேர்தலில் ஜெல்சினுக்கு வாக்களித்ததாக புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. அனைத்து வகையான ஜனநாயகம் எனக் கூறப்படும் இவர்களது வார்த்தை ஜாலத்திற்கு பின்னணியில் அதனது சாராம்சம் தங்கு தடையற்ற சுதந்திரத்தை உள்நாட்டு வெளிநாட்டு முதலாளிகளுக்கு வழங்குவதன் மூலம் தொழிலாள வர்க்கத்தின் மீதான சாண்டலையும் முன்னாள் சோவியத் யூனியனின் இயற்கை




*செலியாபின்சில் 1996 மே தின ஊர்வலத்தில் நான்காம்அகிலத்தின் ஆதரவாளர்கள்*

எப்படியாய் இருந்த போதும் ஜெல்சினது வெற்றி முதலாளித்துவ கூட்டிற்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. என்று கூறுவதை தேர்தலைப் பற்றிய ஒரு புறநிலையான ஆய்வுகள் முழுமையாக முறியடிக்கின்றன. இத்தேர்தலானது பாரிய ஊழல்களும் தந்திரோபாய சதிகளும் நிறைந்த ஒரு நிகழ்வாக இருந்த போதிலும் யூலை 3ம் திகதிய தேர்தல் முடிவானது ஜெல்சினுக்கு ஒரு முழுமையான வெற்றியை கொடுக்கவில்லை.

40 மில்லியன் ரஷ்யர்கள் தங்களது வாக்குகளை பதவியில் இருக்கும் ஜனாதிபதிக்கு வழங்கிய அதே வேளையில் 30 மில்லியன் சுகானோவிற்கு ஆதரவாக வாக்களித்தனர். வாக்களித்தவர்களில் 5வீமான 3.5மில்லியன் வாக்காளர்கள் தங்களது வாக்குச்சீட்டுகளில் இருவருக்கும் இல்லையென குறிப்பிட்டிருந்தனர். முதலாம் கட்டத் தேர்தலில் மூன்றில் இரண்டு தேர்தல் தொகுதிகளில் ஜெல்சினுக்கு எதிராக வாக்களித்ததை தொடர்ந்து இரண்டாம் கட்டத் தேர்தலில் இந்த முடிவுகள் ஏற்பட்டது.

## குறைந்த ஆபத்து

பெரும்பான்னையான ரஷ்யர்கள் தமது வாக்குகளை எவர் குறைந்த ஆபத்தானவர்கள் எனக் கருதிக் கொண்டார்களோ அவருக்கு அளித்தார்கள். ஜெல்சினுக்கு சார்பாக இஸ்வேஸ்டியா பத்திரிகையானது "கடந்த தேர்தலோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் ஜெல்சினது பரவலான ஆதரவு பாரிய அளவில் வீழ்ச்சி அடைந்திருக்கிறது" என எழுதியது. ஆனால் இதே பத்திரிகை தொடர்ந்து எழுதுகையில் "சுகானோ தொடர்பான ஆபத்திற்கு எதிர்ப்பை விட ஜெல்சினுக்கு எதிரான எதிர்ப்பு பலமாக இருந்தது" எனக் குறிப்பிட்டது.

ஜெல்சினுக்கு வாக்களிக்கையில் மில்லியன் கணக்கான ரஷ்ய தொழிலாளர்கள் ஜெல்சினது கட்சி முன்வைத்த முதலாளித்துவ சந்தை பொருளாதார கொள்கைகளுக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை. புதிதாக இவர்கள் சுகானோவும் அவரது கட்சியும் தங்களை அடையாளம் காட்டிக் கொண்ட ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் கசப்பான பாரம்பரியங்களுக்கு எதிராகவே வாக்களித்தார்கள்.

இதே போன்று சுகானோவுக்கு ஆதரவாக வாக்களித்தவர்களில் பெரும்பான்மையானோர் ஸ்டாலினிசத்தை திரும்பக் கொண்டுவருவதற்கு வாக்களிக்கவில்லை மாறாக ஜெல்சினது ஆட்சியின் கீழ் பரவி பெருகி வரும் வாழ்க்கைத்தரங்களில் ஏற்படும் பாரிய அழிவுகளுக்கு எதிராகவே வாக்களித்தனர். சில சந்தர்ப்பங்களில் ஒரு சந்தேகத்திற்கும் இடமில்லாமல் சுகானோவுக்கு வாக்களித்தவர்கள் அவரது கட்சியை ஒக்டோபர் புரட்சியின் பாரம்பரியத்துடன் தவறான வழியில் அடையாளம் கண்டு கொண்டனர்.

## ஸ்டாலினிஸ்டுகள் யாருக்கு சார்பாக பேசுகிறார்கள்.

ஜெல்சின் கட்டவிழ்த்து விட்ட பிரச்சாரங்களுக்கு எதிராக முதல் இரு கிழமைகளிலும் சுகானோவ் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அரசாங்கத்திற்கு எதிராக ஒரு சுதந்திரமான எதிர்ப்பினை இவரது கட்சியினால் கொடுக்க முடியாதிருந்த கையாலாகாத்

ஸ்தாபித்துக் கொண்ட ஸ்டாலினிஸ்டுகளின் அரசியலிலும் வர்க்க நிலைப்பாட்டிலுமே தங்கியிருந்தது. ருஷ்ய சம்மேளனத்தின் கம்யூனிஸ்ட் கட்சியானது முதலாளித்துவ புனருத்தாரணத்துக்கு எதிராக ஒரு மாற்றுத்திட்டத்தையும் முன்வைக்கவில்லை. பதிலாக அது "சந்தை சீர்திருத்தவாதங்களுக்கு" தொடர்ச்சியாக ஆதரவளித்தது.

இந்த ஸ்டாலினிச கட்சி சோவியத் தொழிலாளர்களின் சார்பில் கதைக்கவில்லை. கதைக்கவும் முடியாது. ஜெல்சினுக்கு எதிரான இந்தக்கட்சியின் தாக்குதலானது ரஷ்ய தேசிய வாதத்தில் இருந்து தோன்றுவதே தவிர சோலிச நிலைப்பாடான சர்வதேசிய வாதத்தில் இருந்து தொடங்கவில்லை. ஸ்டாலினிஸ்டுகளின் பிற்போக்கு அரசியல் அவர்களின் சமூக அடித்தளத்துடன் பின்னிப்பிணைந்துள்ளது. பழைய அதிகாரத்துவ தட்டுக்கள் கட்சி உத்தியோகத்தர்கள் அரச உத்தியோகத்தர்கள் என்போர் விக்ரர் செர்ணோமோடின் **(Viktor Chernomyrdin)** போன்ற ஜெல்சின் ஆதரவாளர்கள் அனுபவிக்கும் பாரிய நலன்களை அனுபவிப்பதற்கு தவறினர். சுகானோவ் இத்தட்டுக்களின் நலன்களை பிரதிநித்துவப்படுத்தியதுடன் தொழிற்சாலைகளினதும் விவசாயப் பண்ணைகளினதும் நிர்வாகிகள் தொடர்ந்தும் அரச சலுகைகளினதும் வர்த்தக பாதுகாப்பு கொள்கைகளிலும் தங்கியிருக்க வேண்டும் என்பதை முன்வைத்தார். இவரது கட்சியினது கோரிக்கைகளினது பிரதானமாக பழைய ஆளும் அதிகாரத்துவங்களின் பிரிவுகள் கொள்ளையின் நியாயமான பங்கினை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதேயாகும்.

இரண்டாம் கட்ட தேர்தல் முடிவதற்கு முன்னரே சுகானோவின் கட்சியானது "உள்நாட்டு யுத்தத்தை" தடைசெய்வதற்கான நோக்கத்திலே ஒரு "தேசிய ஐக்கிய" அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தது. சோவியத் தொழிலாள வர்க்கத்துடன் ஒரு மோதலுக்கு போவதற்கு ஜெல்சின் கூடாரத்தில் இருப்பவர்களிலும் பார்க்க ஒரு விதத்திலும் குறைந்தளவில் இவர்கள் பயப்படவில்லை.

ஜெல்சின் தேர்தலை வெல்வதற்கு பாவித்த முறைகளே இப்படியான மோதலுக்கான நிலைமைகளை விரைவாக உருவாக்குவதற்கான சந்தர்ப்பங்களை வழங்கியிருக்கின்றது. இந்த வருட ஆரம்பத்தில் இருந்து ஜெல்சின் வெட்கம் கெட்ட விதத்தில் வாக்குகளை வாங்குவதற்கு முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

அவர் ரஷ்யா முழுமையாக பிரயாணம் செய்ததுடன் கடந்த காலங்களில் வழங்கப்படாத சம்பளங்களை தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கும் ஓய்வூதியப் பணத்தை அதிகரிப்பதற்கும் தொடர்ச்சியாக மோசமாகிக் கொண்டிருக்கும் சமூக நிலைமைகளை சீர்திருத்துவதற்கும் வாக்குறுதிகளை அளித்திருந்தார். தேர்தல் முடிவினைத் தொடர்ந்து உடனடியாக பிராவ்தா பத்திரிகை பின்வருமாறு எச்சரிக்கை செய்தது "தேர்தல் பிரச்சாரத்தின் போது ஜெல்சின் சுகானோவ் போன்றவர்கள் ஒரு கம்யூனிஸ்டாக காட்சியளித்தனர். பல வாக்குறுதிகளை வழங்கினர். இவர் இதை நிறைவேற்ற வேண்டும் இல்லையேல் ஒரு சமூக வெடிப்பிற்கு முகம் கொடுக்க வேண்டும்".

இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாதென்பது ஒருவித கேள்விக்கும் அப்பாற்பட்டது. சர்வதேச நாணய

www.padippakam.com

அரசாங்கங்களுக்கும் ஜெல்சின் தனது தேர்தல் கடனை திருப்பிக் கொடுப்பதுடன் ரஷ்யாவுக்குள் சந்தைகள் தங்கு தடையற்ற ஊடுருவலை அனைத்து வளங்களையும் சுரண்டுவதற்காக நிபந்தனைகளை உருவாக்குமாறு நிர்பந்திக்கின்றனர். அமெரிக்காவின் உப ஜனாதிபதி அல் கோர்(**Al gore**) யூலை 12ம் திகதியில் மொஸ்கோவுக்கு விஜயம் செய்தார். இவருடன் தொடர்ந்து மூன்று நாட்கள் கழித்து சர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதிகள் மொஸ்கோ வந்தடைந்தனர். இவர்களது செய்தி தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட பொருளாதார சலுகைகள் ஒரு முடிவுக்கு வந்து விட்டதை தெரிவிப்பதாகும்.

### சர்வதேச நாணய நிதியத்தின் சவுக்குச்சத்தம்.

ஒரு காலனித்துவ அதிகாரியின் தோரணையில் சர்வதேச நாணய நிதியத்தின் மொஸ்கோ தூதுக்குழு பின்வருமாறு பிரகடனப்படுத்தியது "புதிய மந்திரி சபையை தீர்மானிக்கையில் பொருளாதார முக்கியத்துவங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். இலக்குகள் வரையறுக்கப்பட்டு வரவு செலவு திட்டத்தில் கவனம் செலுத்தி கூடிய விரைவில் வருமானத்தை அதிகரிக்க வேண்டிய வழிகளை கவனத்தில் கொள்ள வேண்டும் அத்துடன் செலவீனத்தை வரவு செலவு திட்டத்தின் ஒட்டுமொத்த இலக்குகளுக்கு முரணற்றதாக கவனத்தில் கொள்ள வேண்டும்" . இந்த இலக்குகளை அடைவதற்கு அரசாங்கம் மிச்ச மீதியாக இருக்கும் சமூகசேவைகளுக்கான செலவீனங்களை வெட்டுவதற்கும் தொழிற்துறைகளுக்கு வழங்கும் உதவி நிதிகளை அழித்தொழிப்பதற்கும் சம்பளம் வழங்குவதை நிறுத்துவதற்கும் நிர்பந்திக்கபடுகின்றது.

ருஷ்யாவில் அரசியல் நெருக்கடிகள் உருவாவதற்கான இன்னுமொரு காரணம் ஜெல்சின் அரசாங்கத்தினுள் தொடர்ச்சியாக ஏற்படுத்தப்படும் மாற்றங்களாகும் குறுகிய கால அரசியல் நலன்களுக்காக மேற்கொள்ளப்படும் இந்த உள் குத்து வெட்டுக்கள் ஜெல்சினது நோய்வாய்ப்பட்ட நிலமைகளுடன் இணைந்து நெருக்கடிகளையும் ஸ்திரமற்ற தன்மை கொண்ட நிலமையை உருவாக்குகின்றது. கடந்த ஜனவரி மாதம் ஜெல்சின் தனியார் மயமாக்குதலுக்கு பொறுப்பாய் இருந்த தனது பிரதி பிரதமமந்திரியான அனத்தோலி சூபாய்ஸ் **(Anatoly chubais)** மோசமான ஊழல்களுக்கும் சமூக சீரழிவுகளுக்கும் காரணமானவரென பதவி நீக்கம் செய்தனர். எனினும் சில மாதங்களுக்கு அனத்தோலி சூபாய்ஸ் ஜெல்சினது தேர்தல் பிரச்சாரத்தில் ஒரு பிரதானமான நபராக மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

பாராசூட் படைப்பிரிவின் முன்னாள் இராணுவத் தளபதியான லெபேட் கடந்த காலங்களில் ஜெல்சினதும் கோர்பச்சேர்வினதும் ஆட்சியின் கீழ் பிரதானமான ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு பெயர்பெற்றவர். இவர் ஊழலையும் குற்றச் செயல்களையும் அழித்தொழிப்பதென்ற பெயரில் ஒரு இராணுவ பாணியிலான கடும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார். இவர்களது சொந்த அரசியல் இலக்குகள் என்னவென்பதை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்தியிருக்கின்றார். ஜேர்மனியின் **Der spiegel** என்ற பத்திரிக்கைக்கு வழங்கிய பேட்டியொன்றில் ஜெல்சினது இரண்டாவது பதவிக்காலம் இரண்டாயிரம் ஆண்டில் முடிவடையும் போது ஜனாதிபதியாக வருவதற்கு லெபேட் முயற்சி செய்வாரா? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு "அனேகமாக அதற்கு முதலாக" என்று இவர் பதிலளித்தார்.

ஜெல்சினது அரசாங்கம் தற்போது நடமுறைப்படுத்துவதற்கென வைத்திருக்கும் பொருளாதார வேலைத்திட்டம் பாரிய தொழிற்சாலைகளை மூடுவதும் ஒட்டுமொத்தமான தொழிலிடங்களை அழிப்பதும் தொழிலாளர்களின் வருமானத்தின்மேல் கூர்மையான வெட்டுக்களை ஏற்படுத்துவதன் மூலம் மில்லியன் கணக்கான சமூக நலன்களை அழிப்பதுமாகும். இந்தக் கொள்கைகள் முன்னாள் சோவியத் யூனியனின் அரசியல் நிலமைகளில் உருமாற்றத்தை ஏற்படுத்துவதுடன் மக்கள் எழுச்சிகளையும் தூண்டிவிடும்.

இந்த நிலமைகளில் தீர்மானகரமானது ருஷ்யாவும் முன்னாள் சோவியத்யூனியனினதும் சர்வதேச சோசலிச வேலைத்திட்டத்தில் ஒரு புதிய அரசியல் இயக்கத்தை உருவாக்குவதாகும். சோவியத் தொழிலாளர்கள் ஸ்டாலினிச அதிகாரத்துவ அமைப்பில் இருந்து உருவெடுத்த ஜெல்ஸ்டின் கும்பலுக்கும் சுகானோவின் சட்சிக்கும் எதிராக தங்கள் சொந்த சுயாதீனமான கட்சியை கட்டியெழுப்ப வேண்டும். கடந்த பத்தாண்டு கால மாற்றங்கள் தொடர்பாக நான்காம் அகிலத்தின் ஆய்வுகள் சோவியத் தொழிலாளர்கள் மத்தியிலும் அதனது அரசியல் ஆளுமையை உறுதியாக்கியிருக்கின்றது. இனி உருவாக இருக்கும்

# தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தம்

## புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் பலம்வாய்ந்த தலையீடு

ஆறு லட்சம் தோட்டத்தொழிலாளர்களை போராட்டத்தில் இறங்கச் செய்த ஏப்ரல் 22–27 வரை நீடித்த அடையாள வேலைநிறுத்தம் நாடுதழுவிய ஒன்றாக விளங்கியது. நுவரெலியா அட்டன் மஸ்கேலியா நாவலப்பிட்டி இரத்தினபுரி மத்துகம காலி மாத்தறை முதலான இடங்களைச் சேர்ந்த தேயிலை இறப்பர் தெங்குத் தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்க வேறுபாடு இல்லாமல் இந்த வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்டனர். இந்த வேலைநிறுத்தத்தில் மலையகத்தின் தமிழ்பேசும் தொழிலாளர்கள் மட்டுமன்றி தென்மாகாணங்களின் சிங்களம் பேசும் தொழிலாளர்களும் பல்லாயிரக்கணக்கில் கலந்து கொண்டனர்.

முதலாளித்துவ அரசாங்கத்தினதும் தொழிற்சங்கங்களின் துரோக அதிகாரத்துவங்களினதும் பிரமாண்டமான பிற்போக்கு நெருக்குவாரங்களின் மத்தியில் இந்த அடையாள வேலைநிறுத்தம் தொடுக்கப்பட்டது.

பொதுஜனமுன்னணி அரசாங்கத்தின் அமைச்சரான இ.தொ.க. தலைவர் தொண்டமான் இந்த வேலைநிறுத்தத்தை நடாத்துவது அரசாங்கத்தை சங்கடத்துக்கு உள்ளாக்குவதற்கு அல்ல எனவும் வளர்ச்சி கண்டுவரும் தொழிலாளர்வர்க்கத்தின் கொதிப்பிலிருந்து அரசாங்கத்தைக் காப்பதற்கே எனவும் பகிரங்கமாகவே குறிப்பிட்டிருந்தார். சமசமாஜ ஸ்டாலினிச செங்கொடிச்சங்கம் ஐ.தொ.க. தலைவர்கள் இதற்கு பின்னணி பாடிய அதே வேளையில் பீ.சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணியும் சி.ல.சு.க. வும் கருங்காலி நடவடிக்கையில் வெளிவெளியாகவே ஈடுபட்டனர்.

தோட்டத் துறையினுள் வளர்ச்சிகண்டுவரும் குமுறல்களை முன்கூட்டியே நசுக்கும் பொருட்டு பொதுஜனமுன்னணி அரசாங்கம் ஏப்ரல் 4ம் திகதி நாடுபூராவும் அவசரகாலச்சட்டத்தைப் பிறப்பித்தது. அவசரகாலச்சட்டத்தை பிறப்பித்ததன் முக்கிய இலக்கு தோட்டத்தொழிலாளர்களைப் பயமுறுத்தி இனவாதத்தை தூண்டிவிட்டு அவர்களின் போராட்டத்தை சிதறடிப்பதாக இருந்தது. ஆனால் அது இரண்டு லட்சத்துக்கும் அதிகமான சிங்களத் தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் தமிழ்த் தொழிலாளர்களுடன் கலந்து கொண்டதால் தோல்வியடைந்தது.

இ.தொ.க. வும் தோட்டத் தொழிற்சங்க கூட்டணியும் பலவருடங்களாக ஒத்திப்போட்டு வந்த இந்த வேலைநிறுத்தப் போராட்டம் தொழிலாளர்களின் நெருக்குவாரம் காரணமாக பல கால்கட்டுக்களுடன் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டது. இப் போராட்டத்தின் முக்கிய கோரிக்கைகளாக நாட்சம்பளத்தில் ரூபா 8 அதிகரிப்பு ஆண்டொன்றுக்கு 300 நாள் வேலை நாள் என்பன அடங்கியிருந்தன. இ.தொ.க. தலைவர் தொண்டமான் இந்த வேலைநிறுத்தத்தை தோட்டங்களிலும் கோவில்களிலும் நடாத்தும் பூஜைகள் சத்தியாக்கிரகங்களுடன் மட்டுப்படுத்திவிட முயற்சித்தார். அங்ஙனம் செய்வதற்கு தலைவர்கள் பொறுப்பாக இருக்கவேண்டும் எனவும் உத்தரவிட்டுவிட்டு தொண்டமான் உத்தியோகபூர்வ விஜயமாக இந்தியா புறப்பட்டார். ஏனைய சகல துரோகத் தலைவர்களும் தோட்டங்களுள் ஒரு கூட்டமோ அல்லது ஒரு ஊர்வலமோ நடைபெறாதிருக்கும் வண்ணம் பார்த்துக்கொண்டனர்.

வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்ட இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் உயிர்த்துடிப்பினை துடைத்தெறியும் இந்த ஸ்தம்பித வேலைநிறுத்தத்தினுள் தொழிலாளர்களின் போராட்ட வீரியத்தை சுடர்விடச்செய்து வேலைத்திட்டமும் வழங்க இடைவிடாது போராடியது புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகமும் அதன் தொழிற்சங்கமான பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கமுமேயாகும். அதன் அங்கத்தவர்கள் பல தோட்டங்களில் கூட்டம் ஊர்வலம் மறியல்களை நடாத்துவதன் மூலம் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களிடையே வர்க்கப்போராட்டத்தின் தீச்சுவாலையை மூட்டினார்கள். இந்த தொழிலாளர்கள் பெ. தோ கை.தொ.ச. ஒழுங்கு செய்த மறியல் ஊர்வலங்களில் தொழிலாளர்கள் கலந்து கொண்டமை வர்க்க உறவுகளில் இடம்பெற்றுவரும் பாரிய மாற்றங்களைப் பிரத்தியட்சமாக்கியுள்ளது.

### பென்மூர் தோட்டம்

ஏப்ரல் 22ம் திகதி காலையில் அட்டன் ஸ்ரத்டன் தோட்டத்தின் பென்மூர் டிவிசனில் ஒழுங்கு செய்த மறியலில் அயல் தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் உட்பட சுமார் 25பேர் கலந்து கொண்டனர். அவர்கள் தோட்ட தனியார்மயத்தை நிறுத்து! ரூபா 5000 குறைந்தபட்ச மாதச்சம்பளம் வழங்கு! தொழில் வீடு தண்ணீர் பிரச்சினைகளை தீர்த்து வை! அரச ஒடுக்குமுறையை நிறுத்து! அவசரகால சட்டத்தை நீக்கு! தோட்டத்துறையின் அரசியல் கைதிகளை விடுதலை செய்! இனவாத யுத்தத்தை நிறுத்து! தேசிய பிரிவினைவாதத்தை நிராகரி! நடவடிக்கை பாதுகாப்புக் குழுக்களை கட்டியெழுப்பு! சோசலிசவேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடு! முதலான போராட்ட சுலோகங்களை அவர்கள் கோஷித்தனர். தொழிலாளர்கள் இந்த சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் சுலோகங்களைக் கோஷித்தவாறு பென்மூர் டிவிசனில் இருந்து டன்பார் தோட்டம் வரை ஊர்வலத்தில் சென்றபோது நூற்றுக்கணக்கான தொழிலாளர்களின் பேராதரவு கிடைத்தது. அடுத்து பென்மூர் தோட்டத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் 60க்கும் அதிகமான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். பெ.கை.தொ.ச. பென்மூர் கிளையின் செயலாளர் தோழர் பீ.சிவனு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பு.க.க. மத்தியகுழு உறுப்பினர் எம்.அரவிந்தன் துமிந்த பீரிஸ் முதலான தோழர்கள் உரை நிகழ்த்தினர். அரவிந்தன் தமது உரையில் "இ.தொ.க. இந்த வேலை நிறுத்தத்தை பொதுஜனமுன்னணி அரசாங்கத்துக்கு எதிராக தோட்டத்துறையில் அபிவிருத்தி கண்டுவரும் கொதிப்பின் எதிரில் அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்கே ஏற்பாடு செய்தனர். இ.தொ.க. வும் சமசமாஜ கம்யூனிசத் தலைவர்களும் அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டு இருப்பது தொழிலாளர்கள் உரிமையை வென்றெடுப்பதைத் தவிர்ப்பதற்கே. இதை விளங்கிக்கொள்ள வேண்டும். தொழிலாளர்கள் சுயாதீனமான முறையில் புரட்சிக்கட்சியைச் சூழ அணிதிரண்டு முதலாளிவர்க்கத்தை தூக்கி வீசி அரச அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். தனியார்மயத்தினால் தோட்டத் தொழிலாளர்களிடையே போஷாக்கின்மையும் நோய்களும் இறப்பு விகிதமும் உக்கிரம் கண்டுள்ளன. எமது சங்க அங்கத்தவரான பழனியம்மா புற்றுநோயினால் 36 வயதில் காலமானார். டன்பார் தோட்டத்தில் 36 வயதுடைய இராணி என்ற இரு குழந்தைகளின் தாய் பிரசவத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பலவீனத்தால் மரணமானார். ரூபா 8 அற்பசொற்ப சம்பள உயர்வுகளையும் கூட அரசாங்கம் வழங்க மறுத்துள்ளது. நாம் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச மாதச் சம்பளமாக ரூபா.5000 வேண்டும் முதலாளித்துவ ஆட்சியைத் தூ[...] வாழ்வுக்கும் சாவுக்கும் இடைப்பட்ட[...] உள்ளது. அதற்கு ஒரு புரட்சிக்கட்சியை[...] ஒன்றிணைவோம்" என்றார்.

இக்கூட்டத்தில் பேசிய து[...] "பொதுஜனமுன்னணி அரசாங்கத்[...] தொடுக்கப்பட்டுவரும் இனவாத யுத்தத்[...] தெளிவுபடுத்தினார். இந்த இனவாத [...] மக்களுக்கு மட்டும் எதிரானது அல்[...] தொழிலாளர் வர்க்கத்துக்கும் [...] பயன்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர் ச[...] ஆல் அதிகரித்தாலும் பிரச்சினை தீ[...] ஏற்கனவே பாண் மாவு விலை உய[...] பிரிவினைவாத விடுதலைப்புலிகள் [...] சமீபத்தில் மத்தியவங்கி கட்டிடத்[...] வைத்தார்கள் இந்தப் பிற்போக்குத் [...] பயன்படுத்தும் பொதுஜனமுன்னணி அரசா[...] இராணுவமயப்படுத்தி வருகின்றனர். [...] அவசரகாலச்சட்டம் விதிக்[...] தொழிலாளர்வர்க்கப் போரா[...] வேலைநிறுத்தங்களையும் முறியடிப்[...] இலக்காகும். இதற்கு எதிராக வடக்கி[...] உள்ள தொழிலாளர்கள் ஒன்றிணைந்[...] வேலைத்திட்டத்துக்காகப் போராடவேண்[...] சகல தொழிற்சங்கங்களும் தொ[...] பிளவுபடுத்துகின்றன. நாம் தொழிலா[...] பாட்டாளிவர்க்க அனைத்துலகவாத [...] ஒன்றிணைக்கப் போராடுகின்றோம்" என்றா[...]

இதற்கிடையே அவசரகாலச்சட்ட[...] உண்மையில் யாருக்கு எதிராக விதிக்கப்[...] என்பதற்கு நல்ல அனுபவம் [...] பெ.தோ.கை.தொ.ச. வேலைநிறுத்தத்தின் [...] திகதிய வேலைநிறுத்தத்தினைப்பற்றி அட்[...] மண்டபத்தில் கூட்டம் நடாத்தவும் ஏற்பாட[...] இதற்கு மண்டப அனுமதி கே[...] ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதற்கு முன்[...] நகரசபைத் தலைவரின் அனுமதியுடன் [...] வந்தது. ஆனால் இத்தடவை பொலீசா[...] வேண்டும் என சுட்டிக்காட்டினர். ம[...] ஒலிபெருக்கி இல்லாமல் நடாத்தப்படும் கூ[...] பொலீசாரின் அநுமதி வேண்டியதில் [...] சுட்டிக்காட்டியபோது அவசரகாலச் [...] தோட்ட வேலைநிறுத்தத்துக்கும் இடையே[...] கட்டளை அனுப்பப்பட்டு இருப்பதாக[...] அதிகாரிகள் தெரிவித்தனர். இதைத் தொட[...] அதிகாரிகளை அணுகியபோது [...] அனுமதிக்கடிதம் வழங்க முடியாதென[...] அதிகாரிகள் விரும்பினால் மண்டபத்தை வ[...] எனவும் பொலீஸ் தலைமையக அதிகாரி [...] எவ்வாறெனினும் பொலீஸ் [...] பெற்றேயாகவேண்டும் என நகரசபைத்[...] நின்றுகொண்டார். இந்த கயிறிழுப்பினால் கூ[...] போய்விட்டது. உண்மை என்னவெனில் [...] தலைவர்கள் தோட்டத்துறை பூராவும் [...] வந்த மௌனத்தினை சிதறடித்துக் [...] தொழிலாளர்களின் குரல் வெடிக்கும் [...] முதலாளிவர்க்கமும் அஞ்சியதே ஆகும்.

சமசமாஜ கம்யூனிஸ்ட் இ.தொ.கா. தலைவர்கள் ஒரு கூட்டமோ அல்லது நடத்தாது இருக்கப் பார்த்துக்கொண்டனர்.



www.padippakam.com



# ...தொழிலாளர் புரட்சிக் கட்சி நேட்டோ ...ாமில் இணைந்து கொண்டது எப்படி?

# ...ல்கனில் ஏகாதிபத்திய யுத்தமும் – குட்டி ...தலாளித்துவ இடதுசாரிகளின் சீரழிவும்

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை

## பகுதி 1

...டாம் உலக யுத்தத்தின் முடிவின் 50 ...டங்களின் பின்னர் பெரு வல்லரசுகள் ...டும் ஒருமுறை உலகினை வன்முறை ...பங்கீடு செய்வதில் இறங்கியுள்ளனர். ...ாவின் கலைப்பினால் விளைவாக்கப்பட்ட ...பழமை வாய்ந்த முரண்பாட்டினுள் மேற்கு ...ும் ஐக்கிய அமெரிக்காவினதும் ... முக்கியத்துவம் இதுவேயாகும். ...தான நேட்டோவின் ஆக்கிரமிப்பு பால்கன் ...ு இராணுவத் திருப்புமுனை என்பதை– ...ாகும். சோவியத் யூனியனின் உடைவின் ...ிபத்திய சக்திகளின் முதலாவது பாரிய ... இராணுவ நடவடிக்கையாக விளங்கும் ...து பரவலாக அழைக்கப்பட்ட புதிய உலக ...டைமுறையாகும். இது இந்த நூற்றாண்டின் ... ஏகாதிபத்தியத்தின் எழுச்சியுடன் ... யுத்தங்களதும்–புரட்சிகளதும் ... பழைய உலக ஒழுங்கினை பெரிதும் ...ாங்குகின்றது. முதலாம் உலக யுத்தத்திற்கு ...கட்டத்தைப் போன்றே பிரதான வல்லரசுக– ... பொருளாதார அரசியல் இராணுவ ...ுக்கான செறிவான முரண்பாட்டின் மோதல் ...ல்கன் மாறியுள்ளது.

...ாவிலான அமெரிக்காவினது சமாதான ... ஏற்கனவே இரண்டு லட்சத்திற்கும் ...களை அழித்தும் மேலும் பல மில்லியன் ...ரை அகதிகளாக்கியும் உள்ளன இது இன ...ான பிரிவினை நிகழ்வுப் போக்கை ...வதை நோக்கமாகக் கொண்டதாகும். ...ராணுவத்தின் தோல்வியின் பின்னர் முதல் ... பால்கனில் ஏகாதிபத்தியப் படைகளை ...துவதை முன்னெடுப்பதன் மூலம் ஐக்கிய ... புதியதும் பரந்துபட்டதுமான ...ின் எழுச்சியை உத்தரவாதம் செய்கின்றது. ...கான நிலமைகளை சிருஷ்டிப்பதற்கு ... யுத்த விமானங்கள் மூலமும் இப் ... உள்ள வாஷிங்டனின் கையாள் ...ன் மூலமுமான இராணுவ சக்தி கிளின்ரன் ...ல் பாவிக்கப்பட்டது. கடந்த ...ன அமெரிக்காவின் ஆகாயத் தாக்குதல்கள் ... மேற்கொள்ளப்பட்டது. அதாவது ஒரு ... மேற்பட்ட குண்டுகள் அத்துடன் ... கடலில் இருந்து அமெரிக்க யுத்தக் ... ஏவுகணைத் தாக்குதல்களையும் ...ன. பொஸ்னியா பூராவும் நகரங்களும் ... இலக்காக்கப்பட்டதுடன் பல ...கான பொது மக்கள் கொன்றும் ...பட்டும் உள்ளனர்.

...ண்டு வீச்சுக்களின் உடனடியான நோக்கம் ...வ சேர்ந்த சேர்பிய இராணுவத்தின் ...ாடர்பு வசதிகளையும் போக்கு வரத்து ...ாயும் முழுமையாக நசுக்கி அழிப்பதன் மூலம் ... முஸ்லீம்களுடனும் குரோஷிய ...ும் இணைந்து குரோஷியாவின் ...ன இராணுவம் வடமேற்கு பொஸ்னியாவில் ...யப் பிராந்தியத்தை வெறுமையாக்குவதற்கு ...ாகும். இத் தரைத்தாக்குதல் ...காணோரைக் கொன்று காயப்படுத்தியதுடன் ... ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் ... மேலும் அகதிகளாக்கியது. ஐக்கிய ...ின் பின்னணி ஆதரவுடன் குரோஷிய ...ால் மேற்கொள்ளப்பட்ட ஒரு இராணுவ ...யின் போது கடந்த ஆகஸ்டில் ... முசயதயை இருந்து வெளியேற்றப்பட்ட ...

அமெரிக்கா பொஸ்னிய உள்நாட்டு யுத்தத்தின் முழுக்காலகட்டத்தின் போதும் இடம்பெற்றிருக்காத அளவிலான பாரிய இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளை விரைவாக்கியது. இவ்விதமாக ஒகியோவில் **(Ohio)** உள்ள டைற்றனில் **(Dayton)** அமெரிக்காவினால் தரகு வகிக்கப்பட்டு நடைபெற்ற பேச்சு வார்த்தைகளுக்கான நிலமை சிருஸ்டிக்கப்பட்டது.

பல வருடங்களாக ஐரோப்பாவினால் முன்னெடுக்கப்பட்ட தீர்வுகளை அவை "இன சுத்திகரிப்பிற்கு" இடமளிக்கின்றன என்றும் பொஸ்னியாவின் சுதந்திரத்தையும் பல்லினத் தன்மையையும் பேணத் தவறிவிட்டன என்றும் தடைப்படுத்திக் கொண்டிருந்த வாஷிங்டன் ஒருதலைப்பட்சமாக தனது சொந்த துண்டாடல் திட்டத்தை சுமத்தியுள்ளது. தனது ஐரோப்பியக் கூட்டாளிகளை ஒரு புறமாக ஒதுக்கித்தள்ளி விட்டு ஐக்கிய அமெரிக்கா பொஸ்னியாவை முஸ்லீம் சேர்பிய குரோஷிய நிலத்துண்டுகளாகப் பிரிக்கும் உள் எல்லைகளை உச்சரித்துள்ளதுடன் மேலும் முன்னாள் யூகோஸ்லாவிய குடியரசிற்கு ஒரு புதிய யாப்பினையும் வரைந்துள்ளது. இப் பிரிவினையை அமுல் செய்வதற்கும் புதிய எல்லைகளின் பிழையான பக்கங்களில் இயல்பாகவே மாட்டிக்கொண்ட இனச் சனத்தொகையினரை முறைப்படி வெளியேற்றுவதற்கும் 60000 நேட்டோ படையினர் பொஸ்னியாவுக்கு அனுப்பப்பட்டுக் கொண்டுள்ளனர். கிளின்ரன் நிர்வாகத்தின் பேச்சாளர்கள் அமெரிக்கத் திட்டத்தினை எதிர்க்கும் எவர் ஒருவருக்கு எதிராகவும் அடக்கி ஆளும் சக்தியை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளனர்.

சேர்பியாவின் சுலோபடான் மிலோசவிச் குரோஷியாவின் பிராங்கோ துஷ்மான் பொஸ்னியாவின் ஜனாதிபதி அலியா இசபெகோவிச் ஆகியோர் டைற்றனில் உள்ள அமெரிக்க ஆகாயப்படைத்தளத்திற்கு இத் தீர்வினை நியாயப்படுத்துவதற்கு கொண்டு வரப்பட்டனர். கடந்த மூன்று வருடங்களாக மிலோசவிச்சினை ஒரு பால்கனின் கிட்லராக ஒப்பீடுசெய்து கண்டித்துவிட்டு திடீரென வாஷிங்டன் டைற்றனில் அவரை சமாதானத்துக்கான ஒரு துணிகரமானவர் எனத் தழுவிக்கொண்டது. பொஸ்னிய சேர்பியர்களிடையே மிகவும் மதவெறி பிடித்த வகுப்புவாத மூலகங்களை உற்சாகப்படுத்தியும் சேர்பிய சோவினிசத்தை தூண்டிவிட்டும் தனது அதிகாரத்தைப் பலப்படுத்திக்கொண்ட மிலோசவிக் பொஸ்னிய யுத்தத்திற்கான ஒரு பிரதான பொறுப்பை வகிக்கிறார். எப்படியிருந்தபோதும் டைற்றனில் அவர் சேர்பியர் வசிக்கும் பிராந்தியத்தை பெல்கிரேட்டுக்கான பொருளாதாரச் சலுகை வாக்குறுதிக்குப் பதிலீடாக கையளித்துள்ளார்.

யுத்தத்தின் பிரதான வெற்றியாளனாக ருஜ்மன் சேர்பியர்களைத் துரத்தியடிப்பதற்கான அமெரிக்காவின் உயர்ந்தபட்ச உதவிக்கு நன்றி தெரிவித்தவாறு பேச்சுவார்த்தைக்கு வந்தார். அவர் பெருமளவில் அவரது இலக்கான ஒரு இனரீதியில் ஒருங்கிணைந்ததான குரோஷியாவை சிருஷ்டிப்பதில் வெற்றியீட்டியுள்ளார். அவருங்கூட பொஸ்னியப் பிராந்தியத்தின் ஒரு பெரும்பகுதியை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததுடன் அதனை குரோஷியாவின் ஒரு இணைப்பு மாகாணமாகவும் மாற்றியுள்ளார்.

வருடக்கணக்காக வாஷிங்டன் பால்கனிலான அதனது தலையீட்டை கூறப்பட்ட பொஸ்னிய சுதந்திரத்தையும் பல்லினத் தன்மையையும் பாதுகாப்பதன் அடிப்படையில் நியாயப்படுத்தியது. பொஸ்னிய ஆட்சியின் சுதந்திரத்தினது புனைவுத் தன்மையானது அமெரிக்க அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்டு ...

ஆலோசகர் ரேகன் நிர்வாகத்தின் கீழ் அணு ஆயுதக் கொள்கையின் பாதுகாப்பு பொறுப்பிற்கு உப செயலாளராக விளங்கிய றிச்சாட் பேர்ள் **(Richard Perle)** ஆவார். இன்னொரு அமெரிக்கர் நியூ ஹாம்ஷேர் **(New Hampshire)** என்னும் இடத்தில் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் தலைவராக விளங்கிய கிறிஸ் ஸ்புறு **(Chris Spirou)** இவர் பேச்சுவார்த்தைகளில் பொஸ்னியப் பிரதிநிதியாக நேரடியாகப் பங்குபற்றினார். அரச திணைக்களத்தின் விசேட கொடுப்பனவின் கீழ் பொஸ்னிய வெளிநாட்டு அமைச்சராக செயல்படும் இன்னொரு அமெரிக்கப் பிரஜையான முகமட் சகிர்பே **(Muhamed sacirbey)** யுடன் கிறிஸ் ஸ்புறு இணைந்து கொண்டார். பொஸ்னியப் பிரதிநிதிகளின் தெரிவு டைற்றன் பேச்சுக்களின் ஏனைய எல்லாக் கூறுகளையும் போலவே இந்தக் கூறப்படும் சமாதான உடன்படிக்கையின் அடிப்படையான இயல்பினை வெளிப்படுத்துகின்றது. இது ஒரு பாரம்பரிய ஏகாதிபத்திய துண்டாடலாகும்.

வியட்னாம் யுத்தத்தின் 20 வருடங்களின் பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்னொரு பேரழிவு மிக்க தோல்வியை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளது. பொஸ்னியாவிலான வாஷிங்டனின் இறுமாப்பு மிக்க ராஜதந்திரம் முன்னறிந்திராத அளவு அமெரிக்க ஐரோப்பிய நெருக்கடியை ஏற்கனவே உருவாக்கியுள்ளதுடன் நேட்டோ கூட்டினையும் உடைவுப் புள்ளிக்கு கொண்டுவந்துள்ளது. இத் தலையீடு கடந்த 15 வருடங்களாக ஐக்கிய அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு நீண்ட தொடர் இராணுவ நடவடிக்கைகளில் மிகவும் அண்மையதாகும். வாஷிங்டன் அமெரிக்காவின் பூகோள நலன்களை முன்னெடுப்பதற்கு திரும்பத் திரும்ப ஆயுத பலத்தை நாடிநின்ற இந்த எல்லா வேளைகளிலும் தனது நடவடிக்கைகளை சமாதானம் ஜனநாயகம் மனித உரிமைகளை பாதுகாத்தல் என்ற உரிமைகோரலின் கீழ் மேற்கொண்டது.

1980ல் இருந்து உலகம் கிரெனடா பனாமா மீதான ஆக்கிரமிப்பு லிபியா மீதான குண்டு வீச்சு நிக்கரக்குவாவிலும் எல்சல்வடோரிலுமான சீ.ஐ.ஏ. யினால் வழிநடத்தப்பட்ட கேடுகெட்ட யுத்தங்கள் லெபனான் சோமாலியா கயிற்றி ஆகியவற்றின் மீதான இராணுவ ஆக்கிரமிப்புக்கள் அத்துடன் நிட்சயமாய் வளைகுடா யுத்தம் ஆகியவற்றையும் கண்டுகொண்டது. அமெரிக்க இராணுவ வாதத்தின் இன்னும் பாரிய எழுச்சிகள் எதிர்வரும் காலங்களில் காத்துக்கொண்டுள்ளது. இன்று நடந்துகொண்டிருக்கும் சீன விரோதப் பிரச்சாரத்திலும் அதேபோல் ஜப்பானுடனான நீடித்த வர்த்தகத் தகராறுகளிலும் உள்ளடங்கி இருப்பது ஆசியாவிலான எதிர்கால யுத்தங்களுக்கான விதைகளாகும்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் 2ம் உலக யுத்தத்தினைத் தொடர்ந்து அது ஈட்டிக்கொண்ட பொருளாதார மேலாதிக்கத்தினை இழந்த நிலமையின் கீழ் தனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள அதனிடம் இன்னமும் எஞ்சியிருக்கும் இராணுவ பலத்தினை நோக்கி என்றுமில்லாத அதிகரித்த விதத்தில் திரும்புகின்றது. ஐக்கிய அமெரிக்காவிலும் உலகம் பூராவும் தொழிலாளர் இயக்கத்தில் ஆதிக்கம் செலுத்தும் மரணத்தறுவாயில் உள்ள அதிகாரத்துவங்கள் ஏகாதிபத்தியங்களது எந்த நடவடிக்கைகளையும் எதிர்ப்பதற்கு இயலும் தன்மையையோ அல்லது ஒரு சிறு நகர்வினையோ காட்டவில்லை. பரந்துபட்ட தொழிலாளர்கள் அரசியல் ரீதியாக வழிதடுமாறியுள்ளதற்கும் அந்தவகையில் இந்த அபிவிருத்திகளில் இயல்பாகவே அமைந்துள்ள பேரழிவு மிக்க அபாயங்களை பரந்துபட்ட மக்கள் புரிந்து கொள்ள முடியாத மட்டத்திலான சமூக நனவு நெருக்கடி ஒன்றை ...

### பொஸ்னியாவும் இடதுசாரிகளும்

1960களிலும் 1970களின் ஆரம்பத்திலும் அரசியலில் தீவிரமயப்பட்ட ஒரு பரந்த சமூகத்தட்டினர்க்கு பொஸ்னியாவிலான சம்பவங்கள் ஒரு கூர்மையான வலதுசாரி திருப்பத்திற்கான சந்தர்ப்பமாகும். ஏகாதிபத்தியத்தின் இராணுவத் தலையீடுகளுக்கும் அடக்குமுறை நடவடிக்கைகளுக்கும் எதிரான பழைய எதிர்ப்பு இயக்கங்களில் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிய இவர்களில் பலர் இன்று ஏகாதிபத்தியம் பொஸ்னிய யுத்தத்தினுள் நுழைவதற்கான தயாரிப்பிற்கு உதவினார்கள். முன்னய ஒரு காலகட்டத்தில் புரட்சிகர ரீதியாக ஒலிக்கும் பெயர்களைக் கொண்டதும் மார்க்சிச வசன ஜாடையை த்துக்கொண்டதுமான அமைப்புக்களில் ஒரு பகுதியினர் இணைந்தவேளையில் ஏனையோர் யுத்த எதிர்ப்பு வாதிகளாகவும் லிபரல் மனிதாபிமான வாதிகளாகவும் மாறினர். அவர்கள் ஏகாதிபத்தியத்தினது மிகவும் அப்பட்டமான குற்றச்செயல்களை கண்டித்த அதேவேளையில் மாணவர் சக்தி பெண் விடுதலை பல்வேறுவடிவிலான தேசிய வாதங்கள் போன்ற நெறிப்படுத்தல்களுக்கு வக்காலத்து வாங்கினர். அவர்கள் எல்லோரும் தங்களது அரசியலுக்கு வர்க்கப் போராட்டத்தை அடித்தளமாகக் கொள்ளத் தவறியதுடன் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரப் பாத்திரத்தினை நோக்கி ஒரு ஆழமான ஐயுறவு வாதத்தினைப் பகிர்ந்துகொண்டனர். தற்போது அவர்கள் அவர்களாலேயே பரிந்து கொள்ளமுடியாத பலம்மிக்க வர்க்க சக்திகளின் தாக்கத்தின் கீழ் இழுத்துச் செல்லப்படுகின்றனர்.

அன்ரனி லூயிஸ் **(Antony Lewis)** போன்ற லிபரல் பண்டிதர்கள் வியட்னாம் யுத்தத்திற்கு எதிரான தங்களது முன்னய எதிர்ப்புக்கு பரிகாரம் தேடும் வகையில் கட்டுரைக்குப் பின் கட்டுரையாக வாஷிங்டனும் ஏனைய ஏகாதிபத்திய சக்திகளும் இராணுவத் தாக்குதலை மேற்கொள்ளுமாறு அழைப்புவிடுக்கின்றனர். அவர்கள் குளிர் யுத்தத்திற்கு பிந்திய காலகட்டத்தில் ஏகாதிபத்தியக் கொள்கை ஒரு ஒழுக்க நெறி அவசியத்தினால் – இந்தவகையில் சேர்பியர்களை தண்டிப்பதற்கு – வழிநடத்தப்படுவதாக விவாதிக்கின்றனர். பெரும்பாலும் அவர்களும் அவர்களைப் போன்றோரும் முன்னய ஒரு காலகட்டத்தில் ஏகாதிபத்தியத் தலையீட்டை எதிர்ப்பதற்கு கனோய் **(Hanoi)** யிற்கு அல்லது பெய்ரூட்டிற்கு **(Beirut)** விஜயம் செய்ததுபோல் இன்று எழுத்தாளர் சுசான் சொன்ராக் **(Susan Sontag)** நடிகை வனசா ரெட்கிரேவ் **(Vanessa Redgrave)** போன்றோர் ஏகாதிபத்திய தலையீட்டை ஆதரிக்கும் பொருட்டு சரஜேவோ **(Sarajevo)** விற்கு யாத்திரைகளை மேற்கொள்கின்றனர். அவர்கள் தங்களது சொந்த அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை கருதுவதற்கும் கூட நின்று பார்க்கவில்லை.

ஏனையோர் பொஸ்னியாவில் தங்களது நீண்ட வலது நோக்கிய திருப்பத்தை பூரணப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தைக் கண்டுகொண்டனர். ஐக்கிய அமெரிக்காவில் இரண்டு தசாப்தங்களுக்கு முன்னரே ட்ரொட்ஸ்கிச இயக்கத்தில் இருந்து உடைத்துக் கொண்ட ரிம் வொல்போத் **(Tim Wohlforth)** "யுத்தத்திற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்குங்கள்" எனத் தலைப்பிடப்பட்ட ஒரு கட்டுரையில் பொஸ்னியாவில் அமெரிக்க இராணுவ நடவடிக்கைக்கான தனது ஆதரவை அறிவித்தார். இன்று ஏகாதிபத்தியத் தலையீட்டுக்கு ஆதரவு வழங்கும் முன்னை நாள் யுத்த எதிர்ப்பாளர்களின் ஒரு பரந்த தட்டினர்க்கு அறிவித்துக்கொள்ளும்போது "நாங்கள் எங்களது அணிவகுப்பில் முன்னோக்கிச் செல்கையில் எங்களது முஸ்டிகளை உயர்த்தியவாறு எங்கு ஒழுக்க ரீதியாக இராணுவ நடவடிக்கை அவசியமோ அப்போது அதற்கான அழைப்பை எங்களது பதாகைகளில் பறக்கவிடவேண்டும்" என அவர் பிரகடனப்படுத்துகின்றார். இத்தாலிய தீவிரவாதக் குழுவான லொற்றா கொன்ருனுவா **(Lotta Cotinua)** வின் முன்னாள் தலைவரான அட்றியானோ சொவ்றி **(Adriano Sofri)** சேர்பியர்களுக்கு எதிரான உடனடி இராணுவ நடவடிக்கைகளுக்கு அழைப்புவிட்டார். "நான் அவர்களுக்கு குண்டு போட விரும்புகிறேன். தனிய குண்டு மட்டுமே போட விரும்புகிறேன்" என அவர் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

ஜேர்மனியைப்போல் வேறெங்கும் பொஸ்னிய விவகாரம் அரசியலில் ஒரு நீண்டகால வலதுசாரித் திருப்பத்தினை முடிவிற்கு கொண்டுவரவில்லை 1945ல் மனித வரலாற்றிலேயே மிகவும் கொடூரமான குற்றங்களுக்கு ஜேர்மன் குட்டிமுதலாளித்துவம் துணைபோனதின் பின்னர் சுவஸ்டிக்கா நாசிகளின் சின்னம் சின்னத்தை சுவரில் இருந்து கழற்றிவிட்டு சமாதானவாதத்தினை தூக்கிப் பிடித்துக் கொண்டது. இந்த அடித்தளத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு பரந்துபட்ட எதிர்ப்பு இயக்கம் 1980கள் வரை தப்பிப் பிழைத்ததுடன் இன்றும் கூட பசுமை கட்சி **(Green Party)** என்ற வடிவத்தில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. பேர்லின் சுவரின் வீழ்ச்சிக்கும் ஜேர்மன் மறுஐக்கியத்திற்கும் பின்பு எப்படியிருந்தபோதும் அரசியல் வர்க்க சக்திகளின் அணிசேர்க்கை புதிதாக உருவாகியுள்ளது. அதனது அரசியல் பொருளாதார சக்தி கெட்டியாகப் பலமடைந்துள்ள ஜேர்மன் முதலாளித்துவம் மீண்டும் ஒரு முறை உலக அரங்கினுள் சாகசம் மிக்கதாக நுழைந்துகொண்டுள்ளது. ஜேர்மன் மூலதனத்தின் மீள் ...

படிப்பகம்

www.padippakam.com

குழந்தைகள் யுத்த எதிர்ப்பினை நிராகரிப்பதோடு நேட்டோவின் ஆகாயத் தாக்குதலுக்கு வக்காலத்து வாங்குவதன் மூலமும் பால்கனிலான ஜேர்மன் இராணுவத்தின் இரண்டாம் உலக யுத்தத்தின் போதான பாதையை மீள வரையுமாறு இராணுவத்துக்கு அழைப்பு விடுவதன் மூலமும் ஜேர்மன் தேசத்திற்கான தங்களது விசுவாசத்தை காட்டிக்கொள்கின்றனர். 1968 மாணவர் எதிர்ப்பில் மிகவும் ஆக்கிரோஷமாக விளங்கிய டானியல் கோன் பென்டிற் **(Daniel Cohn Bendit)** ஒரு "மனிதாபிமான" ஏகாதிபத்தியத் தலையீட்டின் வக்கீலாக எழுந்துள்ள அதேவேளையில் பிராங்போர்ட் பாடசாலையின் ஒரு முன்னணி நபரான யூர்கன் ஹாபர்மாஸ் **(Jurgen Habermas)** தான் "நடுங்கும் கரங்களுடன்" இராணுவ நடவடிக்கைகளுக்கு பின்னணி ஆதரவு வழங்க கட்டாயப் படுத்தப்பட்டதாக அறிவிக்கின்றார். ஒரு சர்வதேச மட்டத்தில் முன்னய ஒரு காலகட்டத்தில் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்களை எதிர்த்த அதே நபர்கள் இன்று இன சோவினிச யுத்த அல்லோல கல்லோலங்கள் நேட்டோ குண்டுவீச்சுத் தாக்குதல்கள் அமெரிக்க ஆக்கிரமிப்பு போன்ற எல்லாவற்றிற்கும் மனித உரிமைகள் தேசிய சுயநிர்ணயம் என்பவற்றின் பேரால் ஆதரவளிக்கின்றனர்.

"இடது" என்கின்ற பதம் இந்த மூலகங்களை விபரிப்பதற்கு விமர்சனம் அற்ற முறையில் பிரயோகிக்கப்படுமாயின் இது அதனை தெளிவு படுத்துவதற்குப் பதிலாக மங்கலாக்கவே உதவிசெய்யும் ஏனெனில் இது அவர்களின் பரிணாமத்தை கணக்கில் கொள்ளத் தவறி விடுகின்றது. இந்த சமூக அரசியல் போக்கினை முன்னைநாள் குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளின் முகாம் எனக் குறிப்பிடுவது சில வேளைகளில் மிகச் சரியானதாக இருக்கும்.

## ஏகாதிபத்தியத்தை நோக்கிய திருப்பத்தின் பின்னால்

இந்தப் போக்கின் பிரதிநிதிகள் ஏகாதிபத்திய முகாமினுள்ளான தங்களது திருப்பத்திற்கான காரணமாக சேர்பியக் கொடூரங்களைக் குறிப்பிடுகின்றனர். இத்தகையதொரு அடித்தளமான அரசியல் மீள்அணிதிரள்வுக்கான திருப்தி அளிக்கும் விளக்கமாக இது மிகவும் அரிதாகத்தான் விளங்குகிறது. சேர்பிய தேசியவாத சக்திகள் மிகவும் பரந்துபட்ட கொடூரங்களை மேற்கொண்டனர் என்பதில் எந்தக் கேள்விக்கும் இடமில்லை. ஆனால் குரோஷிய இராணுவத் துருப்பினரும் தற்காலிக படையினரும் குரோஷியாவில் உள்ள சேர்பியர்களுக்கு எதிராகவும் பொஸ்னியாவில் உள்ள முஸ்லீம்கள் சேர்பியர்கள் ஆகிய இரு சாராருக்கு எதிராகவும் இதையொத்த குற்றங்களை நிகழ்த்தியுள்ள குற்றவாளிகளாவர். முஸ்லீம் படைகளும் பொஸ்னியாவில் உள்ள சேர்பியர் குரோஷியர்கள் மீது இத்தகைய தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இந்த எல்லா தேசியவாதக் கன்னைகளும் இனவாதம் என்கின்ற பிற்போக்கு கோட்பாட்டு அடித்தளத்தில் அரசுகளை துண்டாட முயற்சிக்கும் அரசியல் அயோக்கியர்கள் முன்னாள் ஸ்ராலினிச அதிகாரத்துவங்கள் வகுப்புவாத அரசியல் வாதிகள் போன்றோரினால் வழிநடத்தப்படுகின்றன. இறுதி ஆய்வுகளில் இவர்கள் எல்லோரும் பால்கனில் ஒரு புதிய மீள்பிரிவினைக்கு முயற்சிக்கும் இந்த அல்லது அந்த ஏகாதிபத்தியக் கன்னையின் ஏஜன்டுகளாகத் தொழிற்படுகின்றனர்.

முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கான ஒரு அரசியல் அணுகுமுறை அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் சார்பு ரீதியான கொடூரத்தினை அடித்தளமாகக் கொண்டு போட்டியிடும் தேசிய வாதக் குழுக்களிடையே கன்னைகளைத் தேர்ந்தெடுப்பதுடன் சம்பந்தப்பட வேண்டும் எனும் கூற்றை ஒருவர் ஏற்றுக்கொள்ள முடியுமானால் பின்னர் அவர்களது சொந்தப் பிராந்தியத்தை விட்டு பாரிய அளவில் வெளியேற்றப்பட்ட கிராஜினாவின் சேர்பியர்களுக்கும் இதேபோன்ற ஒரு அவசியமான முடிவையே எடுக்கவேண்டியிருக்கும். இன்னமும் கிராஜினாவினது சேர்பியர்களது துன்பங்கள் பொஸ்னியாவில் உள்ளான "மனிதாபிமான" தலையீட்டுக்கு அழைப்பு விடுபவர்களிடையே எந்த வகையிலேனும் ஆதரவைப் பெற்றுவிடவில்லை. இதற்கு மறுதலையாக அவர்களில் அனேகர் இந்த சேர்பியருக்கு எதிரான தாக்குதலை குரோஷிய "சுயநிர்ணய" த்தின் வெற்றியாகத் தழுவிக்கொண்டனர். அவர்களது ஒழுக்கநெறிப் பிரச்சாரத்துக்குப் பின்னணியில் அவர்கள் பொஸ்னியாவில் தங்களது அரசியலை ஏகாதிபத்தியத்தினது அரசியலுடன் இணைத்துக் கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாக உபயோகித்துக் கொண்டனர். இது தனிநபர்களின் அரசியல் அபிவிருத்தி பற்றிய ஒரு விடயமல்ல பதிலாக மிகவும் ஆழமான வேர்களை உடைய சமூக நிகழ்வுப்போக்கினது ஒரு வெளிப்பாடாகும்.

## ஸ்ராலினிசத்தின் உடைவு

ஏகாதிபத்திய முகாமிற்கான இந்த அணிவகுப்பினை பாரிய சம்பவங்கள் விரைவாக்கியுள்ளது. சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் ஸ்ராலினிச அதிகாரத்துவங்களின் வீழ்ச்சி முன்னய ஒரு காலகட்டத்தில் எதிர்ப்பு அரசியலில் ஈடுபட்டிருந்தவர்களின் ஒரு அவசியமான ஆதாரத்தை அகற்றியுள்ளது. இந்தச் சமூகத்தட்டு அதனது இடதுசாரித்தனத்தை தொழிலாள வர்க்கத்தின்

கொண்டிருந்தது. இது நீண்ட காலத்துக்கு முன்னரேயே புரட்சிகர சோசலிச அரசியலைக் கைவிட்டிருந்ததுடன் சமுதாயத்தை ஒரு நேர்மையான முற்போக்கான அடித்தளத்தில் மாற்றுவதற்கான சாத்தியத்தை இட்டும் அதிகரித்தவிதத்தில் சிடுமூஞ்சித்தனத்தைக் காட்டிக்கொண்டது. இவ்விதமாகவே இது முதலாளித்துவ வாதிகளின் பிரகடனமான சோவியத் யூனியனின் கலைப்பு எந்த சோசலிசப் பதிலீட்டினதும் முடிவைக் குறிக்கின்றது என்பதை தயாராக ஏற்றுக்கொண்டது.

தொழிலாள வர்க்கத்துடனான இந்த குட்டி முதலாளித்துவப் பகுதியினரின் உறவு நாட்டுக்குப் பின் நாடாக உத்தியோகபூர்வ தொழிலாளர் இயக்கத்தை வடிவமைத்த பழைய ஸ்ராலினிச சமூக ஜனநாயக தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் சீரழிவுடன் மேலும் அடிப்படையாக மாற்றமுற்றுள்ளது. தொழிலாளர் இயக்கம் இன்னமும் இந்த குட்டி முதலாளித்துவ இடதுகளுக்கு அதே பழைய வேலை ஆதாரங்களையோ அல்லது அரசியல் செல்வாக்குக்கான மார்க்கங்களையோ வழங்கவில்லை. மேலும் குறைந்தது பகுதியளவிலேனும் தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கைவசதியுடன் அதனது தலைவிதியைப் பிணைத்த நலன்புரி அரசு அமைப்புக்களும் ஒழுங்கு முறையாகக் கலைக்கப்பட்டு வருகின்றது.

இந்த தட்டினது பிரதிநிதிகள் ஒரு திட்டவட்டமான சமூக பரிணாமத்திற்கு உள்ளாகியுள்ளனர். பலர் ஆரம்பத்தில் சலுகை படைத்த உயர் மத்தியதர குடும்பங்களில் இருந்தே வந்தனர். தருணங்களில் அவர்கள் தங்களது பழைய சூழலுடனான தனிப்பட்ட சமூக கலாச்சாரப் பிணைப்புகளினால் மீள இழுக்கப்பட்டனர். அவர்களது வாழ்க்கை முறை அவர்களது வருமான மட்டம் அவர்களது சமூகத் தொடர்புகள் என்பன என்றும் இல்லாதவகையில் அவர்களில் இருந்து மிகவும் தூரத்திலும் அன்னியப்பட்டும் இருந்த பரந்துபட்ட உழைக்கும் மக்களின் சனத்தொகையை விட செல்வந்த உயர் மத்தியதர வர்க்கத்துடனும் முதலாளித்துவ வாதிகளுடனும் நெருக்கமாகப் பிணைந்திருந்தது.

இந்த நகர்வு கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக பரந்து பட்டுவந்த ஒரு சமூகத் துருவப்படலின் பாகமாகும். தொழிலாள வர்க்கத்திற்கும் அதிகரித்த மத்தியதர வர்க்க மக்களின் பகுதியினர்க்கும் முதலாளித்துவ உற்பத்தி வடிவங்களிலான துடைத்துக்கட்டும் மாற்றங்கள் வேலைகள் வாழ்க்கைத்தரங்கள் சமூக நிலமைகள் என்பவற்றில் ஒரு வீழ்ச்சியையே கருதியது. ஆனால் முன்னாள் தீவிரவாதிகளில் ஒரு பகுதியினர் பல்கலைக் கழக பேராசிரியர்களாகவும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களாகவும் பாராளுமன்ற அரசியல் வாதிகளாகவும் அல்லது இதையொத்த சொகுசான பாத்திரத்தை அனுபவித்ததுடன் தங்களது சொந்தச் செல்வத்தின் பங்கு உயர்ந்ததையும் கண்டு கொண்டனர். ஏனைய குறைந்த அதிர்ஸ்டம் உள்ளோர் தங்களது முன்னய அரசியல் நடவடிக்கைகளுக்காக கசப்பாக மனம் வருந்துவதுடன் ஒரு மேலும் சலுகைமிக்க நிதி பாத்திரத்துக்கு தங்கள் உயர்வினைத் தடுத்ததாக அவர்களை குற்றம் சாட்டினர். இது பரிகாரம் தேடுவதற்கான இன்னும் பலம் மிக்க உந்துதலை வழங்கியது. இந்தத் தட்டினர் முதலாளித்துவ அரசியலுடன் ஒரு உத்தியோக பூர்வ உடன்பாட்டிற்கான அதனது திருப்பத்தை அறிவிக்கும் ஒரு வழியாக பொஸ்னியா விளங்கியது.

## தொழிலாளர் புரட்சி கட்சி "புரட்சிகர ஒழுக்கநெறி" யில் இருந்து ஏகாதிபத்திய ஒழுக்க நெறிக்கு திரும்புதல்

இந்த ஏகாதிபத்திய சார்பு அரசியலை நோக்கிய பொதுவான திருப்பத்தின் மிகவும் வெட்கக்கேடான வெளிப்பாடு கிளீவ் சுலோட்டரினால் **(Cliff Slaughter)** வழிநடத்தப்படும் பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியினுள் கண்டுகொள்ளப்பட்டது. 1986 பெப்பிரவரியில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவில் இருந்தான அதனது உடைவில் உச்ச வெளிப்பாட்டைக் கண்டுகொண்ட தொழிலாளர் புரட்சிக் கட்சியினுள் எழுந்த உள்நெருக்கடி இடம்பெற்று 10 வருடமாகின்றது. ட்றொட்ஸ்கிசத்துடனான அதனது பேரளவிலான தொடர்புகளையும் கைவிட்டு ஒரு தசாப்தத்தின் பின்னர் சுலோட்டரின் தொழிலாளர் புரட்சிக் கட்சி தன்னை வெளிப்படையாக ஏகாதிபத்திய முகாமினுள் அமர்த்தியுள்ளது. கடந்த மூன்று வருடங்களாக இந்தக் கட்சியினது பிரதான அரசியல் நடவடிக்கை பொஸ்னியாவிற்கான தொழிலாளர் உதவி **(Workers Aid for Bosnia)** என்ற மனிதாபிமான முகமூடியோடு பொஸ்னிய நகரமான ருஷ்லாவுக்கு எடுத்துச் செல்லல் உதவிகளை ஒழுங்குபடுத்துவதாக விளங்கியது. இது இந்த எடுத்துச் செல்லல்களை சேர்பிய குரோஷிய முஸ்லீம் படைகளிடையேயான ஒரு மும்முனைப் போராட்டத்தின் மையப்புள்ளியாக விளங்கும் ஒரு இராணுவ மூலோபாயப் பாதையான "வடக்குப் பாதையைத் திறத்தல்" என்பதற்கான கிளர்ச்சிக்கு பயன்படுத்தியது.

தற்போது தொழிலாளர் புரட்சிக் கட்சியின் முயற்சிகள் பூரணப்படலைக் கண்டுகொள்கின்றன. அமெரிக்க இராணுவம் இந்தப் பாதையினூடும் அதனது எதிர்கால



பஞ்சலூக்காவிலிருந்து வெளியேறும் சேர்பிய அகதிகள்

படையாட்களையும் டாங்கிகளையும் அனுப்புவதற்கு தயார்செய்து கொண்டிருக்கின்றது. சுலோட்டரும் அவரது கும்பலும் அவர்களது அடுத்த எடுத்துச் செல்லல் "உதவி"க்கு நேட்டோ சரக்கு வண்டியில் ஒரு மதிப்புமிக்க இடம் வழங்கப்படவேண்டும் எனக் கேட்பதற்கு ஒவ்வொரு உரிமையையும் கொண்டுள்ளனர். தொழிலாளர் புரட்சிக் கட்சியின் அரசியல் தலையீடுகள் இந்த ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிற்கான பாதையைச் சுலபமாக்குவதற்கே உதவியது.

நேட்டோ தலையீட்டிற்கு இட்டுச் செல்வதற்கு முன்னைய மாதங்களில் தொழிலாளர் புரட்சிக் கட்சி டவுனிங் வீதியில் பொஸ்னியாவுக்கான ஒரு இடைவிடாத மறியல் போராட்டத்தை" முன்னெடுத்தது. லண்டனினது வைற் ஹோல் **(Whitehall)** பல்தரப்பட்ட எதிர்ப்புகளைக் கண்டிருந்தபோதும் சிலவேளைகளில் தன்னையும் இடதுகளின் ஒரு பாகமாக இனங்கண்டுகொள்ளும் ஒரு அமைப்பு பிரித்தானியப் பிரதம மந்திரி இராணுவ நடவடிக்கை எடுக்கத் தவறியதைக் கண்டிப்பதற்கு வீதியில் இறங்கியது இதுதான் முதல்தடவையாக இருக்கும்.

குரோஷியா அமெரிக்காவின் பின்னணி ஆதரவுடன் கிராஜினா மீதான அதனது ஆக்கிரமிப்பை மேற்கொண்டிருந்த வேளையில் ஒரு படுகொலை முறையென மட்டுமே விபரிக்கக் கூடிய முறையில் தொழிலாளர் புரட்சிக் கட்சி பிரதிபலித்தது. அதனது பத்திரிகையான வேர்க்கஸ் பிரஸ் **(Workers Press)** ஆகஸ்ட் 12 இதழில் பதிப்பிக்கப்பட்ட ஒரு கட்டுரையில் குரோஷிய இராணுவத்தினால் சேர்பியப் பொதுமக்கள் பாரிய அளவில் வெளியேற்றப்பட்டதை குரோஷிய வலதுசாரித் தீவிரவாதிகள் பாவிக்கின்றதில் இருந்து சிறிதும் வேறுபடாத வார்த்தைகளில் தழுவிக்கொண்டது.

இக்கட்டுரை "கிராஜினாவிலான சேர்பிய செற்னிக் ஆயுதம் தாங்கிய கொடியோரது அரச துண்டை குரோஷிய இராணுவம் நிர்மூலமாக்கியதை" கைதட்டி வரவேற்கிறது. இது எவ்வாறு "கிராஜினாவின் சேர்பியத் 'தலைநகரான' கினனில் **(Knin)** குரோஷியர்கள் வெற்றியைக் கொண்டாடினார்கள்" என மிகவும் ஆர்வத்துடன் விபரித்ததுடன் "குரோஷியப் படையினரின் துணிகரமான வெற்றிக்கு" பொஸ்னிய மக்களது "நன்றியையும்" பிரகடனப்படுத்தியது.

குரோஷிய இராணுவம் வாஷிங்டனினதும் பொன்னினதும் உறுதியானதும் நேரடியானதுமான பின்னணி ஆதரவுடனேயே இதனது தாக்குதலை மேற்கொண்டது. உஸ்ராஷ் **(Ustashe)** குண்டர்களைக் கொண்ட அவரது படையை முழு ஐரோப்பாவிலேயே மிகவும் சிறப்பாக ஆயுதபாணியாக்கப்பட்ட இராணுவங்களுள் ஒன்றாக மாற்றியமைப்பதற்கு ஜேர்மனி பிரான்ஜோ ருஜ்மனின் வலதுசாரி ஆட்சிக்கு நிதியுதவி வழங்கியது. முன்னாள் இராணுவ உத்தியோகத்தர்களின் தலைவரும் உள்ளடங்கலாக உயர்மட்ட அமெரிக்க இராணுவ உத்தியோகத்தர்கள் ஒரு தனிப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் என்ற மூடிமறைப்பிற்குப் பின்னே அமெரிக்க அரச திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டு இத் தாக்குதலை ஒழுங்குபடுத்துவதற்கு கொண்டுவரப்பட்டனர். இது எதுவும் குரோஷியாவின் "உறுதியான வெற்றியின்" மீதான தொழிலாளர் புரட்சிக் கட்சியின் சந்தோஷத்தை தொய்வடையச் செய்யவில்லை.

ஒரு மாதத்தின் பின்பு நேட்டோ குண்டுவீச்சு ஆரம்பித்தபோது தொழிலாளர் புரட்சிக் கட்சி ஆதரவுக் குரல் கொடுத்தது. நேட்டோ தலையீட்டுக்கான பொஸ்னியாவின் புகழ்ச்சியை குறிப்பிடும்போது **Workers Press** பின்வருமாறு எழுதுகிறது "நாங்கள் விளங்கிக் கொள்ளக்கூடியதும் இயற்கையானதுமான இந்த பிரதிபலிப்பையிட்டு ஒவ்வொரு ஆதரவையும் தெரிவிக்கின்றோம். நாங்கள் கடந்த மூன்றரை வருட யுத்தத்தின் போது பொஸ்னியாவுக்கோ அல்லது அதனது மக்களுக்கோ எதுவும் செய்ய மறுத்துவிட்டு வறிய

விரைகின்ற இந்த நோய்பிடித்த 'இடதுக யுத்த எதிர்ப்பாளர்கள் ஸ்ரா போன்றோருடன் எதையும் கொண்டிருக்கவில்லை."

சேர்பிய நகரங்களையும் கிராமங்களையு குண்டுவீசியது பற்றிய தொழிலாளர் புரட் கரிசனை மிகவும் இறுக்கமாக தந்திரோபாய "நேட்டோவின் ஆகாய படைப்பலம் பொஸ்னியப் பக்கத்திற்கு பாவிக்கப்பட்டிருந்தால் இராணுவ பொஸ்னியப் படைகள் தரைப்பிர தொடர்ந்தும் நகர அனுமதிக்கப்பட்டிருக்கு கருதுகிறது". தொழிலாளர் புரட்சிக் அக்கறைகள் நோயுற்ற ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது என்பது நிரூ சம்பவங்கள் விரைவாக நிரூபித்ததுபோ குண்டுவீச்சுக்கள் "தரையில்" குரோஷி இராணுவங்கள் வடமேற்கு பொஸ்னியப் பெரும்பகுதியைக் கைப்பற்றும் விதத்திலான எடுப்பதற்கான ஆகாயப் பிரயோகிக்கப்பட்டது.

இக் கட்சியின் பிற்போக்கு அரசியல் ஆத்திரமூட்டும் நடைமுறையும் பொஸ்னியாவை பாதுகாத்தல் என்ற கூற்று பால்கனில் அமெரிக்க நேட்டோ த முன்னெடுப்பதற்கு அர பத்திரிகைத்துறையும் மேற்கொண்ட பிரச்ச முன்னோடிப் பாத்திரத்தினை வகித்த ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

1985 86ல் அனைத்துலகக் குழுவில் பிளவு மத்திதர வர்க்க ஏகாதிபத்தியத்துடனான பரந்த சர்வ அணிசேர்க்கையை முன்காட்டியது. தொழில கட்சியினுள் ஒரு துடைத்துக்கட்டும் நெருக்கடியை முகங்கொடுத்தபோது கிளீ கட்சியினது சீரழிவினது அரசியல் கையாளும் எந்த முயற்சியையும் வெ நிராகரித்தார். பதிலாக அதனது பிரச்சினைகளும் ஜெரி கீலி என்ற அக்கிரமமான பழக்கவழக்கங்களின் வி வலியுறுத்தியதுடன் உண்மையான பிரச்சனை ஒழுக்கநெறி" யுடன் சம்ப பிரகடனப்படுத்தினார். இந்த வழியில் தொழிலாளர் புரட்சிக் கட்சியை பிற்போக் அரசியலின் அடித்தளத்திலும் மத்திய வலிப்புக்களின் அடித்தளத்திலும் கண்டுகொள்வதற்கு நிதானமாக வேலைசெ

"புரட்சிகர ஒழுக்கநெறி" என்பது வர்க்கத்தினுள் ஒரு புரட்சிகரமான கட்சி முயற்சியினுள் தங்களது வாழ்க்கையை விட்டோம் எனவும் வரலாற்றினால் விட்டோம் எனவும் உணர்ந்தவர்களது யுத்த வந்தது. அவர்கள் வேலைத்திட்டம் தத்துவம் போன்ற பிரச்சனைகளைக் விரும்பவில்லை பதிலாக அவர்கள் தங்கள பிரச்சினைகளுக்கும் குற்றஞ்சாட்டக் வில்லனை வேண்டிநின்றனர். கீலி அயோக்கியனை முகங்கொடுக்கும்போது வர்க்க ஆய்வு என எவரும் ஏன் தம்மை க கொள்ளவேண்டும்? இந்த விரக்தியடைந்த விதைப்பதிலும் கையாள்வதிலும் ஒரு சுலோட்டர் தன்னை நிரூபித்துக் கொண்டா

இந்த முறையை அடித்தளமாகக் கெ முகங்கொடுக்கின்ற மகத்தான போரா தொழிலாள வர்க்கத்தை தயார் சாத்தியமில்லை. குட்டி முதலாளித்துவ வாதம் தொழிலாள வர்க்கத்தை ஏகாதி கையளிப்பதற்கு மாத்திரமே உதவிசெ தத்துவார்த்தப் புரட்சியை அடித்தளமாக

www.padippakam.com

ஒழுக்கநெறி மட்டத்திற்கு மேல் ன் வர்க்கப் போராட்டம் வரலாற்றின் உந்து 5 வெளிப்படுத்தியதுமாகும். தொழிலாளர் இடதுகளின் ஏனைய பரந்த தட்டினர் வரலாற்றுப் பொருள்முதல்வாத வர்க்க பற்றி பாவனை செய்வதைக் கூட து.

நடுப்பகுதியில் தொழிலாளர் புரட்சிக் ந்த உணர்வுகள் பொஸ்னிய நெருக்கடியில் மத்தியதர வர்க்க முன்னாள் ளால் எடுக்கப்பட்ட அணுகுமுறையில் ஒரு யாத பிரதிபலிப்பைக் கண்டுகொண்டது. பாவின் உடைவைச் சூழ்ந்துள்ள ிரச்சினைகளையிட்டு ஒரு விஞ்ஞான வரலாற்று ரீதியான அணுகுமுறையை சய்துவிட்டு அவர்கள் வெறுப்பதற்கு ஒரு தேடியதுடன் அவ்விதமாக ப் பத்திரிகைத் துறையினால் ட்டவற்றை– சேர்பியர்களை– தயாராக ண்டனர். இந்த "புரட்சிகர ஒழுக்கநெறி" மரிக்க அரச திணைக்களம் பிரித்தானிய அலுவலகம் ஆகியவற்றின் ஒழுக்க ர்னை வெளிப்படுத்திக் கொண்டது.

## ஹோர்

ர் புரட்சிக் கட்சி அதனது பொஸ்னியத் , கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் ஷிய மாணவனான அட்டலியா ஹோர் விரிவாக்கப்பட்ட நிலைப்பாட்டையே க் கொண்டிருந்தது. முன்னாள் பாவிலான போராட்டம் "தேசிய த்துக்கு குரோஷியாவிற்கும் ருகும் உள்ள உரிமையில் ளது என்பதே ஹோரினால் அபிவிருத்தி மையக்கருத்தாகும். இந்த "உரிமையின்" ப் "நவீன கைத்தொழில்மயப்பட்ட ப முதலாளித்துவத்தின்" அபிவிருத்தியுடன் டுள்ளதாக அவர் கூறுகிறார்.

யூகோஸ்லாவியாவிலான அதனது ளை தத்துவார்த்தப் போர்வையின் மூலம் புரட்சிக் கட்சி நியாயப்படுத்துவதற்கான இறுதியான பிரதான பங்களிப்பு 1994 நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் வெளியிடப்பட்ட அறிக்கையான சந்தர்ப்பவாதமும் பால்கன் ும் என்பதற்கான ஒரு பதிலாகும். க் குழுவின் இந்த அறிக்கை தொழிலாளர் சியின் பிற்போக்கு அரசியலை தேசியப் தும் பால்கனிலான அதனது விசேட யையும் பற்றிய ஒரு வரலாற்று ஆய்வின் அம்பலப்படுத்தியது.

பதிலில் ஹோர் வரலாறு பற்றிய அவரது தத்துவத்தை நாசிகளுக்கும் அவர்களது கூட்டாளிகளுக்கும் எதிரான கூட்டுப் த ஒன்றில் இருந்து ஒன்றாக "ஒவ்வொரு யத் தேசமும் தனிப்பட்ட முறையில் கொள்வதற்கான" போராட்டமாக விபரித்து ர். அவர் டிட்டோ ஆட்சியின் பிரதான "குரோஷியர்கள் சுலோவேனியர்கள் ர் மசடோனியர்கள் போன்ற நும் தற்போது குடியரசு மட்டத்திலும் ட்டத்திலும் அதிகாரத்துவப் பதவிகளை கூடியதான" ஒரு அரச கருவியைச் ாகும் என பிரகடனப்படுத்தினார். ் உருவாக்கப்பட்ட குடியரசுகளிற்கு தை வழங்கியது இதுவேயாகும் இது இந்த ரத்துவங்களை கடந்த 45 ஆண்டுகளின் புதிய முதலாளித்துவ வாதிகளாக தயும் அனுமதித்தது" என அவர்

மையக்கருத்தின் படி யூகோஸ்லாவியப் ரலாற்றுப் பங்களிப்பு பிரான்ஜோ ருஜ்மனின் கீழ் ஒரு குரோஷிய முதலாளித்துவ "உருவாக்கம்" ஆகும். ஹோர் ிய உலக நிலமை பற்றிய ஒரு ான பார்வையுடன் தனது பதிலிறுப்பை கொண்டுவந்தார் "பொஸ்னியாவில் தொழிலாள வர்க்கம் உடல் ரீதியாக ்விட்டது சேர்பியாவிலும் குரோஷியாவிலும் மையாக தொழிலாளர்களின் எதிர்ப்பையே கவில்லை மேற்கு ஐரோப்பாவிலும் இயக்கம் அதனது பல தலைவர்களும் பால்கனில் ஏகாதிபத்தியத்திற்கு துடன் பெருமளவில் ுபோயுள்ளது. நாங்கள் இன்னமும் பொஸ்னிய நிதலைப் போராட்டத்திற்கு ஆதரவை பதினூடு தொழிலாள வர்க்க தை மீளக்கட்டி அமைப்பதற்பான கட்டத்தில் இருக்கின்றோம். இன்னமும் மல் இருந்தால் கூட நாங்கள் இன்னும் ்த்தைக் கடந்துவிட விடவில்லை என்பது ளவில் சாதகமானது. இன்னமும் நாங்கள் தம் நிலைப்பாட்டிற்கு நேர்மையாக அதற்குச் சாதகமாக எங்களது தை அபிவிருத்தி செய்வதும் எந்த

தொழிலாள வர்க்கத்திலோ சோசலிசத்திற்கான போராட்டத்திலோ இதனது அரசியலை அடித்தளமாகக் கொள்வது பற்றிய எந்த நடிப்பையும் கைவிடுகின்ற இடதுகளின் ஒரு பரந்த தட்டுக்களின் எண்ணப்பாடுகளின் கூட்டுமொத்தத்தை இது வெளிப்படுத்துகின்றது தொழிலாள வர்க்கம் தோற்கடிக்கப்பட்டுவிட்டது வரலாற்று அட்டவணையில் இருந்து சோசலிசம் இல்லாமல் போய்விட்டதுடன் இந்த அல்லது அந்த இன வகுப்புவாத இயக்கத்தின் பின்னால் அணிதிரள்வதை விட செய்வதற்கு ஒன்றுமில்லை. ஹோர் தனது தேசியவாத பூர்வீக கட்டுக்கதைகளை போக்கிற்கு எதிராக யுபயளைெவ வாந ஊரசசநவெ என குழப்பத்தைதையூட்டும் பெயரினைக் கொண்ட பத்திரிகையை வெளியிடும் அமெரிக்காவில் உள்ள அரச முதலாளித்துவ ளுவயவந ஊயிவையடளைவள வாதிகளினதும் திரிபுவாதிகளினதும் கதம்பக் கூட்டும் உள்ளடங்கலான ஏனைய மார்க்சிச விரோத அமைப்புகளுக்கும் வழங்கத் தொடங்கியிருக்கிறார்.

ஹோரினது புறப்பாட்டிற்குப் பின்பு தொழிலாளர் புரட்சிக் கட்சி "சுயநிர்ணய உரிமை" பற்றிய அதனது கருத்துப்பாட்டை ஆழமாக்குவதற்கு எதனையும் செய்யவில்லை. எப்படியிருந்தபோதிலும் புறநிலையான சம்பவங்கள் சமகாலத்தில் இந்தக் கோரிக்கையின் பிற்போக்கு இயல்பினை மேலும் விளக்கியுள்ளது. அவர்களது மண்ணை விட்டு இரண்டரை லட்சம் மக்களை வெளியேற்றியதில் வெளிப்பாட்டைக் கண்ட குரோஷியாவினது "தேசிய சுயநிர்ணயத்தின்" யதார்த்தமாக்கல் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் முழுமையான ஆதரவைப் பெற்றுக் கொண்டது.

சுலோட்டர் பொஸ்னியாவை நோக்கிய தனது அணுகுமுறையை மார்க்சிச முன்னோக்குடனோ அல்லது யூகோஸ்லாவியாவின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் கொண்ட ஒரு வரலாற்றுப் பொருள்முதல் வாத ஆய்வுடனோ ஒப்பீடு செய்வதற்கும் முயற்சிக்கவில்லை. தொழிலாளர் புரட்சிக் கட்சி ஏகாதிபத்திய ராஜதந்திரத்தின் பதப்பிரயோகத்துடனும் கருத்துப்பாடுகளுடனும் தன்னளவில் திருப்திப்பட்டுக் கொண்டு "சேர்பியத் தாக்குதலுக்கு" எதிராக பொஸ்னியாவின் "பல்லினத் தன்மையை" அது பாதுகாப்பதாக இதனுடைய அல்லது அதனுடைய மூலங்களை உச்சரித்தும் பாராமல் பிரகடனம் செய்கின்றது.

## பொஸ்னியாவும் யூகோஸ்லாவியாவின் உடைவும்

ஒரு பேரளவிலான சுதந்திர அரசாக பொஸ்னியாவின் மூலங்கள் யூகோஸ்லாவியாவின் கலைப்புடன் பிணைக்கப்பட்டுள்ளது. சுலோவேனியா குரோஷியா பொஸ்னியா–ஹேர்செக்கோவினா போன்ற சுதந்திர அரசுகளின் உருவாக்கம் "தேசிய விடுதலை இயக்கங்களின்" வெற்றிகள் எனவும் "1989–91 காலகட்டத்தில் ஐரோப்பாவைத் துடைத்துச் சென்ற மகத்தான புரட்சிகளின்" பாகம் எனவும் தழுவியவண்ணம் தொழிலாளர் புரட்சிக் கட்சி திரும்பத் திரும்ப இந்த அபிவிருத்திக்கு தனது ஆதரவை பிரகடனப்படுத்தியது. தங்களது சொந்த மேலாதிக்கத்தினை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு ஏகாதிபத்திய சக்திகள் திரும்பத் திரும்ப சிறிய தேசங்களுக்கிடையிலான முரண்பாட்டை கையாண்ட ஒரு பிராந்தியமான பால்கனில் தேசியப் பிரச்சனைகளின் அபிவிருத்தி பற்றி மார்க்சிச இயக்கம் த்துக்கொண்ட பாடங்களை இது புறக்கணித்தது. "பால்கனைதுண்டாடுதல்" **(Balkanization)** என்ற பதத்தின் தோற்றத்திற்கும் இக் கொள்கையே இடம் அளித்தது. இன்று குரோஷியர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் சேர்பியர்களுக்கும் இடையே முரண்பாடுகளைத் தூண்டிவிட்டும் சுரண்டவும் மீண்டும் ஒரு முறை ஏகாதிபத்தியம் தலையிட்டுக் கொண்டிருக்கும் போது தொழிலாளர் புரட்சிக் கட்சி இப் பிளவு படுத்தலை "தேசிய விடுதலை" என வண்ணம் தீட்டுகிறது.

பால்கனில் உள்ளான தேசியக் கேள்வியின் வரலாற்றுப் பிரச்சனை இராச்சிய எல்லைகளதும் இனச் சனத்தொகையினரதும் கலப்பாகும். இப் பிராந்தியம் எதிர் பேரரசுகளால்– துருக்கிய ஒட்டோமான் அவுஸ்திரிய–கங்கேரியன்– கீழ்ப்படுத்தப்பட்டதன் விளைவாகவும் கட்டாயப்படுத்தப்பட்டதும் விரிப்பிலானதும் ஆகிய இரு வகையிலும் மக்கள் தொகைகளின் நகர்வினாலும் பல்வேறு மக்கள் மிகவும் குறிப்பாக சேர்பியர்கள் ஒரு தொகை வித்தியாசமான அரச எல்லைகளினால் பிரிக்கப்பட்டுக் காணப்பட்டனர். இப் பிராந்தியம் பூராவும் தொழிலாள வர்க்கத்தை பால்கன் சோசலிசக் கூட்டு என்ற மூலோபாயக் கோரிக்கையின் அடித்தளத்தில் ஐக்கியப்படுத்துவதற்குப் போராடுவதன் மூலம் மார்க்சிச இயக்கம் இப் பிரச்சனைக்கு விடையளிக்க முயன்றது. சுலோட்டரும் தொழிலாளர் புரட்சிக் கட்சியும் இவ்வேலைத்திட்டத்தை முன்னாள் யூகோஸ்லாவியாவிலான "உண்மையான போராட்டத்திற்கு" "பொருத்தமற்றது" என நிராகரிக்கின்றனர். பதிலாக அவர்கள் சேர்பிய தேசியவாதத்திற்கு எதிராக பொஸ்னிய முஸ்லீம் குரோஷிய தேசியவாதத்தை முன்னெடுக்கின்றனர்.

முதலாம் உலக யுத்தத்திற்கு முதல் இடம்பெற்றுக் கொண்டிருந்த பால்கன் யுத்தங்களின் போது லியோன் ட்ரொட்ஸ்கி பால்கன் குடாநாட்டிலான அரச துண்டுகளின் ஒட்டு வேலைப்பாடுகளை ஒரு உயிர்வாழக்கூடிய அரசின் ஸ்தாபிதத்தின் பேரில் துடைத்துக்கட்டுவதற்கு வேண்டிய பொருளாதார அரசியல் அவசியங்களை உச்சரித்தார். 80வருடங்களின் பின்னும் தீர்க்கதரிசனத்துடன் விளங்கும் வார்த்தைகளில் இது பின்வரும் வழிகளிலேயே சாத்தியமாக முடியுமென எச்சரித்தார் "ஒன்றில் மேலிருந்து தன்னைப் பலமானது என நிரூபித்துக் கொள்ளும் ஒரு பால்கன் அரசு பலவீனமான ஒன்றின் செலவில் விரிவாக்கிக் கொள்வது– இது பலவீனமான தேசங்களை அடக்குகின்றதும் நிர்மூலமாக்கும் யுத்தங்களினதும் பாதையாகும் இது முடியாட்சியையும் இராணுவவாதத்தையும் பலப்படுத்தும் அல்லது கீழிருந்து மக்கள் தாங்களாகவே ஒன்றாக வருவதன் மூலம்– இது புரட்சியினது பாதை இது பால்கன் அரச வம்சத்தினை தூக்கி எறிவதைக் கருதுகின்ற பாதை"

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் டிட்டோ ஆட்சி யூகோஸ்லாவியாவின் பல்வேறு தேசிய சிறுபான்மையினரதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு சிக்கலான யாப்பு ஒழுங்கு முறையினூடு இப்பிரிவினைகளைக் கடப்பதற்கு முயற்சித்தது. இப் பொஸ்னிய யுத்தம் ஒரு ஆழமான பொருளாதார சமூக நெருக்கடியினதும் அந்நிய முதலாளித்துவ சக்திகளினது தலையீட்டினதும் இறுதி விளைவாகும்.

## சர்வதேச சூழ்நிலை

யூகோஸ்லாவிய நெருக்கடியின் அபிவிருத்தியை அதனது வரலாற்று சர்வதேசச் சூழ்நிலையில் மட்டுமே விளங்கிக் கொள்ள முடியும். இரண்டாம் உலக யுத்தத்தினைத் தொடர்ந்த தசாப்தங்களில் மார்சல் ஜோசிப் புரொஸ் டிட்டோ ஆயசளாயடட துழளਿ டீசழண–வுவைழ வினால் ஸ்தாபிக்கப்பட்ட ஆட்சி சோவியத் கூட்டிற்கும் மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களுக்கும் இடையிலான முரண்பாட்டில் ஒரு மையப்பாத்திரத்தை வகித்தது. 1944ல் யுத்தம் ஒரு முடிவை நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் சேர்ச்சிலும் ஸ்ராலினும் பால்கனிலான செல்வாக்குப் பிராந்தியங்களைப் பிரிப்பதற்கு சந்தித்தனர். ஸ்ராலினால் முன்மொழியப்பட்ட கொடூரமான சூத்திரத்தின் படி யூகோஸ்லாவியாவிலான செல்வாக்கு கிழக்கிற்கும்– மேற்கிற்கும் இடையே "ஐம்பதுக்கு ஐம்பது" என பிரிக்கப்பட இருந்தது. திரியெஸ்ற் **(Trieste)** மீதும் கிரேக்க உள்நாட்டு யுத்தத்தின் மீதும் ஏகாதிபத்தியத்துடனான ஆரம்ப முரண்பாடுகளுக்குப் பின்னரும் அதைத் தொடர்ந்து 1948ல் ஸ்ராலினுடனான உடைவின் பின்னரும் டிட்டோ தனது ஆட்சியை ஸ்ராலினிசத்துக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலான இந்த கொடுக்கல் வாங்கலினால் சுமத்தப்பட்ட கட்டுமானத்திற்கு அமையவே ஸ்தாபித்தார்.



சுலோட்டர்

துறுமானின் **(Truman)** 1947ன் கோட்பாட்டின் படி வாஷிங்டன் பால்கனிலான தோல்விகண்ட பிரித்தானிய இராச்சிய நலன்களை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்ததுடன் யூகோஸ்லாவியாவுடன் ஒரு விசேடமான உறவினையும் முன்னெடுத்தது. டீட்டோ ஆட்சியின் சோசலிசப் பாவனைகளுக்கு மத்தியிலும் வாஷிங்டன் இதற்கு இராணுவ பொருளாதார உதவிகள் வர்த்தக கடன் வசதிகளை வளங்கியது. இதற்கு கைமாறாக சோவியத் கூட்டினை நோக்கிய நேட்டோவினது எல்லைப்படுத்தும் மூலோபாயத்தில் விசேடமாக மத்தியதரைப் பிராந்தியத்தில் யூகோஸ்லாவியா ஒரு பிரதான காரணியாக விளங்கியது. ஏகாதிபத்திய சக்திகளுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான முரண்பாட்டில் நடுநிலைத் தோற்றத்தை முன்னெடுத்த அணிசேரா நாடுகளினது இயக்கத்தினது விசேடமாக ஆசிய ஆபிரிக்க லத்தின் அமெரிக்க நாடுகளின் பிரதான ஸ்தாபகராக டிட்டோ விளங்கினார். வாஷிங்டனுக்கு எதிராக மொஸ்கோவை முன்னெடுத்து தங்களது பேரம்பேசும் பாத்திரத்தினை அபிவிருத்தி செய்து கொண்டிருந்த நேரு நாசர் சுகர்ணோ போன்ற முதலாளித்துவ தேசியவாத ஆட்சிகளின் நலன்களுடன் இந்த நிலைப்பாடு பொருந்தி வந்தது.

டிட்டோ ஆட்சி இந்த சர்வதேச சமனப்படுத்தும் நடவடிக்கைகளில் ஒரு நிபுணனாக விளங்கியது. இது சமநிலையைப் பேணும் மேற்குடனும் சோவியத் கூட்டுடனும் பரவலாக அழைக்கப்பட்ட அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுடனும் சாதகமான பொருளாதார உறவுகளை தேடிக் கொள்வதற்கு அதனது தனித்த பூகோள அரசியல் பாத்திரத்தினை பயன்படுத்தியது. இது அதனது திருப்பத்தில் "சந்தை சோசலிசம்" என்ற யூகோஸ்லாவிய அமைப்பினது ஆரம்ப வெற்றிகளில் குறிப்பிடக்கூடிய பாத்திரத்தினை வகித்தது. எப்படியிருந்தபோதும் அதேவேளையில் இது 1980களில் ஆரம்பித்த சர்வதேச உறவுகளிலான துடைத்துக்கட்டும் மாற்றங்களுக்கு டிட்டோ ஆட்சியினை நின்றுபிடிக்க முடியாததாக்கியது.

கிழக்கு ஐரோப்பாவினதும் சோவியத்தினதும்



படிப்பகம்

www.padippakam.com

ஸ்ராலினிச அதிகாரத்துவங்கள் முதலாளித்துவப் புனருத்தாரணத்தை நோக்கித் திரும்பியமை அமெரிக்க ஏகாதிபத்தியத்தினது யூகோஸ்லாவிய அரசுடனான விசேட உறவுகளின் முடிவினை உச்சரித்தது. இதற்கு இன்னமும் பெல்கிரேட்டிலான ஆட்சி சோவியத் யூனியனுக்கு எதிரான ஒரு இராணுவத் தடுப்பரணாக தேவைப்படவில்லை. வாஷிங்டன் பல்தேசிய வங்கிகளதும் கூட்டுத்தாபனங்களினதும் நலனின் பேரிலான நாட்டினது பொருளாதாரத்தை தனியார் மயப்படுத்துவதை பூரணப்படுத்துவதற்கு யூகோஸ்லாவிய பெடரல் அரச அமைப்பு ஒரு தடையென பார்க்க ஆரம்பித்தது. முதலாளித்துவ பொருளாதார "சீர்திருத்தப்" போக்கினை விரைவு படுத்தும் நோக்கில் அமெரிக்காவும் ஏனைய பிரதான வல்லரசுகளும் இன வகுப்பு வாதத்தை தூண்டிவிடுவதன் மூலம் பழைய டிட்டோயிச அமைப்பு முறையினை கலைப்பதைப் பிரகடனப்படுத்தியோருக்கு தமது ஆதரவினைத் தெரிவித்தனர். அவர்களுள் ஒருவர்தான் அமெரிக்க வெளிநாட்டு கொள்கை அமைப்பினது ஒரு நீண்டநாள் விருப்பத்துக்குரியவரும் பின்னகர்வு தேசியக் கோரிக்கையான ஒரு "பெரிய சேர்பியா" வை முன்னெடுத்து தனது சொந்த அரசியல் பிடியினை நிலைநிறுத்த முயன்ற சுலோபோடன் மிலோசெவிக் ஆவார்.

மீள் இணைப்புக்குப் பின்னர் தனது அதிகரித்த அரசியல் பலத்தை இறுக்கமாக்கும் ஆவலில் ஜேர்மன் ஏகாதிபத்தியம் சுலோவினியாவிலும் குரோஷியாவிலும் பிரிவினைவாதத்தை முன்னெடுத்ததுடன் 1991ல் யூகோஸ்லாவியக் கூட்டுடன் ஒரு முறை இக் குடியரசுகள் உடைத்துக்கொண்டதும் அவற்றிற்கு முழு அங்கீகாரம் வழங்குவதற்கு விரைந்தது. கோல் அரசாங்கம் குரோஷிய ஆட்சியாளர்கள் அதனது சேர்பிய சிறுபான்மையினரை தவறாக நடத்துவதும் இவ் ஒவ்வொரு ஆட்சியினரும் எஞ்சிய யூகோஸ்லாவியாவுடன் ஒரு உடன்பாட்டிற்கான பேச்சுவார்த்தையை தவிர்த்ததும் ஒரு உள்நாட்டு யுத்தத்தை விளைவாக்கும் என்ற எச்சரிக்கைகளைத் தள்ளுபடி செய்தது. "சுயநிர்ணய உரிமை" –ஜேர்மனி தனது சொந்த மீள் இணைப்பை நியாயப்படுத்த முன்னெடுத்த ஒரு சூத்திரம்– மற்ற எல்லாப் பிரச்சினைகளையும் தள்ளி விடுகிறது என வலியுறுத்தியது.

அமெரிக்காவும் ஏனைய மேற்கு ஐரோப்பிய வல்லரசுகளும் ஆரம்பத்தில் இவ் அங்கீகாரத்தை எதிர்த்தபோதும் அவர்கள் இறுதியில் ஜேர்மனியினது நிலைப்பாட்டிற்கு அடிபணிந்தனர். ஐக்கிய அமெரிக்கா கிழக்கு ஐரோப்பாவின் பொருளாதார அபிவிருத்திக்கான செலவுகளை ஜேர்மன் முதலாளித்துவத்தின் மீது நகர்த்திவிட முயன்றதுடன் இப் பிராந்தியத்தின் அரசியல் பதங்களை ஒருதலைப்பட்சமாக உச்சரிக்கும் நிலையிலும் இருக்கவில்லை. மேற்கு ஐரோப்பிய வல்லரசுகள் பொருளாதார ஐக்கியத்திலான மஸ்றிச் **(Maastricht)** உடன்படிக்கையைப் பூரணப்படுத்துவதுடனும் புதிதாக மீள் இணைக்கப்பட்ட ஜேர்மனியை முழு ஐரோப்பிய நிறுவனங்களுடன் இணைப்பதிலும் ஈடுபட்டிருந்தன. மஸ்றிச் மீதான இறுதிப் பேச்சுவார்த்தைகளில் குரோஷியாவையும் சுலோவினியாவையும் அங்கீகரிப்பது இறுதியில் ஒரு இழுபறிப் புள்ளியாக வந்தது.

முதல் இரு பிரிவினைவாதக் குடியரசுகளதும் அங்கீகாரத்தை ஆரம்பத்தில் எதிர்த்ததன் பின்னர் வாஷிங்டன் விரிவடைந்து செல்லும் பால்கன் நெருக்கடியில் தனது ஆரம்பிப்பை மீள ஸ்தாபிக்கும் ஒரு மார்க்கமாகக் கருதி பொஸ்னிய சுதந்திரத்தை ஆக்கிரோஷமாக முன்னெடுத்தது. சேர்பியர்கள் ஒரு இன்னும் பெரிய சிறுபான்மையைக் கொண்டிருந்ததும் யூகோஸ்லாவிய இராணுவம் தனது பெரும்பான்மையான படையினரையும் இராணுவ சாதனங்களையும் கொண்டிருந்ததுமான இக் குடியரசினது பிரிவினை உள்நாட்டு யுத்தத்தை உருவாக்கும் என்ற எச்சரிக்கைகள் மீண்டும் ஒரு முறை முன்வைக்கப்பட்டன.

ஒவ்வொரு ஏகாதிபத்திய வல்லரசுகளும் தங்களது சொந்த நலன்களை முன்னெடுக்க விரைகையில் மீண்டும் ஒரு முறை அவை புறக்கணிக்கப்பட்டன.


ஆரம்பத்தில் இருந்தே யூகோஸ்லாவியாவின் வீழ்ச்சியின் மீது தங்களை ஸ்தாபித்துக்கொள்ள முயன்ற பல்வேறு அரசுகளும் தங்களது நடவடிக்கைகளை இந்த அல்லது அந்த வல்லரசுகளிடம் இருந்து ஆதரவை த்துக்கொள்ளும் நோக்கத்துடனேயே மேற்கொண்டன. இந்த வெளித்தலையீடுகள் யூகோஸ்லாவிய அரசினது நெருக்கடியை விரைவுபடுத்தி செறிவாக்கியதுடன் அதனது கலைப்பில் இருந்து உருவான உள்நாட்டு யுத்தத்தின் காட்டுமிராண்டித்தனத்திற்கு பாரிய அளவில் பங்களிப்புச் செய்தன.

## டிட்டோயிச அரசின் முரண்பாடுகள்

யூகோஸ்லாவியாவில் உடைந்த அரச வடிவம் 2ம் உலக யுத்தத்தின் முடிவில் நாசி ஆக்கிரமிப்பிற்கு எதிராகவும் உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளுக்கு எதிராகவும் கம்யூனிஸ்ட் கட்சியினால் வழிநடத்தப்பட்ட கூட்டு வெற்றியின் விளவாகும். டிட்டோவின் தலைமையின் கீழ் யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சியால் பால்கனைத் திரும்பத் திரும்ப சகோதரத்துவ யுத்த அல்லோல கல்லோலங்களில் மூழ்கடித்த குறுந்தேசிய வாதத்தினைக் கடக்கும் நோக்குடன் புதிய அரச வடிவங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டது. 2ம் உலக யுத்தத்தின் போதான தேசிய சோவினிசத்துடனான கசப்பான அனுபவங்கள் அதனது எல்லா மக்களுக்கும் சமத்துவத்தை உத்தரவாதம் செய்கின்ற ஒரு தனித்த யூகோஸ்லாவியாவில் உள்ளான "சகோதரத்துவத்திற்கும் ஐக்கியத்திற்குமான" டிட்டோ ஆட்சியின் அழைப்பிற்கு பரந்துபட்ட மக்கள் ஆதரவை விரைவாக்கியது.

சோவியத் ஸ்ராலினிச அதிகாரத்துவத்தை மாதிரியாகக் கொண்டும் பால்கனில் ஏகாதிபத்தியத்தினால் சுமத்தப்பட்ட தேசியப் பிரிவினைகளை ஏற்றுக் கொண்டதுமான டிட்டோ ஆட்சி இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு இயலாதது என நிரூபித்துக்கொண்டது. வாஷிங்டனுக்கும் மொஸ்கோவிற்கும் இடையே பேரம்பேசுவதன் மூலம் ஒரு அற்ப தேசிய சுதந்திரத்தினை ஸ்தாபித்துக் கொள்வதற்கு இது முயற்சித்துக் கொண்டிருந்தவேளையில் மேற்கத்தய முதலாளித்துவத்திடமிருந்து அதிகரித்த பொருளாதார அரசியல் அழுத்தத்தின் கீழ் வந்தது. உள்ளார்ந்த வகையில் இந்த அரசு தேசிய சச்சரவுகளின் எழுச்சியை 6 யாப்பிற்கு அமைந்த குடியரசுகளையும் 2 தன்னாட்சி மாகாணங்களையும் கொண்ட ஒரு பெடரல் அமைப்பு முறையினூடு கட்டுப்படுத்த முயன்றது. இந்த ஒவ்வொரு பிராந்தியத்தினுள்ளும் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கான விரிவான உத்தரவாதங்கள் நாட்டின் யாப்பில் எழுதப்பட்டதுடன் மத்திய அரசினால் வலியுறுத்தப்பட்டது.

நடைமுறையில் ஆட்சியின் அதிகாரத்துவ இயல்பு பிராந்தியத்தின் பொருளாதார பின்தங்கிய நிலமையின் பாரம்பரியத்துடன் இணைந்து பலம் மிக்க பிளவுவாத போக்குகளை உருவாக்கியது. ஒவ்வொரு குடியரசிலும் உள்ள ஆளும் அதிகாரத்துவங்கள் தங்களது சொந்த சக்தியையும் சலுகைகளையும் பலப்படுத்திப் கொள்ளும் நோக்குடன் ஒரு நியாயமற்ற எதேச்சதிகார முறையில் தங்களது தொழிற்துறைகளையும் மேற்கட்டுமானத்தையும் அபிவிருத்தி செய்து அதிகரித்த முறையில் தனிப்பட்ட பொருளாதார முழுமைகளாகத் தொழிற்பட்டனர். இறுதியில் ஒவ்வொரு குடியரசுகளும் தங்கள் ஒவ்வொருவருக்கும் உள்ளதை விட வெளிநாட்டு முதலாளித்துவத்துடன் பரந்த பொருளாதாரத் தொடர்புகளை ஸ்தாபித்தனர். டிட்டோவின் கீழான மத்திய அரசு அதனது பலத்தை தேசிய இராணுவத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் வித்தியாசமான குடியரசுகளுக்கிடையேயான குறிப்பாக குரோஷியாவிற்கும் சேர்பியாவிற்கும் இடையேயான முரண்பாடுகளை தீர்த்துவைப்பதன் மூலமும் த்துக்கொண்டது. இது ஒரு குடியரசிலும் பின்னர் மற்றதிலுமாக தேசிய வாதத்தின் வெளிப்பாடுகளை ஒன்றன் பின் ஒன்றாய் அடக்கியது இறுதியில் இரண்டிலும் தேசியவாதப் போக்குகளைத் தூண்டி விட்ட விளைவுகளை உருவாக்கியது. 2ம் உலக யுத்தத்தின் போதான கூட்டுப் போராட்டத்தை வழிநடத்திய அனைத்து யூகோஸ்லாவிய தேசிய வாதம் ஒரு வெறுமையாக வந்தது.



டிட்டோ ஆட்சி யூகோஸ்லாவியாவின் வேறுபட்ட மக்களை ஐக்கியப்படுத்துவதற்கு எந்த உண்மையான முயற்சியையும் எடுக்கவில்லை. விதிவிலக்கான முறையில் இது பல்வேறு குடியரசுகளிலும் இருந்து மாணவர்களை உள்ளடக்கிக் கொண்டதான ஒரு தனித்த தேசிய பல்கலைக் கழகத்தை ஒருபோதுமே ஸ்தாபிக்கவில்லை. குரோஷிய இளைஞர்கள் சாகிரபிற்கும் சேர்பிய இளைஞர்கள் பெல்கிரேட்டுக்கும் சென்றனர். அதிகாரத்துவம் சிறப்புரிமைவாதத்திற்கு எதிராகப் போராடாது விட்டமை தற்செயலானது அல்ல. இதனது பாரிய பயம் குடியரசு எல்லைகளை குறுக்காக அழித்து தொழிலாள வர்க்கத்தின் ஒரு ஐக்கியப்பட்ட போராட்டம் எழுந்து வரும் என்பதே. டிட்டோ அவரது குறிப்பிடக்கூடிய பாதுகாப்புக் கருவிகளின் முழு நிறையையும் அடக்குவதற்குப் பாவித்தார்.

## சர்வதேச நாணய நிதியத்தின் சிக்கன நடவடிக்கையின் பாத்திரம்

யூகோஸ்லாவியாவின் உடைவு 1970 களின் முடிவில் இருந்து வெளிநாட்டு வங்கிகளாலும் சர்வதேச நாணய நிதியத்தாலும் சுமத்தப்பட்ட ஒரு தொடர் சிக்கன வேலைத்திட்டங்களால் விரைவுபடுத்தப்பட்டது. இதனது நோக்கம் உள்நாட்டு நுகர்வை வீழ்ச்சியடையச் செய்வதன் மூலம் பலூன் போல் விரிவடைந்து வந்த நாட்டின் வெளிநாட்டுக் கடனுக்குரிய கொடுப்பனவுகளை த்துக் கொள்வதாக விளங்கியது. சர்வதேச நாணய நிதியத்தின் நடவடிக்கைகள் ஒரு பேரழிவு மிக்க தாக்கத்தினைக் கொண்டிருந்தது. 1980களின் மத்தியில் வேலையின்மை பொருளாதார மந்தகால மட்டத்தை அடைந்திருந்தபோது பணவீக்கமும் சம்பளக் கட்டுப்பாடும் உண்மையான வருமானத்தை இந்த இரு தசாப்தங்களுள் மிகவும் கீழான மட்டத்திற்கு வீழ்ச்சியடையச் செய்தது. இதனது விளைவு யூகோஸ்லாவியா பூராவும் வெளிநாட்டு செலவாணி வைத்திருந்தோர்கும் அது அற்றோருக்கும் அதேபோல் செல்வந்தக் குடியரசுகளுக்கும்– சுலோவினியா குரோஷியா– நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இடையில் சமூகத் துருவப்படுத்தல் வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது.

சுலோவினிய குரோஷிய கட்சித் தலைவர்களும் அதிகாரத்துவங்களும் யூகோஸ்லாவியாவின் நலிவடைந்து "செல்லும்" பொருளாதாரத்திற்கு ரேகனினதும் தாட்சரினதும் மொழியில் வாதிட்டனர். அவர்கள் சுலோவினியாவிலும் குரோஷியாவிலும் உள்ள தொழிற்சாலைகள் தெற்கில் உள்ள மிகவும் முன்னேற்றம் அடையாத பகுதிகளின் அபிவிருத்திக்கு ஒரு பகுதியைச் செலுத்துவதைவிட தங்களது மிகவும் செறிவான ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் இருந்து கிடைக்கும் முழு வருமானத்தையும் தாங்களே கொண்டிருக்க அனுமதிக்கப்பட வேண்டுமென கோரிக்கை விட்டனர். இந்த நோக்கத்திற்கான வரிவிதிப்பு ஒரு "தேசிய சுரண்டல்" வடிவத்தினைக் கொள்வதாகக் குற்றம் சாட்டினர். ஆஸ்திரியாவிலும் ஜேர்மனியிலும் இருந்தான வெளிநாட்டு மூலதனத்துக்கான அதிகரித்த வசதிகளுடன் அவர்களால் பெல்கிரேட்டில் உள்ள மத்திய அரசாங்கத்தின் கோரிக்கைகளை தோற்கடிக்கக் கூடியதாக இருந்தது.

முன்னர் மத்தியில் இருந்தான பொருளாதாரப் பரவலாக்கத்தை உற்சாகப்படுத்தி விட்டு தற்போது சர்வதேச நாணய நிதியம் இறுக்கமான பிஸ்கால் நாணயக் கட்டுப்பாட்டை பல்வேறு குடியரசுகளின் மீது சுமத்துவதில் மத்திய அரசாங்கம் பாரிய பொறுப்பு வகிக்கவேண்டும் எனக் கேட்கிறது. சமூக நெருக்கடியை தணிப்பதற்கான எல்லா மார்க்கங்களும் பிடுங்கப்பட்டு பெல்கிரேட் அரசாங்கம் வெளிநாட்டு வங்கிகளுக்கான சேகரிப்பு ஏஜன்சியின் பாத்திரத்தை எடுத்தது. பல்வேறு குடியரசுகளிலும் உள்ள அதிகாரத்துவங்கள் இந்த மத்திய அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதில் எந்த அக்கறையையும் காணாததுடன் பதிலாக தங்களது பொருளாதார அரசியல் சுயாதீனத்தை அதிகரிக்க முயன்றனர்.

## ஒரு புரட்சிகர முன்னோடி நிலமை

யூகோஸ்லாவியாவின் சிதைவு பற்றிய ஒரு உட்பார்வை மிக்க ஆய்வான பால்கன் துன்பியல் என்ற நூலில் ஆசிரியர் சுசான் வூட்வாட் **(Susan Woodward** ) பின்வருமாறு குறிப்பிடுகிறார் "1985–86 அளவில் ஒரு புரட்சிகர நிலமைக்கான முன்நிபந்தனைகள் தோற்றத்திற்கு வந்தன. அதிகரித்துச் செல்லும் வேலையின்மை வீதம் சுலோவீனியாவையும் குரோஷியாவையும் தவிர்ந்த எல்லாக் குடியரசுகளிலும் 20 வீதத்திற்கும் அதிகமாகும். பணவீக்கம் வருடத்திற்கு 50 வீதமாக இருந்ததுடன் உயர்ந்து சென்றது. கிட்டத்தட்ட 80 வீதம் மக்கள் தொகையினரின் வீட்டுக் கையிருப்புக்கள் முடிவடைந்தன. டொச் மார்க் அமெரிக்க டொலர் • போன்ற மேற்கத்தய நாணயங்கள் உள்நாட்டு

அதிகரித்தவிதத்தில் கூர்மையான பிரச்சனையாக வந்தது. அழுத்தத்தை முயற்சிகள் பணவீக்கத்தைக் பொருளாதார முக்கியத்துவத்தையும் இந்த பொருளாதாரத் துருவப்பட துருவப்படலுக்கு இட்டுச்சென்றது." **Woodward, Balkan Tragedy: Dissolution After the Cold War [Wash The Brookings Institution, 1995], p. 7**

யூகோஸ்லாவிய தொழிலாள சிதைவடைந்துவரும் அதிகாரத்துவ அ சொந்த சுயாதீன அரசியல் பதிலீட்டை மூலம் இந்தப் புரட்சிகர முன்னோடி நிலமை அனுகூலத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நிரூபித்தது. பதிலாக ஆளும் அதிக அதிதீவிர தேசியவாத சக்திகளுடனும் வெ பாசிஸ்ட்டுகளுடனும் புலம்பெயர்ந்த சேர்ந்தவர்களுடனும் இணைந்து இந் முன்னோடி நிலமையை புதிய இன ஒருங்கிணைந்த பிராந்தியங்களைப் பிரித் சகோதரத்துவ யுத்தத்தின் வழியில் இட்டு

இது தொழிலாள வர்க்கத்தின் போ பற்றாக் குறையினால் ஏற்பட்டதல்ல. நாணயசபையின் முதல் சுற்று வேலைத்திட்டத்திற்கு பிரதிபலிப்பாக 1982 இடையே வேலைநிறுத்தங்கள் 80 வீதம்வ 1987ல் அரசாங்கத்தின் உ அறிக்கையின்படி 365,000 தொழிலாள வேலைநிறுத்தங்களில் சம்பந்தப் அத்துடன் 1988ன் முடிவில்– யுத்த வெ வருடத்திற்கு முதல்– குரோசியா சேர்பியா என்பவற்றில் இருந்து தொ பரந்துபட்ட பிரதிநிதிகள் யுத்தத்திற் காலகட்டத்தில் முதல் தடவையாக உள்ள பெடரல் பாராளுமன்றத்தின் வாசல் எதிர்ப்புகளில் அணிதிரண்டனர்.

அன்றி மக்கள் தொகையின் முழுப் பெரு தேசிய சிறப்புரிமை வாதத்திற்கு ஆதரவ இல்லை. யுத்தத்தை நோக்கிய நகர்வி மீண்டும் மீண்டும் இடம்பெற்ற ஆ யூகோஸ்லாவியாவின் துண்டாடலுக்கு எதிர்ப்பினை வெளிப்படுத்தியது. எப்படியிரு தொழிலாள வர்க்கத்திடம் பற்றாக்குறையா என்னவெனில் முன்னாள் அதிகாரத்துவங்களதும் வகுப்புவாத வாதிகளதும் கூட்டிற்கு எதிராக அ சுயாதீனமான போராட்டத்தில் ஐக்கியப்ப இயலக்கூடிய ஒரு முன்னோக்கும் த குறிப்பிடக்கூடிய பகுதியிலான தொழிலாளர் இளைஞர்கள் கிழக்கு ஐரோப்பா பூரா அதனது சகாக்களைப்போலவே யூ அதிகாரத்துவம் அதனது சொந்த சலுகைகளையும் "சோசலிசத்துடன்" முயன்றமையும் ஸ்ராலினிசத்தின் கொள்கைகளின் விளைவாகவும் குழப்பியடி

யூகோஸ்லாவியா ஒரு உலக அளவில் வர்க்கம் முகங்கொடுக்கும் தலைமைநெருக் கூர்மையான வெளிப்பாட்டை காட்டியது. இயக்கத்தை ஆதிக்கம் அதிகாரத்துவங்கள்– ஸ்ராலினிச சமூக தொழிற்சங்க– முதலாளித்துவத்திற்கு தொழிலாள வர்க்கத்தை சர்வதேச ரீதியி படுத்துவதற்கான போராட்டத்தை ஒன்றில் மூலத்தில் இருந்தே எதிர்த்தன அல் காலத்திற்கு முன்னரே நிராகரித்துவிட்டன எல்லோரும் தேசிய வாதத்தையும் இலாப ஆதரவளிப்பதையும் அடிப்படையாகக் கொள்கைகளை வரித்துள்ளனர். இந்த வெற்றிடத்தை எடுத்துக்கொண்டு வளர் வந்த முதலாளித்துவ வாதிகள் யூகோஸ் ஆதிக்கம் செலுத்திவந்த சமூக நிலமை பிரமாண்டமான திருப்தியின்மையை சோவினிசப் பாதைகளில் திருப்பி உள்ளனர்.

இன்னொரு கால்கட்டத்தில் கிறிமின மூர்க்கமான மூளை குளம்பியோராகவு வைக்கப்படும் நபர்கள் தேசிய கதாநாயக ம அரசியல் தலைவர்கள் உயர்த்தப்பட்டுள்ளனர். வேலையற்ற வேலை கண்டுகொள்வதற்கு எந்த அற்றிருந்த பாடசாலைப் பட்டதாரிகள் ஒடுக்கப்பட்ட தட்டுக்கள் என்போர் ஒரு பாதையைக் காண்பதைவிட இன அடிப இராணுவத்திலும் படைகளிலும் ஒருவ கொன்று தள்ளுவதற்கு அணிதிரட்டப் முன்னாள் யூகோஸ்லாவியாவில் கொண்டுள்ள வகையிலான ச உள்நாட்டுயுத்தம் ஆகாயத்திலிருந்து விழவி ஒரு புரட்சிகரத் தலைமையினதும் முன் வருகையின்மைக்கு யூகோஸ்லாவியத் வர்க்கத்தால் செலுத்தப்படுகின்ற விலையாகு இந்தப் பின்னகர்வு அபிவிருத்தியை சுயநிர்ணயத்துக்கான" போராட்டமாகக் முயற்சிக்கும் தொழிலாளர் புரட்சிக் கட்சியின தங்களைத் தாங்களாகவே "சோசலிஸ்ட்டு பிரகடனம் செய்து கொள்பவர்களதும்

படிப்பகம்

www.padippakam.com

# ...னவாதயுத்தத்தினை தோற்கடிக்க சோசலிச ...லைத்திட்டத்தினை நோக்கி முன்னேறு.

...ச்சி

...ர் "வடக்கிலிருக்கும் பயங்கரவாதிக– வேலைநிறுத்தம் செய்பவர்கள்தான் ...கள்" என்று பத்திரிகையாளர்களுக்கு ...ந்தார். இது தொழிலாளவர்க்கத்தின் தலையீட்டினை முறியடிப்பதற்காக மேற்கொள்ளப்படும் இராணுவ ...லும் மோசமான இராணுவ ...ளை தொழிலாளர்கள் மேல் ...் தயார் நிலையை மட்டுமே ...கின்றது.

...அடித்தளத்தில்தான் மக்கள் முன்னணி ...னது ஜனநாயக வேடங்களுக்குள் மறைந்து முழுமைக்கும் சர்வாதிகாரத்தை ...டியதான ஒரு இராணுவக் குவிப்பினை ...றது. இரண்டு கிழமைகளுக்கு முந்திய ..." பத்திரிகை சிறீலங்காவின் இராணுவம் ...ன் எண்ணிக்கையின் அடிப்படையில் ...னைக் கொண்ட உலகின் 34வது பெரிய ...ன்பதனையும் நாட்டில் 18 வயதானோரின் ...டன் எண்பதிற்கு ஒருவர் என்ற விகிதத்தில் ...டையில் இருக்கின்றார்கள் என்பதையும் ...து. நாட்டின் செல்வத்தின் பெரும்பகுதி ...தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கு ...ப்படுகையில் முழு சமுதாயத்தையும் ...மாக்கும் முயற்சியான இராணுவத்திற்கான ...கள் தீவிரமயப்படுத்தப்பட்டுள்ளது.

## ...தீர்வு"

...த்திற்கான போர்" என்ற கொள்ளைக்கார யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான ...னை மேற்கொண்ட மக்கள்முன்னணி ...ற்போது "மக்கள் விரும்புகின்றார்கள்" என்ற ...் ஒரு இராணுவ ஆட்சியை யாழ் உருவாக்குகின்றது. இந்த வருட யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேலான ...ற்றுகையின் போது அங்கிருந்து வெளியேறிய ...கான தமிழ்மக்களில் ஒரு பகுதியினர் திரும்பி ...ந்த இடங்களுக்கு சென்றது அவர்களது ஜனநாயக உரிமையாகும். இது எந்த யாழ்பாணக்குடாநாட்டில் இராணுவ ...் கீழ் தமிழ்மக்கள் வாழ்வதற்கு தயார் என்று பிரகடனமில்லை.

...ன்னணி அரசினதும் அதனது ...னதும் ஜனநாயகத் தன்மையில் ஏற்பட்ட ...ன்பதைவிட தமிழீழ விடுதலைப்புலிகளின் வங்குரோத்தினையும் அவர்களது ... இயந்திரத்தையும் நிராகரிப்பதன் ...் புலிகளின் தடைகளையும் மீறி குடாநாட்டு ...பிச் சென்றனர்.

... விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து குடாநாட்டினை விடுவித்து அரசியல் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு ...க மக்கள் முன்னணி அரசாங்கம் பிரச்சாரம் இம்மியளவைத்தன்னும் தமிழ்மக்கள் ... இந்த தீர்வுக்கான திட்டங்கள் தொடர்பாக ...ணி அரசு ஐக்கியதேசியக்கட்சி ...க்கட்சி இன்னும் ஏனைய தமிழ் சிங்கள ...வக் கட்சிகள் யாவும் தங்களுக்குள் கலந்துரையாடல்களுக்கு ஊடாக ...ரில் பரப்பிவரும் நச்சுப் பிரச்சாரங்கள் யாவும் ... தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்தை ... தீர்க்கப்படாத ஜனநாயகக் கடமைகளுக்கு இன்னமும் முதலாளித்துவம் இலாயக்கானது ...ாழிலாளர் ஒடுக்கப்பட்ட மக்களை ...துமாகும்.

...ணக் குடாநாட்டினை மீண்டும் கட்டியெழுப்பப் ...செய்யப்பட்ட அரசின் பம்மாத்து பிரச்சாரங்கள் ஒரு முடிவிற்கு கொண்டுவரப்பட்டதுடன் ...திற்கு திரும்பியிருக்கும் மக்கள் ...ிய உணவுப்பொருட்கள் மருந்துகள் ...றப் பெற்றுக் கொள்வதற்குகூட அரசு ...துள்ளது. இதேசமயத்தில் தெற்கின் –ஒடுக்கப்படும் மக்கள் இனவாதப் தியாகம் செய்யுமாறு வற்புறுத்தப்படுவதுடன் ...ிய உணவுப்பொருட்களின் விலைகளும் ...பேரால் கூட்டப்பட்டுள்ளது.

இந்த முதலாளித்துவ அரசினால் ...க்கு "சமாதானத்தை" கொண்டுவருவதற்கு ...லை என்பதனை மட்டுமன்றி தீவின் –ஒடுக்கப்பட்ட மக்களின் எந்தவித ... பிரச்சினையையும் தீர்ப்பதற்கும் ...ு என்பதனை தெளிவுபடுத்துகின்றது.

## ...ளர் மீதான புலிகளின் கொலைகள்

வைத்ததின் மூலம் 63 பேர் கொல்லப்பட்டதுடன் 500ற்கும் மேற்பட்டோர் படுகாயங்களுக்குள்ளாயினர். மாலை 5மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்பட்ட இந்த ரயிலில் 2000ற்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் அலுவலக உத்தியோகத்தர்களும் பிரயாணம் செய்தனர். புலிகளினது இந்த தாக்குதலானது தொழிலாளவர்க்கத்தினை உடல் ரீதியாக அழித்தொழிக்கும் அவர்களது தொழிலாளவர்க்க விரோத அரசியலிலிருந்து ஊற்றெடுக்கின்றது.

தமிழ் மக்களை அழித்தொழிக்கும் அதே முதலாளித்துவத்தின் சுரண்டலுக்கு நாளாந்தம் பலியாகி மாலையில் வீடுதிரும்பும் தொழிலாளர்களைக் கொல்வதில் எந்தவித முற்போக்குத்தனத்தினையும் அடையாளம் காண முடியாது. தமிழீழ விடுதலைப்புலிகளினது இந்தப் படுகொலைகள் இவர்களது வர்க்கத்தன்மை பற்றி தொழிலாளர்வர்க்கம் முழுமைக்குமான ஓர் எச்சரிக்கையாகும். தமது முதலாளித்துவ நலன்களின் அடிப்படையில் சிங்கள முதலாளித்துவத்தை ஒரு பேரம்பேசலுக்கு நிர்ப்பந்திப்பதற்காக சிங்களத் தொழிலாளர்களைக் கொன்று குவிக்கும் விடுதலைப்புலிகள் எந்தவிதத்திலும் தமிழ் தொழிலாளர்களின் ஜனநாயக உரிமைகளை அனுமதிக்கப் போவதில்லை.



*தமிழீழ விடுதலைப்புலிகளினால் குண்டுவைத்து தகர்க்கப்பட்ட பயணிகள் ரயில்.*

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட இராணுவத் தோல்விகளின் பின்னர் புலிகளின் தமிழ்–சிங்கள தொழிலாளர்களின் ஐக்கியத்திற்கு எதிரான அரசியல் நிலைப்பாடானது கடந்த ஜனவரி மாதத்தில் கொழும்பு மத்தியவங்கிக்கு குண்டுவைத்து தகர்த்ததுடன் தொழிலாளவர்க்கத்தை உடல் ரீதியில் அழித்தொழிக்கும் பாசிசப் பாணியிலான தாக்குதல்களை நடாத்தும் வகையில் வளர்ச்சியடைந்துள்ளது.

இந்த கொழும்புத் தாக்குதலானது புலிகள் முல்லைத்தீவு இராணுவமுகாம் மீது தாக்குதல் நடாத்தி ஆறுதினங்களின் பின்னர் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது. பல நூற்றுக்கணக்கான புலிகளினால் முற்றுகையிடப்பட்ட இராணுவமுகாம் தற்காலிகமாக புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. அரசாங்கம் உத்தியோகபூர்வமாக முல்லைத்தீவு முகாமிலிருந்த 1407 இராணுவத்தினரில் 11பேர் மட்டுமே மிஞ்சியிருப்பதாகவும் ஏனையோர் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது காணாமல் போயிருக்கலாம் என அறிவித்திருக்கின்றது. கடந்த 13 வருடகால இனவாத யுத்தத்தில் புலிகளினால் நடாத்தப்பட்ட இந்த பிரமாண்டமான தாக்குதல் பேச்சுவார்த்தை மேசைக்கு மக்கள்முன்னணி அரசாங்கத்தை இழுப்பதை மட்டுமே இலக்காகக் கொண்டிருந்தது.

இந்த நோக்கத்தினை மக்கள்முன்னணி அரசாங்கம் நிராகரித்துள்ளது என்பதை அரசின் புதிய இராணுவக்குவிப்பும் கிளிநொச்சி நோக்கி முற்றுகையையும் வெளிப்படுத்துகின்றது. தற்போதைய யுத்தத்திற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் உட்பட்ட ஏனைய ஏகாதிபத்திய நாடுகளின் முழுமையான ஆதரவும் தமிழீழ விடுதலைப்புலிகள் ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளுடன் ஒரு உடன்பாட்டுக்கு வருவதன் மூலம் ஒரு தீர்வினை ஏற்படுத்துவதில் ஏற்பட்ட தோல்வியும் ஆகக் குறைந்தது தற்காலிகமாகத்தன்னும் மக்கள் முன்னணி அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு தயாரில்லை என்பதனை வெளிப்படுத்துகின்றது. இந்தியத் தேர்தலிற்கு பின்னால் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் இந்திய முதலாளித்துவத்துடன் ஒரு புதிய கூட்டிற்குப் போகும் சந்தர்ப்பத்தை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உருவாக்கும் என்ற அவர்களது கணிப்பீடும் தற்போதைய நிலைமைகளில் தவறென நிருபணமாகியுள்ளது.

இந்த நிலைமை தமிழீழ விடுதலைப்புலிகளினை ஏகாதிபத்தியமும் இந்திய இலங்கை முதலாளித்துவமும் என்னவிதத்தில் பாவிப்பது என்பது தொடர்பான சிக்கல்களிலிருந்து உருவாகின்றது. இந்திய உபகண்டத்திலும் இந்துசமுத்திரப் பிரதேசத்திலும் ஏகாதிபத்தியம் வைத்திருக்கும் மூலோபாயமான ...

உலக ஏகாதிபத்தியம் மக்கள்முன்னணி அரசாங்கத்திற்கு அரசியல் பொருளாதார இராணுவ உதவிகளை வழங்குவதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பான ஒரு இராணுவத் தீர்வுக்கு முனைகிறது.

இந் நிலைமைகள்தான் தமிழீழ விடுதலைப்புலிகளை விரக்தியடையப் பண்ணியிருப்பதோடு தீவிர வலதுசாரிப்பக்கம் திரும்பி பாசிசப் பாணியிலான தாக்குதல்களை தொழிலாளவர்க்கத்தின் மீது மேற்கொள்வதற்கான நிலைமைகளை சித்தரித்துள்ளது.

## சமூக அடித்தளம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையினால் அரச இராணுவத்திற்கு முகம்கொடுப்பதற்காக இளைஞர்களை அனுப்ப முடிகின்றது என்பது புலிகள் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கையின் அல்லது ஆதரவினதோ வெளிப்பாடல்ல. ஒரு தலைமுறையின் இளைஞர்களை முழுமையாக தற்கொலைப்படை முன்னோக்குக்கு நிர்ப்பந்திக்கும் ஒரு இயக்கத்தினால் மனித சமுதாயத்தின் நாகரீகத்தின் முன்னோக்கிற்காக ஒன்றையும் செய்யமுடியாது என்பதுடன் காட்டுமிராண்டித்–தனத்தினையே உருவாக்க முடியும் என்பதை தமிழீழ விடுதலைப்புலிகள் இன்று நிறுவிக் காட்டுகின்றனர். தற்கொலைப் படையில் இணைந்தும் போரில் இராணுவத்தினால் கொல்லப்பட்ட இளைஞர்களின் தியாகத்தினை தங்களது சொந்த நலன்களுக்காக பயன்படுத்தும் ஒரு சமூகத்தட்டு இன்று உருவாகியுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளின் இன்றைய ஆதரவாளர்கள் இந்த சமூகத்தட்டின் பிரதிநிதிகள் இந்த சமூகத்தட்டானது தமிழ் முதலாளிகளினதும் போரில் கொல்லப்பட்ட இளைஞர்களின் குடும்பத்தாலும் இன்னும் ஏனைய ஒட்டுண்ணித் தட்டுக்களாலும் பிரதிநிதிப்படுத்தப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தினைப் புலிகள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தது போன்ற நிலைமைகளிலேயே கிளிநொச்சி பிரதேசமும் அகதிமுகாம்களும் நிர்வகிக்கப்படுகின்றது. வடக்கிற்கு எடுத்துச் செல்வதற்கு அரசினால் அனுமதி வழங்கப்படும் மிகக் குறைந்த உணவுப்பொருட்களில் பெரும்பகுதி தமிழீழ விடுதலைப்புலிகளின் அங்கத்தவர்களினால் எடுத்துக்கொள்ளப்படுகின்றது. மிச்சம்மீதியானது புலிகளினது கடைகளுக்கும் ஏனைய புலிசார்பான கடைகளுக்கும் அதிகூடிய விலையில் விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றது. புலிகளது அங்கத்தவர்களது குடும்பத்தினைச் சேர்ந்தவர்களுக்கு தொடர்ச்சியான உணவு விநியோகமும் தங்குதடையின்றி தென்னிலங்கைக்கு பயணம்–செய்வதற்கான உத்தரவாதமும் வழங்கப்பட்டுள்ளது. புலிகளது இந்த நடைமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் புலிகளினால் சமீபத்தில் கிளிநொச்சியில் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலத்தை மக்கள் பகிஷ்கரித்தனர். இந்த ஊர்வலங்கள் சிறீலங்கா அரசிடமிருந்து கூடிய உணவுப்பொருட்களை வழங்குவதை கோரி புலிகளால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

படிப்பகம்

இது தமிழீழ விடுதலைப்புலிகள் வர்க்க ...

முழுமையாக முரண்படும் இயக்கமாக உருமாறியுள்ளதை எடுத்துக்காட்டுகின்றது.

## தொழிலாளவர்க்கத்தின் பணி

இனவாத யுத்தத்திற்கான முடிவினை தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவத்துடனான மோதுதலாலோ அல்லது அரசின் தீர்வுக்கான திட்டங்களினாலோ ஏற்படுத்த முடியாது. இந்தப் போரினை தொழிலாளவர்க்கத்தின் சுயாதீனமான தலையீட்டினால் மட்டுமே நிறுத்த முடியும். இதுவே தமிழ் சிங்கள தொழிலாள–ஒடுக்கப்படும் மக்களின் இன்றைய மூலோபாயமான பணியாகும். தெற்கில் இனவாதயுத்தத்திற்கு எதிராகவும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு மேலான தாக்குதலுக்கு எதிராகவும் நடவடிக்கைக் குழுக்களை உருவாக்க வேண்டும்–இந்தக் குழுக்களுடன் வடக்கின் தொழிலாள இளைஞர்களின் சுயாதீனமான குழுக்களையும் ஒன்றிணைக்க வேண்டும். இது தமிழ்–சிங்கள தொழிலாளர்களின் அரசியல்ரீதியான ஐக்கியத்தை உருவாக்குவதான மிகவும் சாதகமான நிலைமைகளை உருவாக்கும்.

இது சமீபத்திய தோட்டத்தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்திலும் நிறுவிக்காட்டப்பட்டுள்ளது. நான்கு லட்சம் தமிழ் தொழிலாளர்களையும் இரண்டுலட்சம் சிங்களத் தொழிலாளர்களையும் ஐக்கியப்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட தோட்டத்தொழிலாளர்களின் வேலைநிறுத்தமானது மக்கள் முன்னணி அரசின் இனவாதயுத்த அரசியலுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் சிங்களத் தொழிலாளர்களைக் கொல்லும் புலிகளினது தேசியவாத அரசியலுக்கும் எதிரான தொழிலாளவர்க்கத்தின் சுயாதீனமான நிலைப்பாட்டினை எடுத்துக்காட்டியது. இந்த வேலைநிறுத்தம் இனிவரப்போகும் தொழிலாளவர்க்க எழுச்சிகளில் தமிழ்–சிங்கள தொழிலாளர்களின் ஐக்கியப்பட்ட போராட்டத்திற்கு கட்டியம் கூறுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான வெறுப்பு மட்டும் தன்னிச்சையாக தமிழ்மக்களின் ஜனநாயக உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கான வழிகளைத் ஒருபோதும் திறந்து விடாது. இந்த உரிமைகளை வெல்வதற்கான ஒரேவழி தமிழ் தொழிலாளர்களும் ஒடுக்கப்பட்ட மக்களும் தமிழீழ விடுதலைப்புலிகள் உட்பட்ட அனைத்து தேசியவாத வேலைத்திட்டத்துடன் உடைத்துக்கொண்டு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை கட்டியெழுப்ப முன்வரவேண்டும். தமிழ்–சிங்கள தொழிலாளர்களின் ஐக்கியத்திற்காகப் போராடுவதை தனது வேலைத்திட்டத்தின் மத்தியபுள்ளியாக வைத்திருக்கும் ஒரேயொரு கட்சி நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகமாகும். சிறீலங்காவில் முதலாளித்துவ ஆட்சிக்கு முடிவுகட்டி இந்திய சோசலிசக் குடியரசின் ஒரு பாகமாக தமிழீழ–சிறீலங்கா சோசலிசக் குடியரசை நிறுவுவதே புரட்சிக் கம்யூனிஸ்ட் ...

www.padippakam.com



இலங்கையில் ட்ரொட்கிசமும்
திரிபுவாதமும்
சமசமாஜ வரலாற்று ஏட்டிலிருந்து.
கீர்த்தி பாலசூரியா

80 பக்கங்கள் விலை 5 DM.

ISBN 955-9123-33-5

## தொழிலாளர்பாதை

"தொழிலாளர்பாதை" "கம்கறுமாவத்த" பத்திரிகைகளுக்கு சந்தாதாரராகுங்கள்.
லங்கா சமசமாஜக்கட்சியின் துரோகங்களுக்கு எதிராக மார்க்சிச பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காகவும் சோசலிசப்புரட்சி முன்னோக்கிற்கு போராடுவதற்காகவும் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் சர்வதேச ட்ரொட்கிசவாதிகளினால் உருவாக்கப்பட்டது. இதனது உத்தியோகபூர்வ பத்திரிகைகளாக தமிழில் "தொழிலாளர் பாதை சிங்களத்தில் "கம்கறுமாவத்தையும்" வெளியிடப்படுகின்றன.
இப்பத்திரிகைகளின் பிரதான பணி சர்வதேச தொழிலாளர்வர்க்கத்தின் ஐக்கியத்திற்காகப் போராடுவதாகும். இதுதான் தொழிலாளர்வர்க்கத்தினுள் சோசலிச உன வளர்த்தெடுப்பதற்கான முன்நிபந்தனையை உருவாக்குகின்றது.
இதனை அனைத்து தேசியவாத சந்தர்ப்பவாத போக்குகளுக்கும் எதிரான சமரசமற்ற போராட்டத்தினால்தான் முன்னெடுக்க முடியும். இந்த வகையில் "தொழிலாளர்பாதை" தமிழ் பேசும் தொழிலாளர்கள் இளைஞர்கள் மத்தியில் கட்டாயமாக வாசிக்கப்படவேண்டிய பத்திரிகையாகும்.



நிரந்தரப்புரட்சியும் சோசலிச
அனைத்துலகவாதத்திற்கான
போராட்டமும்
கீர்த்தி பாலசூரியா நினைவுப் பேருரை
டேவிட் நோர்த்

54 பக்கங்கள் விலை 5 DM.

ISBN 955-9123-23-8

முதலாளித்துவ மரணஓலமும்
நான்காம் அகிலத்தின் பணிகளும்
இடைமருவு வேலைத்திட்டம்
நான்காம் அகிலத்தின் ஸ்தாபக
மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

84 பக்கங்கள் விலை 5 DM.

ISBN 955-9123-00-9




உலக முதலாளித்துவ நெருக்கடியும்
நான்காம் அகிலத்தின் பணிகளும்
நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்
குழுவின்
முன்னோக்கின் தீர்மானம்
ஒகஸ்ட் 1988.

80 பக்கங்கள் விலை 5 DM.

ISBN 3-88634-500-9




# வடக்கில் இராணுவ ஆட்சிக்காக திவயின பிரச்சாரம்

வடமாகாண பொதுமக்களின் கோரிக்கையாகக் காட்டி யாழ்ப்பாணக் குடாநாட்டில் இராணுவ ஆட்சியை ஸ்தாபிதம் செய்யும் பிரச்சாரத்தில் திவயின பத்திரிகைக்காரர்கள் இறங்கியுள்ளனர். வடக்கே இராணுவ நிர்வாகத்தை உருவாக்கு! என்ற தலைப்பின் கீழ் 1996 மே 12ம் திகதிய ஞாயிறு பத்திரிகை முதல்பக்க தலைப்புச் செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டது.

"யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் பொதுமக்கள் அங்கு இராணுவ நிர்வாகத்தை ஏற்படுத்துமாறு அதிகாரிகளுக்கு கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது."

தமிழர் எதிர்ப்பு இனவாத யுத்தத்தினால் தமிழ் பொதுமக்கள் கடந்த 14 வருடங்களாகவும் இன்றும் முகம்கொடுத்துள்ள மரணம் தொற்றுநோய்கள் பட்டினி இடம்பெயர்வுகள் முதலான அவஸ்தைகள் பற்றி எதுவிதமான அறிக்கையும் கிடைக்கப் பெறாத திவயின பத்திரிகைக்காரர்களுக்கு வடக்கில் இராணுவ நிர்வாகத்தைப் பற்றிய பொதுமக்களின் கோரிக்கை எதுவித குறைச்சலும் இல்லாமல் கிடைத்துள்ளது!

பதின்மூன்று வருடங்களாக முன்னெடுக்கப்படும் இனவாத யுத்தத்தின் இரத்தம் தோய்ந்த அனுபவங்களைப் பெற்றுள்ள வடமாகாண மக்கள் மட்டுமன்றி தெற்கின் எந்தவொரு தொழிலாளியும் திவயின பத்திரிகைக்காரர்களின் மோசடிகளால் ஏமாந்து விடக்கூடாது. இந்தப் பிரச்சாரத்தில் பொதிந்து போயுள்ள வடக்கு-தெற்கு தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான ஆபத்துக்களை குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது.

இதற்கிடையே "சிந்தனை வட்டம்" என்ற பாசிசக் கும்பலும் மற்றும் அமைப்புக்களும் வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றாதே! வடக்கில் இராணுவ ஆட்சியை தொடர்ந்து வைத்திரு! கைப்பற்றிய பகுதிகளில் சிங்கள மக்களைக் குடியமர்த்து! முதலான இராணுவ ஆட்சியை நிறுவுவதற்கான பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளன. இதன் ஒரு பாகமாக கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சுவரொட்டி பிரச்சாரம் இடம்பெற்று வருகின்றது.

திவயினவும் பாசிசக் கும்பல்களும் வடக்கில் இராணுவ ஆட்சியை நிறுவும் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருப்பது பொதுஜனமுன்னணி அரசாங்கம் இனவாத யுத்தத்தை உக்கிரமாக்கிக் கொண்டும் வடக்கு-கிழக்கை இராணுவ பிடியின் கீழ் கொண்டுவந்துள்ள நிலையிலும் முழு நாட்டிலும் இராணுவ சர்வாதிகாரத்தை திணிக்கும் திட்டங்கள் விரைவுபடுத்தப்பட்டு வரும் நிலையிலுமாகும்.

ரிவிரச இன் கீழ் இடம்பெற்ற மாபெரும் இராணுவ நடவடிக்கைகளின் மூலம் மே 16ம் திகதி யாழ்ப்பாணக்குடாநாடு அரசபடைகளின் பிடியில் கீழ்க் கொணரப்பட்டதாக அறிவிக்கப்பட்டது

பிரிவினைவாத விடுதலைப்புலிகளுக்கு இராணுவ ரீதியிலான தோல்வியை ஏற்படுத்தி யாழ்ப்பாணக் குடாநாட்டினை தமது பிடியின் கீழ் கொணர்ந்த போதிலும் தமிழ் மக்களை தமது பிடியின் கீழ் கொணர முடியவில்லை என்பதை பொதுஜனமுன்னணி உள்ளடங்கலான முதலாளித்துவ ஆளும் வர்க்கம் நன்கு அறியும். அது மட்டுமன்றி பிரிவினைவாத விடுதலைப்புலிகள் உள்ளடங்கலான தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களின் அரசியல் வங்குரோத்தும் பிற்போக்கும் தமிழ் பொதுமக்களின் எதிரில் அம்பலமாகியுள்ளது. இந் நிலையில் இனவாத யுத்தத்துக்கும் தேசிய ஒடுக்குமுறைக்கும் எதிராக தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களில் இருந்து சுயாதீனமாக அரசியல் யாப்பு உருவாகும் நிலைமைகள் தமிழ் மக்களிடையே வளர்ச்சிகண்டு வருகின்றது. இது எல்லாவற்றையும் விட முதலாளிவர்க்கத்தை கிலியடையச் செய்துள்ள ஒரு காரணியாகும். சிறப்பாக புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் முன்வைக்கும் அனைத்துலக சோசலிசத்துக்கான வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தமிழ் மக்கள் அணிதிரளும் ஆபத்தையிட்டு ஆளும் வர்க்கம் கலக்கம் அடைந்துள்ளது.

ஆதலால் வடக்கு-கிழக்கில் திணிக்கத் திட்டமிடும் இராணுவ நிர்வாகத்துடன் சேர்ந்து அப்பகுதி மக்களின் அரசியல் செயற்பாட்டை நசுக்கவும் ஆளும்வர்க்கம் தீர்மானம் செய்துள்ளது. திவயினவின் பின்வரும் செய்தி அதை ஊர்ஜிதம் செய்கின்றது

"தற்சமயம் கொழும்பில் உள்ள வடக்கின் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மீண்டும் இராணுவ அதிகாரம் ஸ்தாபிதமான பகுதிகளுக்கு சென்று அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பது பற்றி யோசிப்பது தொடர்பாக யாழ்ப்பாண பொதுமக்கள் அதிதிருப்தி தெரிவித்துள்ளனர்". என திவயின பத்திரிகை காரர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் அரசியல் கட்சிகளின் தொழிற்பாட்டை வடக்கில் தடைசெய்வது பொதுமக்களின் கோரிக்கையல்ல. இது பொதுஜனமுன்னணி அரசாங்கத்தின் தீர்மானம் ஆகும் என்பதை மே 17ம் திகதிய திவயின பத்திரிகையின் செய்தி ஊர்ஜிதம் செய்கின்றது. "வடக்கில் அலுவலகம் முடியாது... நடமாட்டம் முடியாது! என்ற தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்ட செய்தியின்படி புளொட் பீ.ஆர்.எல்.எப். ரெலோ பி.டீ.பி அமைப்புக்கள் நான்கும் வடக்கில் அலுவலகங்கள் திறப்பதும் அங்கு விஜயம் செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்கள் 1987 இந்திய-இலங்கை உடன்படிக்கையின் பின்னர் யூ.என்.பி. பொதுஜனமுன்னணி அரசாங்கங்களின் இனவாத யுத்தத்துக்கு முண்டு கொடுத்தவை என்பது குறிப்பிடத்தக்கது. அந்த விதத்தில் இந்த அமைப்புக்களுக்கு எதிராக தடைவிதிக்கும் சாட்டில் பொதுஜனமுன்னணியின் தடை உண்மையில் வடமாகாண பொதுஜனங்களின் அரசியல் செயற்பாட்டுக்கு எதிராகவே விதிக்கப்படுகின்றது.

# பானி விஜய சிறீவர்த்தனா மேலான தாக்குதலைக் கண்டனம் செய்!

புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் பண்டாரவளை அமைப்பாளரும் இந்தப் பிரதேசத்தில் ஒரு மதிப்பிற்குரிய ஆசிரியருமான தோழர் பானி விஜயசிறீவர்த்தனா யூலை மாதம் 8ம் திகதி பாடசாலை வாசலில் வைத்து ஒரு குழு மாணவர்களால் தாக்கப்பட்டுள்ளார். இந்த தாக்குதல் பாசிச ஜே.வி.பி. யினைச் சேர்ந்த ஒரு ஆசிரியரின் தூண்டுதலிலேயே இடம்பெற்றது. பள்ளிக்கூடத்தின் ஏனைய மாணவர்கள் தாக்குதல் தொடங்கியதும் தலையிட்டு தோழர் பானியை பாரிய காயங்களிலிருந்து தப்பவைத்தனர்.

பானி கடந்த பொதுத் தேர்தலில் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் சார்பில் போட்டியிட்டதுடன் இலங்கை ஆசிரியசங்கத்தின் மாவட்ட செயலாளராக இருந்து இலவசக் கல்வியைப் பாதுகாப்பது தொடர்பாகவும் ஆசிரியர் மாணவர்கள் மேலான தாக்குதலுக்கு எதிராகவும் ஒரு தீர்க்கமான போராட்டத்திற்கு தலைமை தாங்கியதில் இப்பிரதேச தொழிலாள ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் நன்கு அறிமுகமானவராவார்.



தோழர் பானி விஜய சிறீவர்த்தனா.

தோழர் பானி மேலான இந்த தாக்குதல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்தப் பாடசாலையில் மேற்கொண்ட ஒரு பிரச்சாரத்திற்கு பதிலாகவே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இந்தப் பிரச்சாரம் பாடசாலையின் வறிய வசதி குறைந்த மாணவர்கள் மீது மாணவர்பிரதிநிதிகளும் **(Prefects)** கடேற்றுக்களும் உட்பட்ட ஒரு மேல்தட்டு மாணவர்குழு உடல் ரீதியான தாக்குதல்கள் மூலம் நிதி சேகரிப்பதற்கு எதிராக உருவாக்கப்பட்டிருந்தது. அரசாங்கத்தினால் பொறுக்கியெடுக்கப்பட்ட பாடசாலை அதிபர்கள் இந்த வகையான "மாணவர் பிரதிநிதிகளை நிதி சேகரிப்பதற்கு நியமிப்பதன் மூலம் ஏழை மாணவர்கள் மீது அழுத்தங்களைக் கொடுத்து பாடசாலையிலிருந்து விரட்டுவதற்கு பாவிக்கின்றார்கள்.

இந்த மாணவர்தலைகளும் கடேற்றுக்களும் மாணவர்களின் சமூக அரசியல் நடவடிக்கைகளை உளவு பார்ப்பதற்காக பாவிக்கப்படுகின்றார்கள் என்பது மிகவும் சாதாரணமாக அனைவருக்கும் தெரிந்ததொன்றாகும். புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் ஆசிரியர்கள் பெற்றோர் மாணவர்களைக் கொண்ட ஒரு நடவடிக்கைக் குழுவை உருவாக்கக் கோரி துண்டுப்பிரசுரம் விநியோகித்ததுடன் மாணவர்களே தங்களது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான ஜனநாயகஉரிமையையும் கோரியது. இது இலவசக் கல்விக்கு மேல் மக்கள்முன்னணி அரசாங்கம் மேற்கொள்ளும் தாக்குதலிற்கு எதிரான நடவடிக்கைகளின் ஒரு பாகமாகவே மேற்கொள்ளப்பட்டது. புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின்

பிரச்சாரத்திற்கு எதிராக பாடசாலை அதிபரு சார்பு ஆசிரியரும் இணைந்து மக்கள்முன்னணி அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்ற பாசிசச் ஒன்றிணைவதை தெளிவுபடுத்துகின்றது.

தோழர் பானிக்கு மேலான தாக்குதலை கம்யூனிஸ்ட் கழகம் அறிவித்ததைத் தொட நூற்றுக்கணக்கான பெற்றோரும் தாக்குதலில் ஈடுபட்ட மாணவர்கள் பகிரங்க கேட்கவேண்டும் என்ற கோரிக்கைகளைக் தந்திகளை பாடசாலை அதிபருக்கு அனுப்பி

தாக்குதல் செய்த மாணவர்களில் பொலீசாரினால் கைதுசெய்யப்பட்ட பொழுதும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எழுத்தில் பகிரங்க கேட்கும்படி கோரியதை பாடசாலை அ ஜே.வி.பி. ஆசிரியரினதும் ஆலோசனையி நிராகரித்தனர். இதனைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் கழகம் தொர்ச்சியான இந்த த ஈடுபட்ட சக்திகளின் வர்க்கக் தொழிலாளர்-ஒடுக்கப்படும் விளங்கப்படுத்துவதற்கான போராட்

www.padippakam.com

# மெரிக்காவில் சோசலிச சமத்துவக் கட்சியின் உருவாக்கம்

**க்க ரொக்சிசக் கட்சியான தொழிலாளர்கழகம் (Workers League) சோசலிச சமத்துவக் கட்சி என்ற தொழ- வர்க்கத்தின் புதிய கட்சியொன்றினை உருவாக்கியுள்ளது. இந்தக்கட்சி ஏன் என்ன நிலைமைகளில் ாக்கப்பட்டுள்ளது என்பதனை இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது.**

று உலகம் முழுவதும் அமெரிக்காவின் டுத்த தேர்தல் தொடர்பாக சய்திநிறுவனங்கள் விபரிக்கின்றன. தொலைக்காட்சி தொடர்பாளரான புக்கானன் **(Buchanan)** தனது ன செய்கையில் பத்திரிகையாளர்களின் ீழ்ந்துகொண்டிருக்கும் அமெரிக்க அரச- உலக அரசியலில் சக்திவாய்ந்த ின் பொருளாதார தேசியவாதத்தின் விளைவு கவனெமெடுப்பிற்கும் இடையில் ாண்டிருந்தது. அதேவேளை இதன் அமெரிக்க எதிர்ப்பை கிளறிவிடுதலும் அதிகரித்து வந்தது காணக்கூடியதாக

ாரு வரலாற்று ரீதியான முக்கியத்துவம் கிழ்வு தொடர்பாக எந்தவித கவனமும் வில்லை அது அமெரிக்க வர்க்கத்தின் புதிய சோசலிசக்கட்சி ஒன்று பட்டது தொடர்பாகவாகும்.

ற்றவற்றைப்போல அத்லாந்திக் கரையில் அமெரிக்கா தொடர்பானதாகும். அதாவது தொழிலாளர்வர்க்கம் தனது குடும்பத்தைப் இரண்டு மூன்று வேலைக்கு டியுள்ளது தொடர்பானதும் ணக்கான வேலையின்மை வீடின்மை அதிகரித்துவரும் ஏழ்மை வறுமை யும் திட்டமிட்டு முற்றுமுழுதாக கப்படுகின்றது. இலட்சக்கணக்கான தொழிலாளர்வர்க்கம் அரசியல் மேடையில் செய்வதும் தனது குரலை வெளிப்படுத்த ஒரு வரலாற்று முக்கியத்துவமாகும். ஐரோப்பிய உலகத் தொழிலாளர்வர்க்கம் வேண்டும்.

 சமத்துவக்கட்சி என்ற பெயரின் உள்ளேயே னோக்கும் அடங்கியுள்ளது. அமெரிக்காவில் வேறெந்த தொழிற்துறை நாட்டிலும் தோருக்கும் வறுமையில் உள்ளோருக்கும் உள்ள வேறுபாடு இப்படியான அளவில் வில்லை. சமூகத்தின் ஒரு சில வீதமானோர் ல்வந்தர்களாக சமுதாயத்தின் உச்சியில் ல்லாது மொத்த தேசிய சொத்துக்களில் 40 உடைமையாக்கியுள்ளனர். இதற்கு மாறாக பெரும்பான்மையானோர் ஏழ்மையுள் னர். கடந்தவருடங்களில் அமெரிக்க ர்களின் நிகர வருமானம் 23 வீதத்தால் ளது. இது ஒரு நூற்றாண்டில் நிகழும் வீழ்ச்சி த்தில் நிகழ்ந்துள்ளது.

 எல்லாக் கட்சிகளுக்கும் எதிராக சோசலிச கட்சி இந்த சமூக நெருக்கடிக்கான காரணம் தலாளித்துவ அமைப்பில் இருப்பதை ட்டுகின்றது. அவர்கள் இவ் இலாப நெருக்கடியின் அதிகரிப்பு மக்களின் நலன்களுக்கு எதிராக வருவதுடன் இந்த தீர்க்கப்பட வேண்டும் எனவும் கூறுகின்றனர்.

ளித்துவத்தின் இலாப நோக்கங்களுக்கு தொழிலாளவர்க்கத்தின் நலன்களுக்கு கொடுக்கப்படவேண்டும்" என்பதை ாக எமது கட்சி கொண்டிருக்கின்றது. எங்கு தொழிலாளவர்க்கத்தின் நலன்களுக்கு எதிராக நிறுவனங்களும் உலகப் பங்குச்சந்தையும் றதோ அங்கு இந்த இலாப அமைப்புமுறை படவேண்டும்.

அபிவிருத்தியடைந்துள்ள நவீன ட்பமும் பாரிய உற்பத்தி செய்யக்கூடிய அமெரிக்காவில் மட்டுமல்ல உலகம் ம் ஒரு மனிதாபிமான முற்போக்கான சமூக உருவாக்கி ஏழ்மையையும் ன்மையையும் யுத்தத்தினையும் ழிக்க செய்யக்கூடியதாக இருக்கையில் ஒரு சிறுபிரிவினர் இதனை தமது சொந்த ள தேடும் நோக்கில் பயன்படுத்துகின்றனர்."

ணங்களை வாசிக்கும்போது சர்வதேச ர்வர்க்கத்தின் மத்தியில் ஒரு புதிய எழுச்சி நகின்றது என்ற உணர்வே எழுகின்றது. ர்வர்க்கம் உலகம் முழுவதும் எதிர்நோக்கும் சமூக சீரழிவுக்கான நிலைமையை ாட்டுவது அமெரிக்க தொழிலாளவர்க்கத்திற்கு யைக் காட்டுகின்றது.

ாளவர்க்கத்தின் நலன்களை முதலாளித்துவ அமைப்புக்கு கீழ்ப்படுத்த முடியாது என்ற க்கொள்கை சீரழிந்த உத்தியோகபூர்வ ர் அமைப்புக்களின் எதிர்ப்புரட்சிக் களுக்கு முற்றுமுழுதாக எதிரானதாகும்.



*சோசலிச சமத்துவக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ஜெறி வைற் தொழிலாளர் மத்தியில் பிரச்சாரம் செய்கின்றார்*

அமெரிக்காவில் தொழிலாளவர்க்கம் தமது ஆளுமையின் கீழ் சுயமான ஒரு தொழிலாளவர்க்க கட்சியை உருவாக்காத நிலைமைகளின் கீழ் இரண்டு முதலாளித்துவக் கட்சிகளாக ஜனநாயக குடியரசுக் கட்சிகள் அதிகாரத்தை மாறி மாறி பகிர்ந்துகொள்கையில் ஐரோப்பியத் தொழிலாளர்வர்க்கம் தனது 140 வருட அரசியல் போராட்டத்தை திரும்பிப் பார்க்கின்றது. ஆனால் தீர்மானகரமான நிலைமையில் தொழிலாளவர்க்க கட்சிகள் தொழிலாளவர்க்கத்தைக் காட்டிக்கொடுத்து முதலாளித்துவத்தின் பக்கம் சேர்ந்து கொண்டன.

பலபத்து வருடங்களாக சமூகஜனநாயக கட்சியினரும் தொழிற்சங்கத்தினரும் நிரந்தரமான பொருளாதார வளர்ச்சி தொடர்பான கட்டுக்கதைகளை பரப்பியதுடன் கூலியுழைப்பும் மூலதனமும் "சமூகக் கூட்டாளிகள்" என்றும் இருபக்கத்தினரும் சேர்ந்து வாழலாம் என கூறிவந்தனர். ஆனால் இன்று வளர்ச்சிக்குப் பதிலாக பொருளாதாரம் நெருக்கடியினுள் போகையில் அதே சமூகஜனநாயகக் கட்சியினரும் தொழிற்சங்கத்தினரும் இந் நெருக்கடிக்கு தொழிலாளர்வர்க்கத்தினை பலிகொடுத்து முதலாளித்துவத்தை . பாதுகாக்க கோருகின்றனர்.

தொழிலாளவர்க்கத்தின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் என்ற நிலையிலிருந்த தொழிற்சங்கங்கள் இன்று முதலாளித்துவத்தின் கைக்கூலிகளாக மாறியுள்ளதுடன் அரசாங்கங்களின் நலன்களைப் பாதுகாக்கும் அமைப்புகளாகியுள்ளன. அவர்கள் தமது முக்கிய கடமையாக எதனைக் கருதுகின்றார்கள் என்றால் சம்பளவெட்டு வேலைநீக்கம் சமூகநலன்களில் வெட்டு போன்றவற்றிற்கு எதிரான தொழிலாளவர்க்கத்தின் போராட்டங்களை நசுக்குவதிலாகும். சமூகஜனநாயகவாதிகள் இனவாதத்தை கக்குவதன் மூலம் தொழிலாளர்வர்க்கத்தைப் பிரிவடையச் செய்து தொழிலாளர்வர்க்கத்தின் போராட்டங்களை இனவாத தேசியவாத வழியில் இழுத்துச்செல்ல முயல்கின்றனர்.

ஏனைய கட்சிகள் கிழக்குஜேர்மனியின் உடைவின் பின் தோன்றிய **PDS** போன்றவை ஸ்டாலினிசத்தின் ஒடுக்குமுறை அமைப்பை சோசலிசமாக கூறிக்கொண்டு முதலாளித்துவ அமைப்புத்தான் உயிர்வாழும் ஒரு முறை எனக்கூறி தொழிலாளவர்க்கத்தினது போராட்டங்கள் தோல்வியடைந்துள்ளது என கூறிக்கொண்டு முதலாளித்துவ அமைப்பினுள் பிச்சையெடுத்து வாழும் கட்சிகளாக மாறியுள்ளன.

இவ் அரசியல்வாதிகளின் மனமுவந்த சேவைகளுக்கும் முதலாளிகளுக்கான சேவையாளர்களாக மாறியுள்ள இந்நிலைமையின் கீழ் சோசலிச சமத்துவக்கட்சியின் உருவாக்கம் ஒரு சக்திவாய்ந்த தாக்கமாகும். இப்போது உலக முதலாளித்துவத்தின் மத்தியில் எங்கு முக்கிய வங்கிகளும் பல்தேசியநிறுவனங்களும் இருக்கின்றனவோ அங்கு இலாப அமைப்புமுறைக்கு முடிவுகட்டும் தொழிலாளர்வர்க்கத்தை அரசியல் ரீதியாக தயார் செய்யும் கட்சி ஒன்று உருவாகியுள்ளது. இது ஒரு முக்கிய நிகழ்வாகும். இதன்மூலம் சர்வதேச தொழிலாளர்வர்க்கத்தின் வரலாற்றில் புதியபக்கம் ஒன்று எழுதப்படுகின்றது.

அமெரிக்கத் தொழிலாளவர்க்கம் சர்வதேசத் தொழிலாளவர்க்கத்துக்கு ஒரு உந்துசக்தியை கொடுப்பதில் இது முதலாவது தடவையல்ல. வேறு எந்தவொரு நாட்டிலும் வர்க்கப்போராட்டம் ஆரம்பத்திலிருந்தே இப்படியானவொரு தீவிரமான வடிவத்தை எடுக்கவில்லை. எட்டு மணித்தியால வேலை நாளுக்காகவும் சிறுவர்களை வேலைக்கமத்துவதற்கு எதிராகவும் இன்னும் பல பாரிய போராட்டங்களிலும் அமெரிக்கத் தொழிலாளவர்க்கம் மூர்க்கமான தியாகம் மிக்க போராட்டத் தன்மையை காட்டியுள்ளது. சர்வதேச தொழிலாளர் தினமான மே 1 இன் தோற்றத்திற்கான போராட்டத்தில் கடந்த நூற்றாண்டில் உலகம் முழுவதும் தொழிலாளவர்க்கத்தின் பாரிய ஊர்வலங்களின் தோற்றத்திற்கும் , சமூகநலன்களுக்கான நீண்ட இரத்தம் படிந்த வர்க்கப் போராட்டங்களில் அமெரிக்கத் தொழிலாள வர்க்கத்தின் பாத்திரம் மறுக்கப்படமுடியாதது.

30ம் ஆண்டுகளின் சீரழிவுகளின் மத்தியில் ஐரோப்பாவில் நாசிகளின் பயங்கரம் தலையெடுக்கையில் டெற்ரோயிற் சிக்காகோ ஏனைய கைத்தொழில் நகரங்களிலும் போராட்டங்களில் அமெரிக்கத் தொழிலாளவர்க்கம் ஈடுபட்டிருந்தது. கிழமைக்கணக்கான உள்ளிருப்புப் போராட்டங்களில்ஈடுபட்டு போர்க்குணம் மிக்க தொழிற்சங்கங்களை கட்டியெழுப்பினர். பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் ஐரோப்பாவிற்கு வந்து தமது உயிரை தியாகம் செய்தனர்.

யுத்தத்தின் பின்னர் அமெரிக்கா தனது பொருளாதார இராணுவ அரசியல் நிலைமையை உலகின் சக்திவாய்ந்ததாக உறுதிப்படுத்திக்கொண்டது. ஒரு காலத்தில் போராட்டத் தன்மை கொண்ட தொழிற்சங்கங்கள் அரசினதும் நிறுவனங்களினதும் சார்பான அதிகாரத்துவ அமைப்பாக மாறிக்கொண்டது. தொழிற்சங்க நிலையங்கள் அனைத்தும் "அமெரிக்கா முன்னே" **(America First)** என்ற இனவாதக் கோரிக்கையின் ஊற்றிடங்களாகின. பல மில்லியன் டொலர் பெறுமதியான மார்சல் திட்டத்தின் கீழ் அமெரிக்க முதலாளித்துவம் தனது அரசியல் நிலைப்பாட்டை முன்வைத்தது. ஜேர்மனியிலும் அமெரிக்க வடிவில் அமைக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் சந்தைப் பொருளாதாரத்தின் புகழ் பாடத்தொடங்கின.

ஆனால் இவ் அமெரிக்க நூற்றாண்டு நீண்ட காலம் நீடிக்கவில்லை. எழுபதாம் ஆண்டுகளின் ஆரம்பத்திலேயே மீண்டும் அமெரிக்கா தனது ஆதிக்க நிலைமையை இழக்க ஆரம்பித்துவிட்டது. இதிலிருந்து அமெரிக்கத் தொழிலாளவர்க்கம் சம்பளக் குறைப்பு சமூகநலன்களின் மீதான தாக்குதல் போன்றவற்றை எதிர்நோக்கவெண்டி இருந்ததோடு பல போராட்டங்களில் கசப்பான தோல்விகளையும் சந்திக்கவேண்டியிருந்தது. ஐரோப்பாவின் நிலைமையும் இப்படியே இருந்தது. "சமூக கூட்டுழைப்பு" "வர்க்க ஒத்துழைப்பு" என்ற உயர் கோசங்கள் தோல்வியைத் தழுவிக்கொண்டன. பலமாதிரி புகழ்ந்துரைக்கப்பட்ட ஜேர்மன் சமூகநலஅரசு என்பது மூச்சுவிடும் நேரத்தினுள் அழிக்கப்பட்டது. மீண்டும் இராணுவவாதமும் பொலீஸ் அரசும் முன்னணிக்கு வருகின்றது.

முன்னொருபோதும் இல்லாதவாறு அமெரிக்க ஐரோப்பிய தொழிலாளவர்க்கம் இன்று ஒன்றிணைந்துள்ளது. அபிவிருத்தியடைந்துள்ள தொழில்நுட்பமும் சர்வதேசமயமாக்கப்பட்ட உற்பத்தியும் உலக சனத்தொகையினரை மிக உயர்ந்த வாழ்க்கை நிலைமையில் வைத்திருக்கக்கூடிய நிலைமையில் முதலாளித்துவம் இவ்வளர்ச்சியை சமூகத்தின் ஒரு அற்ப தொகையினரின் இலாபத்திற்காக பயன்படுத்திக்கொண்டு நாட்டுக்குநாடு கண்டத்திற்கு கண்டம் தொழிலாளவர்க்கத்தை பிளவுபடுத்தி எதிரெதிராக நிறுத்த முயல்கின்றது.

சோசலிச சமத்துவக் கட்சியின் உருவாக்கம் தொழிலாளவர்க்கத்தின் போராட்டத்தை வழிநடத்துகின்றது. இக்கட்சி தனது முன்னோக்கில் மூன்று அடித்தளமான கொள்கைகளை கொண்டுள்ளது. முதலாவதாக சர்வதேசதொழிலாளவர்க்கத்தின் ஐக்கியம். இதன் அடித்தளத்தில் சகல நாடுகளிலுமுள்ள தொழிலாளவர்க்கத்தின் ஒன்றிணைப்பும் கூட்டு வேலையும் சகலவித தேசியவாதம் இனவாதத்திற்கும் எதிராக போராடுவதும் இதனை சகல போராட்டங்களிலும் அடித்தளமான முக்கியத்துவமாக கொள்ளல்.

இரண்டாவதாக சமூகசமத்துவத்திற்காக போராடுதல். இதன்மூலம் சமுதாயத்தின் பாரம்பரிய முக்கிய முற்போக்கான போராட்டத்தினது பிரதானமான கோரிக்கைகளான சகோதரத்துவமும் சமத்துவமும் என்பதை முன்வைக்கின்றது. தொழிற்சங்கத் தலைமைகளும் அரசியல்வாதிகளும் சந்தையின் தேவைக்கேற்ப சமூகநலன்களை அழிக்கவேண்டும் என்று இடைவிடாது கூறி சகலதும் சந்தையின் தேவைக்கு பலி கொடுக்கவேண்டும் என கூறுகையில் சோசலிசசமத்துவக்கட்சி "சந்தையும் அதன் தொழிற்பாடும் ஒரு குறிப்பிட்ட சமூகவர்க்கத்தின் சொந்த சடத்துவ நலன்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. சந்தை என்ற பெயரில் சிலரின் சொந்த இலாபத்திற்கும் சொத்துக்களுக்குமாக சமுதாயத்தை அழிக்கும் வேட்டை" எனக் குறிப்பிடப்படுகின்றது.

மூன்றாவதாக சோசலிச சமத்துவக்கட்சியின் உருவாக்கம் தொழிலாளவர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்துக்கான போராட்டமாகும். தமது சொந்த கட்சியை கட்டி எழுப்புவதன் மூலமே தொழிலாளவர்க்கம் சமுதாயத்தில் ஒரு சக்திவாய்ந்த வர்க்கம் எனக்காட்டுவதன் மூலம் எதிர்கால அரசியல் வளர்ச்சியுள் தலையீடு செய்யமுடியும்.

புதிதாக உருவாகிய கட்சியென்ற பொழுதிலும் சோசலிச சமத்துவக்கட்சி தனது அரசியல் அனுபவங்களின் அடித்தளத்தில் ஒரு பலம் வாய்ந்த அரசியல் முன்னோக்கை வழங்குகின்றது. 30ம் ஆண்டுகளில் இருந்தே தொழிலாளர்கழகமும் ட்ரொக்சிஸ்டுகளும் சகலவித தேசியவாதத்திற்கும் சந்தர்ப்பவாதத்திற்கும் எதிராக சர்வதேச சோசலிச முன்னோக்கிற்காக போராடியுள்ளனர். முதலாளிகளினதும் அரசினதும் தொழிலாளவர்க்கத்தின் மீதான தாக்குதலுக்கு எதிரான இவர்களின் போராட்டத்தினை எவரும் குறைத்து மதிப்பிடமுடியாது. சோசலிச சமத்துவக்கட்சியின் உருவாக்கத்துடன் தொழிலாளர்கழகத்தினது தத்துவார்த்த ரீதியான போராட்டம் ஒரு உயர்கட்டத்தை அடைகின்றது.

இன்றைய பொருளாதார நிலைமைகள் தொழிலாளவர்க்கத்தை எல்லைகள் கடந்து ஒன்றிணைந்துள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் பிரான்சில் பாரிசிலும் ஏனைய நகரங்களிலும் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் அரசின் சமூக வெட்டுக்களுக்கு எதிராக தெருக்களில் இறங்கியது. தொழிலாளவர்க்கத்தின் பாரிய சக்தியை எடுத்துக்காட்டியது. ஆனால் சகல தீவிர அரசியல் குழுக்கள் அனைத்தும் நாங்கள் தொழிலாளவர்க்கத்தின் நலன்களை பிரதிநிதிப்படுத்தவுமில்லை பிரதிநிதிப்படுத்த விரும்பவுமில்லை என்பதை ஏகோபித்த குரலில் கூறின. இதன்மூலம் தொழிலாளவர்க்கத்தின் போராட்டமும் இயக்கமும் ஒரு தோல்வியை சென்றடைந்தது.

சோசலிச சமத்துவக்கட்சியின் தோற்றத்துடன் இந்த நிலைமை எல்லா இடத்திலும் மாற்றமடைகின்றது. இன்று ஒருகட்சி உரத்தகுரலில் கூறுகின்றது தொழிலாளவர்க்கத்தின் எதிர்வரும் போராட்டங்களை அரசியல் ரீதியாக தலைமைகொடுப்பதற்காக" நாங்கள் தயார்நிலையை அடைகின்றோம் " இது ஒரு முன்னோக்கிய அடியாகும்.

படிப்பகம்